வண்ணக்களஞ்சியப்புலவரின்

# குத்பு நாயகம் ஆய்வுரை

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டாக்டர் மு.அப்துல் கறீம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை

டாக்டர். மு. அப்துல் கரீம் எம்.ஏ., பி.எச்.டி.
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
காதிர் முகைதீன் கல்லூரி
அதிராம்பட்டினம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

## Av. M. Jafferdeen Noorjehan

## Endowment Lecture No. 2

# Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the Book | : | VANNAK KALANJIAP PULAVARIN KUTBUNAYAKAM AYVURAI |
| Author | : | Dr. M. ABDUL KAREEM M.A.Ph.D., Prof. & Head of the Department of Tamil, Khadir Mohideen College Adirampattinam-614 701. |
| Publisher and Copy right | : | International Institute of Tamil Studies, T.T.T.I. Post, Taramani, Madras-600 113. |
| Publication No | : | 129 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | March 1987 |
| Edition | : | First |
| Paper used | : | 15.4 Kg. Mandya Creamwove |
| Size of the book | : | 21 × 14 cms. |
| Printing types used | : | 10 pt. |
| Number of copies | : | 1200 |
| Number of pages | : | Viii+116 |
| Price | : | Rupees fifteen only |
| Printers | | Millath Printers 16, Appu Maistry Street, Madras-600 001. |
| Binding | : | Card Board |
| Artist | : | Nazeem |
| Subject | : | Literary Criticism |

**டாக்டர் அ. நா. பெருமாள்**
*இயக்குநர்,*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*
*தரமணி, சென்னை-600 113*

18-2-1987

# பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகத்தில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் உரிமையுடையது என்ற உறுதியான குறிக்கோளுடன் பல அரிய தமிழ்ப் பணிகளைச் செய்து வருகிறது. இந்நிறுவனத்தில் பல பெரியோர்களின் அரும் கொடைகளைக் கொண்டு, சில அறக் கட்டளைகள் நிறுவப் பட்டுள்ளன. உலகியலடிப்படையிலான வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து சீரிய நோக்கில் தமிழர்களையும் தமிழ்ப் பண்பாட்டையும் மனதில் கொண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அறிஞர் பெருமக்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

வண்ணக் களஞ்சியப் புலவரின் 'குத்பு நாயகம்' ஆய்வுரை டாக்டர் மு. அப்துல்கறீம் அவர்களால் நல்ல முறையில் உருவாக்கப் பெற்றுள்ளது. 'ஏவி. எம். ஜாபர்தீன் நூர்ஜஹான் அறக்கட்டளை'யின் சார்பில் அரிய படைப்பாக இந்நூல் வெளியிடப்படுகிறது. 'வண்ணக் களஞ்சியப்புலவரின்' இலக்கியச் சிந்தனை, சமயச் சிந்தனை ஆகியவற்றைத் தெளிவாகக் கண்டு அரிதாக ஆய்ந்து இந்தப் பொழிவினை ஆசிரியர் நிகழ்த்தியுள்ளார். இதனை நூலாக வெளியிடுவதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமை கொள்கிறது.

நண்பர் திரு. ஹசன் அவர்கள் இந்த நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்துள்ளார். அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது. இத்தகைய நூல்கள் வெளிவர தமிழக அரசின் ஆதரவு, நிறுவனத்துக்கு நல்ல துணையாக நிற்கிறது. இந்நிலையில் இந்நிறுவன ஆதரவாளர்களாக அமைந்திருக்கும் மாண்புமிகு நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் சி. பொன்னையன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் சிலம்புச்செல்வர் அவர்களுக்கும், தாய்மை உணர்வுடன் நிறுவனத்தை நன்கு பேணிக் காத்துவரும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்களுக்கும் எங்கள் அன்பும் நன்றியும் என்றும் உள்ளன. இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்று மகிழும் என்று நம்புகிறோம்.

சென்னை
18-2-87

அன்புடன்,
**அ. நா. பெருமாள்**

# முன்னுரை

வல்ல இறைவனின் வற்றா வளப்பெருங் கருணையால் ஹாஜி ஏவி. எம். ஜாபர்தீன்—நூர்ஜஹான் அறக்கட்டளையின் இரண்டாம் ஆய்வுப் பொழிவினை ஆற்ற வாய்ப்பளித்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், அறக்கட்டளையை நிறுவியோர்க்கும் என் உளம் நிறைந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இவ்வாய்வுப் பொழிவுக்குப் பல்வேறு வகைகளில் உறுதுணையாக விளங்கிய கலைமாமணி கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்கட்கும், எம். செய்யிதுமுகம்மது 'ஹஸன்' அவர்கட்கும் என் நன்றி உரியதாகும்.

1981 முதல் 1985 வரை நான் மேற்கொண்ட டாக்டர் பட்ட ஆய்வுக்குப் பொருளாகிய முகியித்தீன் புராணங்களை ஆய்வுப் பதிப்பாக வெளியிட உதவிய வள்ளல், ஹாஜி ஏவி.எம். ஜாபர்தீன் அவர்களே, மூன்றாவது முத்தமிழ்ப் பெருங்காப்பியமாகிய வண்ணக் களஞ்சியப் புலவரின் 'குத்பு நாயகம், என்னும் முகியித்தீன் புராணத்தையும் ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிட உதவியமைக்கு இங்கு மீண்டும் நன்றி தெரிவிக்க வேண்டியது என் கடமையாகும். அவர்களே அக்காப்பிய ஆய்வுப் பதிப்பின் வாழ்த்துரையில் குறிப்பிட்டிருப்பது போலத் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு அவர்களின் இரண்டு அறக் கொடைகளின் வாயிலாக நூலின் பதிப்பும், ஆய்வுப் பொழிவும் ஆகிய 'இரட்டை அன்பளிப்பு'க் கிடைத்திருக்கிறது. இவ்வாய்வுப் பொழிவினைக் கற்கும் தமிழறிஞர்களும் தமிழன்பர்களும், காப்பியத்தையும் கற்றுக் களிப்பெய்த வேண்டும் என்பது என் வேணவா.

நூற்றுப்பத்து ஆண்டுகளாக மறுபதிப்பின்றி வழக்கொழிந்திருந்த காரணத்தால் வண்ணக் களஞ்சியப் புலவரின் வளஞ்சான்ற இவ்வண்டமிழ்க் காப்பியம், டாக்டர் எம்.எம். உவைஸ் அவர்கள் 1977 ஆம் ஆண்டில் வெளியிட்ட டாக்டர் பட்ட ஆய்வு நூலிலும் பின்னர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அவர்கள் ஆற்றிய 'இஸ்லாம் வளர்த்த தமிழ்' என்ற நூலிலும் மட்டுமே இதுவரை இக்காப்பியம் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றிற்குப் பிறகு வெளிவரும் முழுமையான ஆய்வு நூல் இதுவேயாகும். 'முகியித்தீன் புராணங்கள்—ஓர் ஆய்வு' எனப் பெயரிய எனது டாக்டர்

பட்ட ஆய்வு நூலில் அப்போதைக்கு இக்காப்பியம் அச்சில் வெளிவராத காரணத்தால் இவ்வண்ணத் தமிழ்க்காப்பியத்தை ஓரிரு இடங்களில் ஒப்புமைக்காக மட்டுமே எடுத்துக் காட்டியுள்ளேன். இவ்வழகு தமிழ்க் காப்பியத்தின் முழுமையான ஆய்வு வெளிவர வேண்டும் என ஏங்கி இருந்த எண்ணம் நிறைவு பெறும் வகையில் இவ்வரிய வாய்ப்பு வாய்த்தது.

இந்நூலின் கையெழுத்துப் படியைப் பார்த்துப்பாராட்டிய இந்நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். இவ்வாய்வுரையின் ஆழ்ந்தகன்ற கருத்து வளத்துக்கும் செறிவுக்கும் பெருங்காரணமாக விளங்கிய என் துணைவியார் இ. எஸ். ஹனீபா எம்.ஏ., அவர்கட்கும் நன்றி சொல்வது நல்ல இஸ்லாமிய மரபாகும் என்பதால் கூறி அமைகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன் பதின்மூன்று அறக்கட்டளைகளுள் மூன்றினை இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வுக்கு ஒதுக்கி ஆண்டு தோறும் மூன்று இஸ்லாமிய இலக்கிய ஆய்வுகள் வெளிவருவதற்கு உதவியுள்ளமை இஸ்லாமிய இலக்கிய ஆர்வமுடையோர் அனைவருக்கும் பெருங்களிப்பை உண்டாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூற்களை வழங்கி வண்டமிழை வளர்த்துள்ள இஸ்லாமியப் புலவர்களின் தமிழ்ப் பணி தரணியில் விளங்கித் தோன்ற இந்நிறுவனம் நிகரற்ற முறையில் தொண்டாற்றி வருவது அனைவரும் அறிந்து போற்றுதற்குரியதாகும். இந்நிறுவனத்தின் ஆய்வுப் பணி பல்வேறு வகைகளில் பரந்து வளர்ந்து சிறக்க வாழ்த்துகிறேன்.

அதிராம்பட்டினம்
10-1-87

அன்புடன்,
மு. அப்துல்கரீம்

# உள்ளுறை


| | |
|---|---|
| பதிப்புரை | iii |
| முன்னுரை | iv |
| காப்பியப் புலவர் | 1 |
| காப்பிய நாயகர் | 4 |
| காப்பியப் பாவிகம் | 12 |
| அறைய முடியா அரும்புகழ் | 18 |
| இஸ்லாமியக் கொள்கை விளக்கம் | 43 |
| தமிழ்மரபு | 67 |
| புலமைத்திறன் | 77 |
| அடிக்குறிப்பு | 109 |
| சொல்லகராதி | 113 |

வண்ணக்களஞ்சியப் புலவரின்

# குத்பு நாயகம் : ஓர் ஆய்வு

இயல் ஒன்று

## காப்பியப் புலவர்

இஸ்லாமியத் தமிழ்க் காப்பியக் கவிஞர்களின் பட்டியலில் இடம் பெறுவோருள் மூன்று காப்பியஞ் செய்து தகுதி சான்ற இரண்டாவது இடத்தைத் தமக்கெனப் பெற்ற தகவுடையவர் வண்ணக் களஞ்சியப் புலவர். நான்கு காப்பியஞ் செய்த சிறப்பு சேகுனாப் புலவர்க்குரியது.

வண்ணக் களஞ்சியப் புலவர் மதுரை மீசல் வண்ணக் களஞ்சியப் புலவரென அழைக்கப்படுவர். புலவரே இராஜ நாயகக் காப்பியத்தில் ''மதுரை வாழ் மீசல் வண்ணக் களஞ் சியம்'' (கடவுள் வாழ்த்து-பா. 26) எனவும், குத்பு நாயகத்தில் ''கூடல் வாழ் மீசல் வண்ணக் களஞ்சியம்'' (கடவுள் வாழ்த்து-பா. 33) எனவும், தீன் விளக்கத்தில் ''கூடல் அதிபன்......மீசல் வண்ணக் களஞ்சியம்'' (கடவுள் வாழ்த்து-பா. 28) எனவும் தம்மைக் குறிப்பர். தாம் செய்த மூன்று காப்பியங்களிலுமே தம் மதுரைத் தொடர்பைப் புலவர் மறவாது சுட்டுவது கருதத் தக்கது. புலவர் மதுரையில் ஒரு திருமடத்து ஆதீன கருத் தரிடம் தமிழும் வடமொழியும் கற்றுத் தேர்ந்தார் என அறி கிறோம். இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் மதுரைப் பகுதியில் அடங்கியிருந்தது சென்ற நூற்றாண்டின் தென் னாட்டு வரலாறாகும்.

புலவர் பிறந்த ஊர் முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூர் அருகில் உள்ள மீசல் என்பதாகும்.

குத்பு நாயகக் காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தால் வண்ணக் களஞ்சியப் புலவரின் இயற் பெயர் 'முகம்மது இபுராஹீம்' என அறியப்படுகிறது. ஏறுபடி (ஏர்வாடி)யில் வாழும் இபுராஹீம் வலீயிடத்துப் புலவர் கொண்ட பேரன்பு, அவர் வரலாற்றைத் 'தீன் விளக்கம்' என்னும் காவியமாகச்

செய்தமையால் புலப்படும். இறைநேயர் இபுராஹீமின் திருப்பெயரே புலவருக்குச் சூட்டப் பட்டதும் சிந்திக்கத் தக்கது. மேலும் புலவர் இறைநேயர் இபுராஹீம் வலியுல்லா அவர்களின் வழித் தோன்றல் எனவும் கூறப்படுகிறது. தீன் விளக்கக் காப்பியத்தைப் பாடி முடித்து ஏர்வாடி தருகாவில் அரங்கேற்றம் செய்யச் சென்று பூட்டப்பட்டிருந்த தருகாக் கதவைத் தம் பாட்டால் திறக்கச் செய்து அங்கு காப்பியத்தை அரங்கேற்றியதாகவும் கூறப்படுகிறது.[1]

புலவர் தம் இயற்பெயர் மறைந்து வண்ணக் களஞ்சியம் என்ற புகழ்ப் பெயரே நிலைத்து விட்டமைக்குப் புலவர் தம் வண்ணம் பாடும் திறமே காரணம் எனக் கருதலாம். 'புலவர் கோட்டை' எனக் கருதப்பட்ட நாகூர் வாழ் தமிழ்ப் புலவர் பெருமக்கள் நாகூர் தருகாவில் புலவருக்கு இப்பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள். ஒத்த ஓசை நலம் மிக்க இனிய பாக்களைப் பாடுவதில் புலவர் கொண்டிருந்த நிகரற்ற ஆற்றலுக்கு மூன்று காப்பியங்களும் சான்று பகர்கின்றன.

புலவர் நீண்ட காலம் நாகூரில் வாழ்ந்திருக்கக் கூடும். அக்காலத்தே குத்பு நாயகக் காப்பியத்தை ஆக்கி நாகூர் தருகாவில் அரங்கேற்றினர். (கடவுள் வாழ்த்து-31) பின்னர் 89 ஆம் வயதில் முகவை மாவட்ட இராச சிம்ம மங்கலத்தை அடுத்த தும்பட்டிகா கோட்டை என்னும் சிற்றூரில் மரணம் அடைந்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதாகச் சொல்லப் படுகிறது என எம். ஆர். எம். அப்துற்றஹீம் அவர்கள் குறிப்பிடுவர்.[2]

வண்ணக் களஞ்சியப் புலவருக்கு முன்னர் சேகுனாப் புலவரும் குத்பு நாயகக் காப்பியம் பாடினர். இரு புலவர்க்குமிடையே காப்பியம் பாடுவதில் விளைந்த கடும் போட்டி பூசலாகக்கூட வளர்ந்ததாக அறிகிறோம். இப்போட்டி இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பெருக வழி வகுத்த தென்பர் டாக்டர். எம். எம். உவைஸ்.[3] இப்போட்டி பற்றிய உண்மைகளைப் புலவர் நாயகம் சேகுனாப் புலவர் அவர்களே தம் நிருபச் செய்யுளில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.[4]

இராஜ நாயகம்(1807) குத்பு நாயகம்(1814) தீன் விளக்கம் (1821) ஆகிய மூன்று காப்பியங்களையும் புலவர் பதினைந்தாண்டு கால இடைவெளியில் பாடி முடித்தனர். இராஜ நாயகம் கீழக் கரையிலும், குத்பு நாயகம் நாகூரிலும், தீன் விளக்கம் ஏர்வாடியிலும் அரங்கேற்றப் பட்டன.

இம் மூன்று காப்பியங்களன்றி 'அலி பாதுஷா நாடகம்' என்ற நாடக நூலையும், 'சீறா வண்ணம்' முதலாகப் பல வண்ண நூல்களையும் புலவர் செய்துள்ளனர்.

புலவரின் இராஜ நாயகக் காப்பியமும் (நாச்சி குளத்தார் பதிப்பு) தீன் விளக்கமும் (மு. செய்யிது முஹம்மது 'ஹஸன்' பதிப்பு) அண்மையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. எஞ்சிய குத்பு நாயகமும் இப்போது பதிப்பிக்கப் பெற்றுப் புலவரின் மூன்று காப்பியங்களுமே மறுபதிப்புக் கண்டு விட்டன.

இயல் இரண்டு

# காப்பிய நாயகர்

**பிறந்த இடமும் ஆண்டும்,**

முகியித்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள் ஈரான் நாட்டில் கஸ்பியன் கடலுக்குத் தெற்கிலுள்ள தபரிஸ்தான் மாநிலத்தில் ஜீலான் என்னும் நகரில் பிறந்தார்கள். இஃது ஈரான் நாட்டின் மிக அழகு வாய்ந்த ஒருபகுதியாக இருந்தது.[5] ஜீலான் என்னும் நகர்ப்புறத்திலுள்ள நீப் என்னும் சிற்றூரில் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. ஜீலான் நகரத்தின் பெயரோடு சேர்த்து, அந்நாட்டு வழக்கப்படி ஆண்டகை 'ஜீலானி' எனக் குறிக்கப் பெற்றூர்கள். வண்ணக் களஞ்சியப் புலவர் ஆண்டகை பிறந்த இடத்தைச் செயிலான் நகர் எனக் குறிப்பர் (82).

நாட்டையும் 'செய்லானி சூழ்நாடு' (76) எனவே குறிப்பர். சேகுனாப் புலவர், பதுறுத்தீன் புலவர், ஐதுறூசு நயினார்ப் புலவர் ஆகிய முகியித்தீன் புராணப் புலவர் மூவருமே தம் நாட்டு, நகரப்படலங்களில் செயிலான்நகர் எனவும் செயிலானி இலங்கிய அல்லது சூழ்ந்த நாடு எனவுமே குறிப்பர். ஈரான் நாடு எனக் குறிக்காது செயிலான் நகரத்தை உடைய நாடு என அனைத்துப் புலவர்களும் குறிப்பது ஆண்டகை பிறந்த மண்ணின் மகிமையில் புலவர் பெருமக்கள் கொண்டிருந்த பேரன்பைப் புலப்படுத்தும். வண்ணக் களஞ்சியப் புலவர் நாட்டுப் படலத்தின் முதற்பாடலில் 'துதி முகம்மது பொன்னாட்டில்' (41) எனத் தொடங்குவர்.

மேலும் நகரப் படலத்தில் முகம்மதர் உதித்த மக்கமாநகர் நிலமகள் தனக்கு வலவிழியெனவும் முகியித்தீன் உதித்த செயிலான் இடவிழியெனவும் பாடுவர். (83) இக்குறிப்புக்கள் வண்ணக் களஞ்சியப் புலவர் உள்ளங்காட்டும் உயர்வுடையன வாகும். நபிகள் நாயகத்தையும் வலிகள் நாயகத்தையும் புலவர் வேறு வேறாகப் பார்க்கவில்லை. நபிகள் நாயகம் இறை மார்க்கத்தை நிலைநாட்டி வளர்த்து நெறிப்படுத்திப் பின்னர் தம் வாரிசாக இருந்து மார்க்கத்திற்கு உயிரீந்து காக்கத் தம் திருப்பெயரர் முகியித்தீன் ஆண்டகையை நியமித்துச் சென்ற காரணத்தால் (206) பாட்டனாரையும் பெயரனாரையும் தொடர்பு படுத்திப் புலவர் போற்றியமை போதரும். அது கருதியே ஆண்டகை பிறந்த நாட்டைத் துதி முகம்மது பிறந்த

பொன்னாடு எனப்பாடுவர். இஸ்லாமிய நோக்கில் நிலைத்த பெருமையுடைய இருநகரங்களாக மக்கப்பதியையும் செயிலான் பதியையும் உரைப்பர். மேலும் முதற்சிறப்புடைய வலது விழியாக மக்கத்தையும் அடுத்த சிறப்புடைய இடது விழியாகச் செயிலானையும் குறிப்பர்.

ஹிஜிரி 471ல், றமலான் மாத முதல் நாள் இரவில் ஆண்டகை பிறந்தார்கள் எனப் புலவர் குறிப்பர். இங்ஙனமே வண்ணக் களஞ்சியப்புலவருக்கு முந்திய சேகுனாப் புலவரும் குறிப்பர். (சேகுனா—270) பிந்திய பதுறுத்தீன் புலவர் ஹிஜிரி 470ல் றபியுல் ஆகிர் திங்கள் பதினொன்றாம் நாள் ஆண்டகை பிறந்ததாகக் குறிப்பர். (பதுறுத்தீன்—209).

**ஆண்டகை முன்னோர் வழிமுறை:**

வண்ணக் களஞ்சியப்புலவர் நபிகள் நாயகம் தொடங்கி ஆண்டகை 14 ஆம் தலைமுறையில் வந்ததாகக் குறிப்பர். பிந்திய பதுறுத்தீன் புலவரும் ஐதுறூசு நயினார்ப் புலவரும் அங்ஙனமே குறிப்பர். ஆனால் முதல் முகியித்தீன் புராணம் பாடிய சேகுனாப் புலவர், ஆண்டகையின் தந்தையாரின் நீண்ட பெயரை இருவர் பெயராகக் கருதி மயங்கி, ஒரு தலை முறையை அதிகப் படுத்திக் காட்டுவர்.

ஆண்டகையின் முன்னோர் மிக உயர்ந்த தவவாழ்வும் இஸ்லாமிய நற்பண்புகளும் வாய்க்கப் பெற்றிருந்தார்கள் என்பதை அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் முகியித்தீன் புராணப் புலவர்களும் ஒரு சேரப் பாராட்டுகின்றனர். வண்ணக்களஞ்சியப் புலவரின் மரபியற்படலம் ஆண்டகை முன்னோர்களின் பெரும் பண்புகளைச் சுருக்கமாக மொழி கின்றது. ஆகவே மரபியற் படலத்தில் ஐந்து அரிய பாடல் களே அமைந்துள்ளன. பிறபுலவர் அனைவரும் மிகுதியாகப் பாடல்கள் பாடியுள்ளனர். ஐதுறூசு நயினார் தம் நவமணி மாலையில் முந்நூறுக்கும் மேற்பட்ட பாடல்களில் முன்னோர் புகழை விரித்துப் பேசுவார்.

வண்ணக்களஞ்சியப் புலவர் சுருக்கமாகப் பாடினும் அரிய இனிய சிறிய சொற்களில் முன்னோர் புகழை முழுமை பெறக் காட்டுவர். நபிகள் நாயகத்தின் திருமகளாரைப் 'பொறை வடிவு' எனவும், பாத்திமாவின் கணவரை 'ஆதி புலி அலி' என்வும், ஹஸனாரைக் 'கருணைவாழ்வு' எனவும் பின்னர் வந்தவர்களை 'வசையறு புகழோர்', 'தவநிலை பெற்றோர்,' என்றெல்லாம் சிறுசிறு தொடர்களில் (103—105) முன்னோர் புகழைப் புலவர் மொழிவர்.

ஆண்டகையின் தந்தையார் அபுசாலிகு, தாயார் பாத்திமா இருவர் புகழையும் மரபியற் படலத்திற்கு அடுத்த அவதாரப் படலத்துப் புலவர் பாராட்டிப் பேசுவார். (109, 110, 111).

**இளமைக் கல்வி :**

செயிலானில் இளமையிலேயே தந்தையை இழந்து, அன்னையின் பாரமரிப்பிலும் அரவணைப்பினும் வாழ்ந்த ஆண்டகை, நான்காம் வயதின் நான்காம் மாதம் நான்காம் நாளில் மறைநூற் கல்விகற்கப் பள்ளியில்சேர்க்கப்பட்டார்கள். அப்போது ஆசிரியராக அபுல்வபா விளங்கியதாக (197) வண்ணக் களஞ்சியப் புலவர் காட்டுவர். ஆதாரச் சிறப்புடைய வரலாற்று நூலில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக அலி இப்னு அக்கீல் என்னும் பெரியார் இருந்ததாகக் கூறப்படுகிறது.

பிற புலவர்களும் தொடக்கப் பள்ளி ஆசிரியராக அபுல்வபா இருந்ததாகப் பாடவில்லை. வண்ணக் களஞ்சியப் புலவரே பின்னர் கல்வி நெறிப்படலத்தில், ஆண்டகை தம் பதினெட்டாம் வயதில் பகுதாது சென்றபோது அபுல்வபாவைக்கண்டு ஆசி பெற்றதைப் பாடுகின்றார் (235—248). ஆகவே தொடக்கப் பள்ளியில் அபுல்வபாவிடத்தில் 'பள்ளிக்கு வைத்தனர்' எனப்புலவர் பாடுவது பொருத்தமாக இல்லை.

தொடக்கப்பள்ளியிலேயே ஆண்டகை திருக்குர்ஆன் முழுதும் மனப்பாடம் செய்து 'ஹாபிஸ்' (திருக்குரானை மனனம் செய்தவர்) ஆக விளங்கியது குறிக்கத்தக்கது (198). ஆண்டகை இளமையில் பள்ளி செல்லும் போது, இறையருளால் வானவர்கள் சூழ்ந்து சென்றதும் (200), இறைநேயர் வருவதால் இடம் கொடுங்கள் என மற்ற மாணவர்களை வானவர் வேண்டியதும் (201) இளமையில் விளையாட நினைக்கும் போதெல்லாம் அசரீரி ஒலித்துத் தடுத்ததும் (205) ஆகிய பல நிகழ்ச்சிகளால், இறைவன் ஆண்டகையைத் தடுத்தாட் கொண்டு ஞானவழியில் திருப்பியதாகப் புலவர் தொகுத்துரைப்பார்.

அறபா நாளன்று இரவில் விளையாட்டாக ஆண்டகை ஒரு மாட்டைத் துரத்திச் சென்றபோது, அம்மாடு ஆண்டகையை நோக்கி, இறையேவலையும் தடுத்தாட் கொள்ளும் இறை நாட்டத்தையும் நினைவூட்டிப் பேசியதும் (209, 210), வெருவித்தம் வீட்டின் மேல் தளத்திலிருந்து அறபாவெளிக் காட்சியைக் கண்ட அற்புதமும்(211) புலவரால் குறிக்கபெறும்.

பின்னர் ஆண்டகை, அருமை அன்னையாரிடம் பகுதாது சென்று உயர் கல்வி கற்கும் தம் விருப்பத்தைக் கூறி விடை பெற்றுச் சென்ற நிகழ்ச்சியும் உருக்கமாக உரைக்கப்படுகிறது. (212—218). விடை தந்த அன்னை, என்றும் மெய்மையே நவில உறுதி பூணுமாறு ஆண்டகையிடம் வாக்குறுதி பெற்றதும் புலவரால் பேசப் பெறும் (215, 216).

வாணிகக் குழுவுடன் சேர்ந்து ஜெயிலான் நீங்கிப் பகுதாது போகும் வழியில் திருடர்களைத் திருத்திய அருமையான நிகழ்ச்சி புலவரால் சுருக்கி உரைக்கப்படுகிறது. (220—230)

**பகுதாதில் உயர் கல்வி:**

ஆண்டகை தம் பதினெட்டாம் வயதில் பகுதாது வந்து ஞானியர் மணிமுடியாக விளங்கிய அபுல்வபாவைக் கண்டு, அவர்கள் ஆசியும் வாழ்த்தும் பெற்று, எதிர்காலத்தில் ஞான உலகத் தலைமை ஏற்க இருக்கும் உயர் செய்தியையும் உணர்ந்தனர். (234—248) பின்னர் அங்கு இறை மறைக் கலை (குர்ஆன்—கிராஅத்), இறைமறைக்குப் பொருள் காணும் கலை (தஃப்சீர்), அறபு மொழி இலக்கியக் கலை, இலக்கணக் கலை (நகுவு, சறுபு முதலாயின), நபிகள் நாயகம் பொருள் மொழிக் கலை (ஹதீது), இஸ்லாமியச் சன்மார்க்கச் சட்ட திட்டக் கலை (ஃபிக்ஹு), இஸ்லாமிய ஞானமார்க்கத் தவநெறிக் கலை (தரீகத்) ஆகிய அனைத்துக் கலைகளையும் அபூசாலிகு, செக்கரிய்யா முதலான (249, 250) அவ்வத் துறைப் பேராசிரியர்களிடம் கற்றுத்துறை போனார்.

**இணையிலாப் பெருந்தவம்:**

இஸ்லாமியச் சன்மார்க்கக் கலைகளில் (ஷரிஅத்) கரை கண்ட முகியித்தீன் ஆண்டகை, இஸ்லாமிய ஞானமார்க்கக் கலைகளில் (தரீகத்) ஞான குரு கம்மாது மூலம் தேர்ச்சி பெறத் தொடங்கிப் பசித்தும், தனித்தும், விழித்தும் பல்வேறு காடுகளில் கடுந்தவம் புரிந்தும், நிறைவாக அபூசகீது என்னும் பெரியார் மூலம் ஞான உபதேசம் (நசீகத்) பெற்று, ஞான உலகத் தலைமை பெற்றார்கள். ஆண்டகையின் ஞானத்துறை வரலாற்றை உபதேசப் படலம் (படலம்-12) வகுத்துரைக்கின்றது. தலைமைத் தகுதி பெற்ற பிறகும் ஆண்டகை இருபது நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்பதும் ஒருநாள் இடை விட்டு மீண்டும் தொடர்ந்து நோன்பு நோற்பதுமாக இணையற்ற நோன்புத் தவம் மேற்கொண்டார்கள் (349).

அனைத்துத் தேவைகளையும் நீக்கி, ஈராக் நாட்டு வனங்களில் மொத்தம் இருபத்தைந்தாண்டுகள் இணையிலாப் பெருந்

தவம் மேற்கொண்டார்கள் (350). தொடர்ந்து நாற்பதாண்டு கள் இரவுத் தொழுகைக்குச் செய்யும் தூய்மையோடு தூங்கா திருந்து விடியற் காலத் தொழுகையைத் தொழுதார்கள் (351). பதினைந்தாண்டுகள் தொடர்ந்து இரவுத் தொழுகைக்குப் பிறகு ஒற்றைக் காலில் நின்று திருமறையை ஓரிரவில் ஓதி முடிப் பார்கள். மேலும் நாற்பத்து மூன்று நாட்கள் தொடர்ந்து குடித்தல், உண்ணலின்றி இறை வணக்கத்தில் ஈடுபட்டார்கள் (352).

**ஆன்மிகப் பொழிவுகள்:**

ஞானவுலகத் தலைமையை இறையருளால் எய்திய ஆண்டகை, பகுதாது நகரின் அறபுக் கல்லூரி (மதரசா நிலாமிய்யா)யின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள் (கி.பி. 1127). தொடர்ந்து நாற்பதாண்டுக் காலம் ஆண்டகை நானிலம் போற்றும் நாவலர் பெருமானாக விளங்கி, அகிலம் போற்றும் ஆன்மிக ஆற்றல் நிறைந்த அறப் பொழிவுகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தனர். அப்பொழிவுகள் அனைத்தும் ஆண்டகையின் மாணாக்கர்களால் எழுதப் பெற்று இன்று வரை பாதுகாக்கப் பெற்று அரிய மூன்று ஞானப் பெரு நூல் களில் வடித்து வைக்கப் பெற்றிருக்கின்றன.

**ஆண்டகையின் அவைப் பெருமை:**

ஆண்டகையின் அவையில் செய்கு அலி நபிகள் நாயகத் தைக் கனவில் கண்டதும், ஆண்டகை அதை நனவில் கண்டு மரியாதை செய்ததும், கனவில் நபிகள் நாயகத்தைக் கண்ட செய்கு அலி, ஆண்டகையின் அவைப் பெருமையால் தாம் பெற்ற பேறு அஃது என உரைத்ததும், இது கேட்ட அவை யோருள் எழுவர் அவையிலும் வீட்டிலுமாக உயிர் நீங்கிச் சொர்க்கம் புகுந்ததும், செய்கு அலியும் இவ்வரிய பதவி பெற்ற மையால் உயிர் நீங்கிச் சொர்க்கம் புகுந்ததுமாய நிகழ்ச்சி களைப் பேறோங்கு படலத்தில் புலவர் வரிசை பெறப் பாடுவர் (565—570). சேகுனாப் புலவரும் பதுறுத்தீன் புலவரும் ஆண்ட கையின் அவைப் பெருமையாக, ஞானப் பொழிவு கேட்டுப் பலர் உணர்ச்சிவயப்பட்டு ஓலமிட்டனர்; மயங்கி வீழ்ந்தனர்; சிலர் உயிரும் இழந்தார்கள் எனப் பாடுவர். (சேகுனா-883; பதுறுத்தீன்-3277).

நபிகள் நாயகத்தால் கனவில் ஏவப்பட்டுச் செய்கு அபுல் ஹஸன் தம் தந்தையுடன் ஆண்டகையின் அவை புகுந்தபோது, ஆண்டகையின் அவைப் பெருமைகளை அவர்கள் உரைத்தபடி புலவர் பாடுவர். அவையில் வந்து குழுமியோர் தம்முள்ளத்

தேட்டமும், கூட்டத்தோர் நாட்டமும் அவையிற் கேட்ட அறவுரைகளால் ஏற்பட்ட கொண்டாட்டமுமாக (514) அவை விளங்கியது என்பார்.

ஆண்டகை அவையின் மேல் பறவை பறப்பதுமில்லை, பாடுவதுமில்லை; மாடுகள் முதலான விலங்கினங்கள் கத்துவ தில்லை; காற்றும் அதிர்ந்து வீசுவதில்லை (515) என்பர் புலவர். மேலும் ஆண்டகையின் அறிவுரைகளால் கலைபுலி மான்களும் பகை மறந்ததாகவும், மலைகளும் மண்களும் உருகியதாகவும் புலவர் பாடுவர். (517).

**அவைப் பெருக்கம்:**

ஊனும் உயிரும் உருக அவைப் பெருமை பாடிய வண்ணக் களஞ்சியப் புலவர், அவைப் பெருக்கத்தையும் அருமையுறப் பாடுவார். செய்கு அபுல் காசிம் அவர்கள் உரைத்த செய்தி களின் அடிப்படையில், ஆண்டகையின் தரிசனம் பெற அணி யணியாக விண்ணகத்தும் மண்ணகத்தும் கூடிய கூட்டம் அனந்தம் என்பார். (876) தவமேலோர் பலர் அணியணியாய்ச் சூழ்ந்து சர்வ ஜீவகோடிகள் அனைத்தும் தழைக்க வந்த கருணை வாழ்வே, எமையாட் கொள்ள வந்த வள்ளலே என வாழ்த்தியதாகப் பாடுவார். (874). அவையில் கூடியிருந்த கூட்டத்தின் பெருக்கத்தையும் கூடி நின்றோர் யார் யார் என்ற செய்தியையும் சிறப்புறப் பாடுவர்.

'' சின்களி லனந்தங் கூட்டஞ் சித்தின ரனந்தங் கூட்ட
மின்கதிர் மகுடஞ் சூட்டும் வேந்தர் களனந்தங் கூட்ட
மெங்களி லனந்தங் கூட்ட மிட்டு நின்றிடுவ தெல்லாங்
கண்களி லடங்காக் காட்சிக் காரணக் கூட்டந் தானே''
(877)

**குடும்ப வாழ்க்கை :**

ஆண்டகையின் ஐம்பத்தோராம் வயதில் கி. பி. 1127 ஆண்டில் (ஹிஜிரி 521) நபிகள் நாயகம் ஆண்டகையின் கனவில் தோன்றித் திருமணம் புரிந்து கொள்ளப் பணித்தார்கள். இறைச் சன்மார்க்க அடிப்படையிலும் நபிகள் நாயகத்தின் வழி காட்டலின் படியும் ஆண்டகை இல்லற வாழ்க்கையேற்று நான்கு மனைவியரை மணந்து நாற்பத்தொன்பது மக்களைப் பெற்றார்கள்.

பிறருக்கு வழி காட்டக் கூடிய ஆண்டகையின் நாற்ப தாண்டு மண வாழ்க்கை வரலாற்றைச் சேகுனாப் புலவரைப் போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் பாடாதது பெரு

வியப்பே. பதுறுத்தீன் புலவர் இரு படலங்களில் ஆண்டகை யின் திருமணத்தையும் ஆண்டகையின் மூத்த மகனார் அப்துற் றஜ்ஜாக் போன்றவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் பாடி யுள்ளார்.

நம் புலவர் ஆண்டகையின் அரிய மண வாழ்க்கையைப் பாடாமைக்கு ஒரு சில காரணங்களைக் கூறலாம். தமிழ் மக்களை நோக்கி எழுந்த இக் காப்பியத்தில், ஆண்டகையின் மண வாழ்வைப் பேசுவது அவர்கள் தவ வாழ்வின் மகிமையை மக்கள் மத்தியில் குறைத்துவிடக் கூடும் எனப் புலவர் கருதி இருக்கலாம். தமிழகத்து ஞானிகளும் சித்தர்களும் பெரும் பாலும் மணவாழ்க்கை மேற் கொண்டதில்லை. இல்லறத் துறவைத் தவத்தின் ஒரு கூறாகவே தமிழ்ப் பாமரர் கருதி வருதல் வெளிப் படை. மேலும் ஆண்டகையை இறைவன் தடுத்தாட் கொண்டதும், ஆண்டகை அருந்தவம் ஆற்றியதும், இறையருளால் அற்புதங்கள் ஆற்றியதும் ஆகிய ஒத்த நிகழ்ச்சி களையே புலவர் ஒரே நோக்கில் பாடிச் செல்வர்.

இக் காப்பியப் போக்குக்கும்—காப்பியத்தின் கட்டுக் கோப்புக்கும்—காப்பிய ஒருமைப் பாட்டுக்கும் ஆண்டகையின் மண வாழ்வைப் பேசுவது ஊறு விளைவிக்கலாம் எனவும் புலவர் கருதி இருக்கக் கூடும். ஒரு ஞானி மண வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டே—மக்கள் மத்தியில் இன்ப துன்பங்களை நுகர்ந்து கொண்டே — மக்கள் சமுதாயத்தைத் துறந்து தனியிடம் தேடிப் போகாமலே தலையான தவவாழ்வு வாழ முடியும் என்பது இஸ்லாமிய மெய்ஞ்ஞானக் கொள்கையாகும். இஸ்லாமிய சூஃபி ஞானி களில் மிகப் பெரும்பாலோர் மணவாழ்க்கை மேற்கொண்டவர் களே. ஓரிருவர் மணவாழ்க்கையைத் துறந்தாலும் அஃது இஸ்லாமிய நோக்கில் இல்லை. இஸ்லாமிய நோக்கு மண வாழ்க்கையை வலியுறுத்துகிறது.

இவ்வுண்மையைப் புலவர் தெளிவாக உணர்ந்திருந்தும், ஆண்டகையின் மணவாழ்வு பற்றி ஒரு சிறு குறிப்புக்கூடக் காப்பியத்தில் தராதது இக்காப்பியத்தைக் கற்கும் தமிழ் மக்கள் மனப்போக்குக் கருதியேயாகும் என்பது வெளிப்படை. ஆண்டகையின் தோழர்களாக விளங்கிய பெருஞானிகள் பலர், மண வாழ்வு மேற் கொண்டிருந்த குறிப்புக்களை வழங்கும் புலவர், ஆண்டகையின் மணவாழ்க்கை பற்றி ஒரு குறிப்பும் தராதது புலவர் நோக்கம் பற்றிய நம் கருத்தை வலியுறுத்து வதாகும்.

புலவரின் இவ்வுள்ளப் போக்கை ஒரு எடுத்துக் காட்டால் எளிதில் உணர்த்த முடியும். இளங்கோவடிகள் தம் காப்பியத் தலைவியாகிய கண்ணகியைத் தெய்வநிலைக்குக் காப்பியப் பிற்பகுதியில் உயர்த்தும் நோக்கினர் ஆதலின் காப்பியத் தொடக்க, நடுப்பகுதிகளில் கண்ணகியை அவள் இறுதிநிலைக்கு இணங்க மிகச் சில சொற்களே பேசுபவளாகக் காட்டுவர். காப்பியத் தலைவி பற்றிச் சொல்ல வேண்டிய இன்றியமையாச் செய்திகளையும் பிற பாத்திரங்கள் வழிச் சொல்வதன்றி, உலகியலோடுபட்ட சொற்களையும் செயல்களையும் கண்ணகிக்குச் சாலக் குறைத்துவிடுவர். இளங்கோவடிகள் காப்பிய ஒருமைப்பாடு காக்கவும் காப்பியத் தலைவியின் பிந்திய தெய்வத்தகுதியுடைய உயர் வாழ்வுக்கு ஊறுவரா வண்ணம் முந்திய வாழ்க்கையைப் பேசுவதும் ஆகிய உத்திகளை வண்ணக் களஞ்சியப் புலவரும் போற்றிக் கொண்டுள்ளார் எனக் கருதலாம்.

இயல் மூன்று

# காப்பியப் பாவிகம்

## குத்பு நாயகக் காப்பியத் தகுதி:

வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணம் ஒரு பெருங்காப்பியமாகும். டாக்டர் எம்.எம். உவைஸ் அவர்கள், தம்முடைய இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் பற்றிய ஆய்வில், நம் ஆய்வுக்குரிய காப்பியம் உள்ளிட்ட பன்னிரு காப்பியங்களையும் பெருங் காப்பியத் தகுதியுடையன என நிறுவியுள்ளார். சீவக சிந்தாமணி, பெரிய புராணம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் முதலிய தமிழ்க்காப்பியங்களோடு தாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பன்னிரு தமிழ் இஸ்லாமியக் காப்பியங்களையும் ஒப்பாய்வு செய்து எந்த நோக்கத்தில் ஆய்ந்தாலும் ஒவ்வொரு நோக்கிலும், பிற தமிழ்க் காப்பியங்களோடு இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் ஒப்புடையனவே என உறுதிபட உரைப்பர்.[6] எனது 'முகியித்தீன் புராணங்கள்—ஓர் ஆய்வு' என்னும் டாக்டர் பட்ட ஆய்வேட்டில் வேறுபல நோக்கங்களிலும் இக்கருத்து நிறுவப்பட்டுள்ளது.

இவண் ஒரு சிறு குழப்பம் தெளிவு செய்யப்பட வேண்டும். மு.மு. இஸ்மாயீல்அவர்கள் 'இனிக்கும் இராஜநாயகம்' என்னும் நூலில்[7], ''டாக்டர் ம.மு. உவைஸ் அவர்கள்,.. ............இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் அனைத்தும் சிறு காப்பியங்களாகவே இருக்கின்றன'' என்று கூறுவதாக எடுத்துக்காட்டுகின்றார். இச்செய்தி டாக்டர் உவைஸ் அவர்களின் 'இஸ்லாமியத் தென்றல்' என்ற நூலின் 67ம் பக்கத்தில் இருப்பதாக அடிக்குறிப்பும் தருகின்றார். இங்குக் குறிக்கப்படும் நூல், டாக்டர் உவைஸ் அவர்களால் ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக்கு முன்னர் செய்யப்பட்டது.

இந்நூல் எழுதப்பெற்று ஏறத்தாழ இருபது ஆண்டுகட்குப்பின்னர், டாக்டர். உவைஸ் அவர்கள் இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் அனைத்தும் பெருங்காப்பியங்களே எனத் தம் ஆய்வில் விரிவாக விளக்கித் திரு மு. மு. இஸ்மாயில் அவர்களின் முன்னுரையோடு 1976 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளனர். தாம் முன்னுரை வழங்கிய நூலின் உட்கருத்தை

மு. மு. இஸ்மாயில் அவர்கள் எங்ஙனம் மறந்தார்கள் என்பது விளங்கவில்லை. மேலும் இராஜநாயகக் காப்பியம் பெருங் காப்பியமா சிறு காப்பியமா என்பது பற்றித் தம் கருத்தை வெளியிடாது போவது மேலும் வியப்பளிக்கிறது. இராஜ நாயக நூலைப்படிப்போர் இக்கருத்துப் பற்றிப் பெருங் குழப்பத்திற்காளாகக்கூடும்.

டாக்டர் உவைஸ் அவர்கள், மு. மு இஸ்மாயீல் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளபடி 'இலக்கியத் தென்றல்' நூல் எழுதிய காலத்தில், அப்படி ஒரு கருத்துடையவராக இருந்திருக்கலாம். பின்னர் இராஜநாயகம், குத்புநாயகம் ஆகிய காப்பியங்களைத் தம் டாக்டர் பட்ட ஆய்வு நூலில் பெருங்காப்பியங்களே என வலியுறுத்தி நிறுவிய பிறகு, டாக்டர். உவைஸ் அவர்களின் முந்திய கருத்தை விளக்கம் எதுவுமின்றி மு. மு. இஸ்மாயீல் அவர்கள் குறிப்பிட்டிருப்பதே குழப்பத்திற்குக் காரணமாக அமைகின்றது.

உண்மையில் வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் எத்தகைய ஐயத்திற்கும் இடமின்றிப் பெருங்காப்பியத் தகுதி யுடையது என அறிய வேண்டும். புலவரே, தம் காப்பியத்தின் கடவுள் வாழ்த்துப் படலத்தில் (29,31) தம் நூலைக் 'காவியம், எனக்குறிப்பர். இங்குப் புலவர் காவியம் எனக் குறிப்பது, பெருங் காப்பியத்தையே எனக் கொள்ளவேண்டும். ஏனென்றால் பெருங்காப்பியத்தைக் காப்பியம் என்று குறிப்பதே வழக்கு. சிலம்பையோ, இராமாயணத்தையோ இளங்கோவின் காப்பியம், கம்பரது பெருங்காப்பியம் எனக் குறித்தல் வழக்கன்று.

**ஐம்பெருங்காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களும்**

ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் எனக் குறிக்கப்பெற்ற காப்பியங்களை, ஒன்றிரண்டு தவிரப் பிற வற்றைப் பெருங்காப்பியங்களைச் சிறுகாப்பியங்கள் எனக் கருத்துக் கூறுவாரும், சிறுகாப்பியங்களைப் பெருங்காப்பியங் கள் எனக் கருத்துக் கூறுவாரும் இருக்கக் காண்கிறோம். அனைவரும் பெருங்காப்பியம் என ஒப்பும் இராமாயணம் பெருங்காப்பியப்பட்டியலில் இடம் பெறாமை இங்கு கருதத் தக்கது. பெரிய புராணமும் அப்பட்டியலில் இடம் பெற வில்லை. சிறுகாப்பியமாகக் குறிக்கப்பட்ட சூளாமணி பெருங் காப்பியமே ஆகும் என வாதாடுவர் தெ. பொ. மீ. சோம. இளவரசு அவர்கள் ''ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறு காப்பியம் என்ற தொகுப்பு நிறைவுடைய தொகுப்பன்று; இத் தொகுப்

பினை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் ஆய்வது காப்பிய ஆய்வு ஆகாது'' என்பர்.[8]

பெருங்காப்பியச் சுவை கனிந்த பக்திக் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணம் சிறுகாப்பியம் எனவே கொள்ளத் தக்கது எனக் கி.வா.ஜ. அவர்கள் கருதுகின்றார்.[9] அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருள்களுள் பொருள் இன்பங்களை மிகுதியும் பாடவில்லை என்பதால் பெரிய புரணத்தைப் பெருங்காப்பியம் ஆகாது எனக் கருத்துக் கொண்டால் அனைத்துத் தமிழ்க் காப்பியங்களும் பெருங் காப்பியத் தகுதியை இழக்க வேண்டிய நிலைவரும். மேலும் பொருள் இன்பங்களை மிகுத்துப் பேசி வீடுபேற்றை மிகுதியும் பேசாத காப்பியங்களையும் அங்ஙனம் ஒதுக்க வேண்டிய நிலை வருமல்லவா? இது கருதியே டாக்டர். வ.சுப. மாணிக்கம் அவர்கள் காப்பியத்தைப் ''புறம் போய் ஆராயக்கூடாது. நூல் அளவில் நின்றே திறங்காணவேண்டும்'' எனக் கருத் துரைப்பர்.[10]

மேற்கூறிய விளக்கத்தால் பிறமொழி இலக்கணங்களை யொட்டி யெழுந்த இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்க் காப்பியங்களைப் பெருங்காப்பியம், சிறு காப்பியம் எனப்பகுப்பதில் கருத்தொருப்பாடு முற்றும் இல்லை என்பதும், ஒரு காப்பியத்தைப் புற அளவு கோல்களைக் கொண்டு அளக்காது அக்காப்பியக் கவிஞனின் நோக்கத்தை யும் அக்காப்பியத்தின் போக்கையும் கொண்டு திறனாய வேண்டும்.

வண்ணக் களஞ்சியப் புலவர் தம் புராணத்தை ஐயத்திற் கிடமின்றிக் 'காப்பியம்' எனக் குறித்துக் காட்டியமை முன்னர் கூறப்பட்டது. புலவர் அங்ஙனம் குறித்துக் காட்டியதற்குரிய காரணத்தை யெண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு காப்பியத்தைக் கற்போர், அக் காப்பியத்தைச் செய்த புலவனின் உள்ளக் கிடக்கை என்ன? எந்த ஒரு பொருளை உலகிற் குணர்த்தப் புலவன் விரும்பினான்? எந்தவொரு செய்தி புலவன் காப்பியம் பாடத் தூண்டுகோலாய் அமைந்தது? காப்பியப் புலவனின் உள்ளம் யாது? என உணர முந்த வேண்டும். இவற்றை அறியமுடியாத நிலையில் காப்பியத்தைக் கற்பது என்ன பயன் தரப் போகிறது? காப்பியப் புலவனின் உள்ள மறியாது காப்பியங் கற்பது பயனற்ற கல்வியாகும் என்பதைப் பாரதிப் புலவன் அற்புதமாக உணர்த்திக் காட்டுவான்.

'அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்' எனப் புலவன் உள்ளக் கருத்தறியாமல் காவியம் கற்போரைப் பாரதி இகழ்வர். 'ஆழ்ந்திருக்கும் கவியுளம்' என்ற பாரதியின் சொற்கள் காப்பியப் பாவிகம் என்பதன் நுட்பத்தை முழுமையுற விளக்குவதாகும். வண்ணக் களஞ்சியப் புலவர் தம் புராணத்தைக் காப்பியம் என அறிந்து 'தம் ஆழ்ந்த உள்ளத்தை (காப்பியப் பாவிகம்) இதுவெனத் தெளிந்து காப்பியத்தைக் கற்போர், குறிக்கோள் நோக்கத் தோடு கற்க வேண்டும் என விரும்பினார். ஆகவே 'காவியம் புகன்றேன்' (29) 'காவியம் அரங்கேறியது' (31) எனக் குறிக் கின்றார். புலவர் கருத்துப்படி குத்புநாயகப் பாவிகம் எது வென ஆராய்வோம்.

**காப்பியப் பாவிகம் என்பது யாது?**

''காப்பியம் முழுவதும் தொடர்ந்து தோன்றும் ஒப்பற்ற ஒரு பொருள் பாவிகமாகும்'' என்பது வீர சோழியம் தரும் விளக்கமாகும். [11] அந்நூலின் உரையாசிரியர் பாவிகம் ஒழுங்கு பொருந்திய குணமாம் என்பர். 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' எனக் கூறும் தண்டியலங்கார நூலின் உரை, 'பாவிகம் தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப் படுவதல்லது தனித்து ஒரு பாட்டால் புலப்படாது' என உரைக்கின்றது. [12]

பிற இலக்கண நூல்களும் பாவிகம் என்பது நூலின் திரண்ட பொருளாகும் எனவும், காப்பியத்தின் உள்ளுறைப் பொருளாகும் எனவும் குறிக்கின்றன. இவையெல்லாம் காப் பியப் பாவிகம் வேறு, காப்பிய நீதிகள் வேறு எனத் தெளிவு படுத்தக் காண்கிறோம். காப்பியப் புலவன் மன்பதைக்கு வழி காட்ட நீதிகள் பலவற்றைச் சொல்வான். அவையெல்லாம் பாவிகம் ஆக மாட்டா. பாரதி குறித்தபடி, ஆழ்ந்திருக்கும் கவியுளமே—புலவனைக் காப்பியம் பாடத் தூண்டிய-காப்பியம் முழுதும் நிறைந்து கிடக்கின்ற ஓர் அரிய செய்தி அல்லது குணமே காப்பியப் பாவிகமாகும்.

இச்செய்தியை இவ்வளவு விரிவாக விளக்கியதன் நோக்கம், குழப்பமின்றிக் காப்பியக் கவிஞனின் தலையாய நோக்கத்தை— குறிக்கோளைத் தெளிவாக உணர்ந்துகொண்டு காப்பியம் கற்பதே உண்மையான காப்பியக் கல்வி என்பதை விளக்கவே யாகும். சிலப்பதிகாரப் பாயிரம் அக்காப்பியம் விளக்கிப் போந்த மூன்று உண்மைகளைப் பேசுகின்றது. அவற்றைக் காப்பியப் பாவிகம் என மயங்குவோருண்டு. அவை காப்பியம்

விரிவாகப் பேசும் மூன்று உண்மைகளேயன்றிப் பாவிகம் ஆக மாட்டா.

சிலம்பின் பாவிகம் கண்ணகி புகழே ஆகும். இளங்கோவின் நோக்கம் பல நோக்கங்களில் பலவிடங்களில் வைத்துப் பல பாத்திரங்களின் வாயிலாக மட்டுமின்றித் தெய்வத்தின் வழியாகவும் கூட கண்ணகி புகழ் பாடுவதேயாகும். இதனை இளங்கோ, கவிக் கூற்றாகவே காப்பிய இறுதியில் தெளிவு படுத்துவர்[13]. கண்ணகி புகழே சிலம்பின் பாவிகம் என உணராது, சிலம்பு கற்றவர் நிலை புலம்பத் தக்கதல்லவா? பாயிரங் கூறும் மூன்று உண்மைகளின் மேலாக வேறு பல சிறந்த உண்மைகளும் சிலம்பில் கூறப்பட்டுள்ளன. அச்செய்திகளெல்லாம் கண்ணகி புகழ் பாட இளங்கோ வலியுறுத்தும் துணைச் செய்திகளே தவிர, காப்பியப் பாவிகம் ஆகா. இச்சிந்தனை எல்லாக் காப்பியங்களுக்கும் பொருந்தும்.

'முகியித்தீன் புராணக் காப்பியங்களின் பாவிகம் வாய்மையின் வெற்றியே ஆகும்' என்பர் எஸ்.ஏ. செய்யிது ஹஸன் மௌலானா[14]. இங்கு மௌலானா அவர்கள் காப்பியங் கூறும் நீதியையும் காப்பியப் பாவிகமாக மயங்கிக் கூறுவர். வாய்மையின் வெற்றி போலவே, முகியித்தீன் ஆண்டகையின் வாழ்க்கையில் முயற்சியின் வெற்றி, பொறுமையின் வெற்றி முதலாகப் பலவும் அமைந்து கிடப்பது எல்லா முகியித்தீன் புராணப் புலவர்களாலும் காட்டப்பட்டுள்ளன.

**முகியித்தீன் ஆண்டகை புகழே குத்பு நாயகக் காப்பியப் பாவிகம்:**

வண்ணக் களஞ்சியப் புலவர் தம் குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணத்தில் முகியித்தீன் ஆண்டகையின் அறைய முடியா அரும் புகழை நிறைவாகப் பாட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தையே கொண்டுள்ளார் என்பது தெளிவு. இஸ்லாமியக் கொள்கைகளை விளக்குவதற்காக, தமிழ் மக்களை உளம் பொருந்திக் கற்கத் தூண்டும் வகையில் தமிழ் இலக்கிய மரபுகளைத் தழுவிச் செல்வதற்காக—காப்பியச் சுவைக்காக—கருத்தின்பத்திற்காக—ஓசை நலத்திற்காக—உலகியல் உண்மைகளை உரைப்பதற்காக—மக்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் காட்டுவதற்காகவென மிகப் பல வகைகளில் புலவர் கருத்துக் கூறியிருக்கலாம்.

ஆனால் குத்பு நாயகப் புராணத்தின் பாவிகம்—புலவரின் தலையாய நோக்கம்—புலவரைக் காப்பியஞ் செய்ய ஊக்கிய ஒரு பெருஞ் செய்தி—முகியித்தீன் ஆண்டகையின் முது பெரும் புகழேயாகும். காப்பியஞ் செய்யும் எண்ணம் கருவுற்ற நிலை

யிலேயே—மூல முதல்வனைக் காப்பு வேண்டும் காப்பியத் தொடக்க நிலையிலேயே—தம் காப்பியப் பொருள் முகியித் தீனின் மோனத் தவமே எனவும் (காப்பு-1) தம் காப்பியப் பாக்கள் பாடுவது குத்பு முகியித்தீனின் தலைமையையே (காப்பு-2) எனவும் புலவர் தெளிவுபடுத்தி விடுகிறார். இவ்வுண்மையைக் காப்பியப் பாடல் ஒவ்வொன்றும், தொடர் ஒவ்வொன்றும் மெய்ப்பிக்கக் காண்கிறோம். ஏதாவது ஒரு கோணத்தில் ஆண்டகை புகழ் பாடாத பாடலே காப்பியத்தில் இல்லை எனலாம்.

இயல் நான்கு

# அறைய முடியா அரும்புகழ் :

முகியித்தீன் ஆண்டகையின் அறையமுடியா அரும் புகழ் விண்ணும் மண்ணும் நிறைந்தது; எல்லா உலகும் உறைந்தது எனக்காட்டுவர் புலவர். ஆண்டகை புகழைத் திருவளர் புகழ், (864) என்பர். இறையருளால் நாளும் வளர்கின்ற நற் புகழ் என்பது கருத்து. அத்தகு அரும் புகழ் காலத்தால் நெடுமையுடையது என்பதை 'நீடிய புகழ்சேர் வள்ளல்' (877) எனக்குறித்துக் காட்டுவர். ஊழிகாலம் மட்டும் மாறாது நிலைத்த நெடும் புகழ் ஆண்டகைக்கு உரியது என்பதனைத் 'துலங்கிய வான் புவி நிறையச் சூழ் புகழ்' (1030) எனப்பாடுவர். மேலும் விளங்கிய சீர்த்தி இப்புவி நிறைந்து பல் உலகினும் வளர்ந்து நின்றதே' (1220) என, மண்ணகத்தும் விண்ணகத்தும் உள்ள எல்லா உலகங்களிலும் ஆண்டகைபுகழ் நிறைந்து நின்றது என விளக்குவர். 'விண்புகழ் அப்துல் காதிர்' (886) என்ற குறிப்பும் காண்க. அன்னையின் வயிற்றில் கருவாக இருந்த போதே 'முதிர் புகழ்'(123) பெற்றிருந்ததாகப்பாடுவர், ஆண்டகை மண்ணுலகில் அவதரித்ததைப் பாடும் போது 'மொழியும் எவ்வுலகும் துலங்கு அப்துல் காதிர்' (131) என்பர்.

ஆண்டகையின் புகழ் நிகரற்றது என்பதனைத் தன்னிகரில்லாத் தலைமைப் புகழுக்கு உரியார் என்ற பொருள் தரும் வகையில் பல இடங்களில புலவர் பாடுவார். காப்பியத் தலைவர் தன்னிகரில்லாத் தலைமை பெற்றிருக்க வேண்டும் என்ற காப்பிய இலக்கணத்தைக் கருத்துட் கொண்டு அதனை நிறைவு செய்யும் வகையில் பாடப்பட்டுள்ளமை காணலாம். புலிகட்கு அரசாகிய சிங்கம் போல, ஒலிகட்கு (இறை நேயர்கட்கு) ஏக நாயகர் என்பர் (939), முத்தலத்தினும் நிறைந்த தவத்தின் முதிர்ந்தோரெல்லாம், 'ஆண்டகை போல் எத்தலத்தினும் காண்கிலம்' என ஏத்துவர் (436) என இடத் தலைமை சுட்டுவர். தவத்தின் மேலோர் அனைவரும் அணியணியாய்ச் சூழ்ந்து நின்று 'மேலவர் எவர்க்கும் வேந்தே' என வாழ்த்துவர் (874) எனப் பாடித் தவத்தோரின் தலைமை காட்டுவார்; 'எப் புவனம் மீதும் தழைத்து வான் தடவுஞ் சீர்த்தி' (244) என ஆண்டகையின் அனைத்துலகப் புகழ் அறையப் பெறும்.

'உயர்தவத்தோர் தம்முன் எவர்க்கும் மேலாம் அப்துல் காதிர்' (188) இவரின் மேல் எவரும் உண்டோ? (822) என்ற குறிப்பு, தவத்தின் மேலோர்க் கெல்லாம் தனித் தலைமை காட்டும். மேலும் 'இங்கு வந்துதித்த வள்ளல் இவர்க்கிணை எவருமின்றே' (615) என்ற குறிப்பிலும் ஆண்டகையின் தன்னி கரில்லாத் தலைமை தகவுறக் காட்டப்படும். 'எப்பதியினும் உள்ளோர்க்கு இயல் அதிபதியதான நற்பதி (871) எனப் பகுதாதைக்குறித்து ஆண்டகை உறைகின்றமையால் அதனைத் தலைப்பதியாக்கிக் காட்டினர். 'அவுலியாக்கள் என்பவர்க் கெல்லாம் ஒரு தனியரசு' (884) என்பார். இங்ஙனம் பல்வேறு கோணங்களில் ஆண்டகை புகழ் பேசும் புலவர் ஆண்டகை புகழ் அறைய முடியா அருமையுடையது என்பது தோன்ற, 'அவர் தம் சீர்த்தி சொல்லின் அமைவதாமோ' (880) எனவும் முகியித்தீன் புகழ் முழுவதும் கூற மண்டலத்தெவர் வல்லோரே (885) எனவும் பாடி மேலும் ஆண்டகை புகழைப் பாட இயலாமையைப் புலவர் வெளிப்படுத்துவர்.

**அ. நனிபெரும் புகழின் தனிப்பெரு நிலைகள்:**

**'முகியித்தீன்' பட்டம் பெற்றது:**

வண்ணக் களஞ்சியப் புலவர் பிற முகியித்தீன் புராணப் புலவர்களைப் போலவே ஆண்டகையின் நனிபெரும் புகழின் தனிப்பெரு நிலைகளை நிறைவுறப் பாடுவர். ''முகியித்தீன்'' என்ற ஆண்டகையின் சிறப்புப் பட்டம் இறை நேயர்கள் யாரும் பெறாப் பெருமைக் குரியதாகும். ஆண்டகை காடுகளில் உறைந்து கடுந்தவம் புரிந்து வந்த காலத்தில் ஒருநாள் பகுதாது வந்த போது வழியில் நோயுற்று இளைத்த உடம்போடு கிடந்த முதியவர் ஆண்டகையை நோக்கித் தம்மை நபிகள் நாயகத்தின் 'தீன்' எனக் கூறி பின்னர் ஆண்டகை தம் ''திருமலர்க் கையால் தூக்கித் திருத்தி வைத்து உயிர் ஈய'' (256) இறைவன் ஏவினான் எனக்கூற, அங்ஙனமே ஆண்டகை தூக்கி நிறுத்த இறை மார்க்கம் புத்துயிர் பெற்றது என்ற வரலாற்றைப் புலவர் பாடுவர். முகியித்தீன் என்ற தொடர் 'இறை மார்க்கத்திற்குப் புத்துயிர் ஊட்டியவர்' எனப் பொருள் தரும். நபிகள் நாயகம் நானிலத்து வளக்த்த தீன் பயிர் பின்னர் வாடி வதங்கிய போது, அப்பயிர் செழித்து வளர உயிர் கொடுத்த உத்தமராக ஆண்டகையைப் போற்றும் வண்ணக் களஞ்சியப் புலவர் மிகப் பல விடங்களில் ஆண்டகை யின் இப் பெருமையைப் பாடி மகிழ்வர். 'முகம்மது தீன் உயிர் பெற' (82) முகியித்தீன் ஆண்டகை உதித்தனர் என்பர். மேலும் 'தீன் தனக்கு உயிர் கொடுக்கும் காரணக் கடவுள் முகியித்தீன்' (88), திருநபி...... தீன்பயிர் தழைப்ப (102)

தோன்றியதாதப் பாடுவர். மேலும் மிகப்பல விடங்களில் இச் செய்தியைப் புலவர் பேசுவர். (130, 142, 292, 310.)

**இறைநேயர் தோளில் ஆண்டகைபாதம் :**

இறைநேயர்களின் இணையிலாத் தலைவராக முகியித்தீன் ஆண்டகையை ஆக்கி வைத்த இறைவன், ஆண்டகைக்கு ஒரு பெரும்பேற்றினை நல்கினான். ஆண்டகை தம் திருப்பாதங் களை ஞானியர்களின் தோள்களில் சூட்டவும், எல்லா ஞானியர் களும் மகிழ்ந்து ஆண்டகையின் பாதங்களைத் தம்தோள்களில் சூட்டிக் கொள்ளவும் இறையேவல் பிறந்தது. ஆண்டகையின் புகழ் குறிக்கும் இந்நிகழ்ச்சியையும் ''இறையவனே யேவ......... அவுலியாக்கள் புயங்களில் உபயபாதம் பொற்புறத் தாங் கினாரே'' (1152) எனப்பாடுவர். ஆண்டகை பாதங்களைத் தாங்கப் புயம் கொடுத்தோர் பெற்ற பேறுகளையும் (1153) பாடுவர்: ஆண்டகை தாள்கட்குத் தோள் கொடாதவரின் இறைநேயம் பறிக்கப்பட்ட செய்தியையும் (688,691) பாடுவர். நாகூர்நாதரின் மணிப்புயங்களில் தம் திருப்பாதங்களை ஆண்டகை சூட்டியசெய்தியையும் (632) புலவர் அழகுறப் பாடுவர். இறைநேயர்களின் புயங்களில் ஆண்டகை பாதம் பொருந்திய செய்தி ஆண்டகையின் தனிப்புகழுக்குரிய தாதலின் மிகப்பலவிடங்களில் புலவர் பேசுவர். (82, 107, 154, 417, 798, 1003, 1207, 1208, 1220, 1409,)

இங்கு மற்றொரு சிறப்புச் செய்தியும் சிந்திக்கத் தக்கது. தம்முடைய திருப்பாதங்களை ஞானியர்களின் புயங்களில் தாங்கத் தரும் தகுதியைப் பெற்ற முகியித்தீன் ஆண்டகை, தம் பாட்டனார் நபிகள் நாயகத்தின் நனிதிருப்பாதங்களைத் தம் பொற்புயங்களில் தாங்கியதாகவும் வண்ணக் களஞ்சியப் புலவர் பாடுவர்.

''தம்பத மொலிக டாங்கத் தனியர சிறகு ஙுல்லா
செம்பதந் தமது பைம்பொற் றிருப்புய வரைக டாங்க'' (886)

......விண்புகழ் அப்துல் காதிர் விளங்கியதாக ஆண்டகை

யைப் புலவர் குறிப்பர். இந்நிகழ்ச்சி நபிகள் நாயகம் விண்வெளிப் பயணம் மேற்கொண்ட போது நிகழ்ந்ததாகக் கூறப்படும். வண்ணக்களஞ்சியப் புலவர் இந்நிகழ்ச்சி நடந்த இடத்தையும் காலத்தையும் குறிக்காது, நிகழ்ச்சியை மட்டும் சுட்டுவர். இந்நிகழ்ச்சியை முகியித்தீன் புராணப் புலவர்கள் சுட்டக் காரணம் அனைவராலும் போற்றப் பெற்ற ஆண்டகை இறுதித் தூதர் நபிகள் நாயகத்தின் பால் கொண்டிருந்த

அளவற்ற பணிவையும் அன்பையும் காட்டவேயாகும். இந் நிகழ்ச்சியை மற்றொரு முகியித்தீன் புராணப் புலவராகிய ஐதுறூசு நயினர்ப் புலவர் தம் நவமணி மாலையில், நபிகள் நாயத்தின் நற்றிருப்பாதங்களைச் சுமந்ததை ஆண்டகை பெற்ற பேறாகவே குறித்துப் பாடுவர்.[15]

**பொருவரும் பெருந்தவ நிலை**

தன்னுயிர் தாங்கும் தவநிலையில் தலை நின்று மன்னுயிர் தாங்கும் மகத்துவ நிலை எய்திய முகியித்தீன் ஆண்டகையின் பெருந்தவ வலிமையைப் புலவர் உரிய சிறப்பிடம் தந்து காப்பியம் முழுமையும் கவினுறப் பேசுவர். தவவலிமையின் மொத்த உருவமாக ஆண்டகை விளங்கிய திறத்தை, 'மிஞ்சிய தவத்தோர் ஞான விழி' (21), 'மெஞ்ஞானக் குணநிதி' (102), 'வழுவறு தவத்தினர்க்கோர் அரசு' (131), 'வீறெலாம் பெருகு ஞான வெள்ளம்' (146) 'தவநிலை வளர்க்க வந்த அருள் முகியித்தீன்' (196), தபோதனர்க்குயிரெனும் முகியித்தீன் (308), தவத்தோர் ஞானக் கண்ணின் உட்பார்வையானோர் (861), தவப்பொருள் முகியித்தீன் (972), மெஞ்ஞானக் கண்ணின் உள்மணி (1437), குதுபானோர் மன விழி மணி (1656) எனவெல்லாம் காப்பிய முழுதும் கவினுறக் காட்டுவர். முகியித்தீன் ஆண்டகை பெற்றிருந்த பெருந்தவ நிலையின் பெருமையைக் கலிறு நபி வாயிலாக வண்ணக் களஞ்சியப் புலவர்பாடும் ஆண்டகை புகழ்ப்பாடல் நினைத் தோர்க்கும் படிப்போர்க்கும் நெஞ்சிலும் நாவிலும் இன்பம் சேர்க்கும் இனிமையுடையதாகும். நபிகள் நாயகத்திற்கு முந்திய திருத்தூதர்கள் காலத்திலிருந்து இன்று வாழும் மெய்ஞ் ஞானியர் வரை ஞானத்துறைத் தொடர்பு பூண்டு நிலைத்த வாழ்வைப் பெற்றுள்ள கிலிறு நபியின் வாய்ச்சொற்களாக இப்பாடல் அமைந்திருப்பதும் கருதத் தக்கது. ஞானத்துறைக்கு இறைத் தூதராக விளங்கும் கிலிறு நபி முகியித்தீன் ஆண்டகை யின் ஞானத்தகுதியைப் போற்றுமிடம் இஃது.

''நன்கருள் கருணை யெல்லா ஞானநுண் பொருள்க ளெல்லாம்
பொங்குயர் தவங்க ளெல்லாம் புனிதமென் றிடுவ தெல்லாந்
தங்குமோ ருருவ தாகி முகியித்தீ னெனும்பேர் தாங்கி
யிங்குவந் துதித்த வள்ளலிவர்க்கிணை யெவரு மின்றே'' (615)

ஞானத்துறையின் நுண் பொருள்கள் அனைத்தினும் தவநெறியின் பொங்குயர் துறைகள் அனைத்திலும், இத்துறை களின் கருணை, புனிதம் ஆகிய அனைத்தினும் மொத்த உருவத்தின் பெயர் முகியித்தீன் ஆண்டகை என இங்கு

ஆண்டகை புகழப்படுவார். 'இங்கு வந்துதித்த வள்ளல்' என்ற தொடர்கள் முகியித்தீன் ஆண்டகையின் அவதாரப் பெருமையைக் கம்பன் வழியில் காட்டும் கவினுடையது. இறையிருக்கையில் ஒளி வடிவில் துயின்ற ஆண்டகை 'முகியித்தீன்' எனும் பெயர் தாங்கி மெய்ஞ்ஞானத்துறையின் வள்ளலாக இறையருளால் புவியிலே வந்து உதித்தார்கள் என்பதைப் புலவர் இங்குக் காட்டுவர்.

அன்னை பாத்திமா கருவுற்றதைப் பாடும்போதே வண்ணக் களஞ்சியப் புலவர், தவசிகள் செய்யும் தவமெலாம் ஒருருவெனத் திரண்டு அன்னை வயிற்றில் உற்றார் (113) எனவும், கரு வயிற்றில் வளர்ந்ததைக் குறிக்கும்போது, 'தவமெலாம் கவின் சேர் தோன்றல் உருப்பெற்று வளர்வதே போல் வளரு நாள்' (114) எனவும், ஆண்டகை பிறந்தபோது, 'வழுவறு தவத்தினர்க்கு அரசெனும் பட்டம் பெற ஆண்டகை உதித்தனர்' (131) எனவும் பாடித் தவவுலகத் தலைமைக்குரியவர் இறையருளால் உருவாக்கப் பெறும் திறத்தைப் பிறர்க்கு உரைத்துக் காட்டுவர்.

இங்ஙனம் வண்ணக் களஞ்சியப் புலவர் ஆண்டகையின் அளவறு புகழின் தகையுறு நிலைகளுள் தகுதி சான்ற மூன்றைத் தெரிந்தெடுத்து அவற்றைக் காப்பியம் முழுமையும் பேசுவர். மேலும் முகியித்தீன் பட்டம் பெற்றது, ஞானியர் தோளில் பாதம் சேர்த்தது, தவ ஞானியர் தம் தன்னிகரில்லாத் தலைவராகி உலக குருவாக உயர்ந்து நின்றது ஆகிய இம் மூன்றுமே தனிப் பெரும் புகழின் நனி பெரு நிலைகள் என்ற தம் கருத்தை இரண்டிடங்களில் தொகுத்தும் காட்டுவர். (82, 102).

**ஆ. இறையருளால் ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள்**

முகியித்தீன் புராணக் காப்பியங்களின் பாவிகம் (நோக்கம்) ஆண்டகையின் புகழைப் பாடுவதேயாகும் என்பது முந்திய இயலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆண்டகை புகழுக்குரிய காரணங்களைப் புலவர் பாடியுள்ளபடி கண்டால் முதன்மை பெறுவது ஆண்டகை ஆற்றிய அற்புதங்களே. இஸ்லாமிய நோக்கிலும் மெய்ஞ்ஞான நோக்கிலும் அற்புதங்களுக்கு முதன்மை இல்லை என்பதை மிகத் தெளிவாகத் தெரிந்த முகியித்தீன் புராணப் புலவர் ஞானிகள் தம் காப்பியங்களுள் ஆண்டகை ஆற்றிய அற்புதங்களுக்கு முதன்மையும் தலைமையும் தந்தது சரியா என்ற சிந்தனைக்கு விரிவான சமாதானங்களை இவ்வாய்வாளரின் ''முகியித்தீன் புராணங்கள்—ஓர் ஆய்வு'' என்ற ஆய்வேட்டில் காண்க.

இறை நேயர்களுள் ஆண்டகையே அதிகமான அற்புத நிகழ்ச்சிகளை ஆற்றியுள்ளதாக அனைவரும் உடன் பட்டுள்ளனர். ஆதாரப் பூர்வமான வரலாற்று நூல்களும் இபுனு தைமிய்யா, ஷைகுல் இஸ்லாம் போன்ற மெய்ஞ்ஞானிகளும் ஆண்டகை ஆற்றிய மிகுதியான அற்புதங்களை உடன்பட்டு உரைத்துள்ளனர்.

காப்பியத்தை அகத்தே நுழைந்து ஆராய்ந்து பார்த்தால் காப்பியம் முழுமையும் ஆண்டகையின் காரணப் புகழே பாடப்படுவது காணலாம். 39 படலங்களிலும் ஆண்டகையின் 36 அற்புதங்களை வண்ணக் களஞ்சியப் புலவர் பாடியுள்ளார். சேகுனாப் புலவர் தம் குத்பு நாயகத்தில் ஆண்டகையின் 17 அற்புதங்களைப் பாடுவர். விரிவான காப்பியஞ் செய்த பதுறுத்தீன் புலவர் 72 அற்புதங்களை விரிவாகப் பேசிப் பாடல்களின் இடையே குறிப்பாக எட்டு அற்புதங்களைப் பேசுவர். இவ்வகையில் ஒப்பிட்டு நோக்கினால் பதறுத்தீன் புலவரைப் போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் காப்பிய அளவுக்குத்தக மிகுதியான அற்புதங்களைப் பாடியுளர் என அறிகிறோம், முகியித்தீன் ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள் மிகப் பலவாகும். அவற்றுள் புலவர்கள் தம் காப்பிய அளவுக்குத்தகத் தம் நோக்கில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து பாடுகிறார்கள். ஆகவே முகியத்தீன் புராணங்களின் முடிவில் குறிந்பிட்ட புலவர் பாடிய அளவு முற்றுப்பெற்றது எனக் குறிக்கப்படுகின்றது.

ஆண்டகையின் காரணப் புராணமாகவே தம் காப்பியத்தைப் பாடிய வண்ணக்களஞ்சியப் புலவர் ஆண்டகை ஆற்றிய அற்புதங்களைக் காரணம் (88) புதுமை (123), நவம் (113), அதிசயம் (135), அற்புதம் (149) ஆகிய ஐந்து சொற்களாலும் குறிக்கின்றார். உமறுப் புலவர், சேகுனாப் புலவர், நம் புலவர்க்குப் பின் வந்த பதுறுத்தீன் புலவர், ஐதுறூசு நயினார்ப் புலவர் அனைவரும் இச் சொற்கள் அனைத்தையும் பயன்படுத்துவர். புதுமைக் காரணம் என்ற உமறுப்புலவரின் தொடரைச் சேகுனாப் புலவர் காரணப் புதுமை என மாற்றிக் கூறுவர்.[17] வண்ணக்களஞ்சியப் புலவரும் அதுபோன்றே காரணப் புதுமை என்பர் (330). பின்னர் வந்த பதுறுத்தீன் புலவர் புதுமைக் காரணம் என்ற உமறுவின் தொடரை மாற்றாது ஆள்வர்.[18] வண்ணக் களஞ்சியப் புலவர் 'காரணக் கடல் முகியித்தீன், (88) எனப்பாடி ஆண்டகையைக் காரண நாயகராகவே காட்டுவர். 'காரண விளக்கமென்னும் கதிர்மணி மகுடஞ் சூட்டும்' ஞானியர் அனைவரும் போற்றும்

மலர்ப்பத வள்ளல் (108) எனக்கூறி ஞானியர்களுக்குள் காரண விளக்காக ஆண்டகை விளங்கிய திறங்காட்டுவர். அன்னை வயிற்றில் ஆண்டகை கருவிலிருக்கும் போதே 'புதுமைகள் அனந்தங்கோடி' ஆற்றியதாகவும், அவை 'புகன்றிட அரியதாமால்' (123) எனவும் அற்புதங்களின் அளவின்மையைப்பாடுவர்.மேலும் ஆண்டகை அவதரித்ததைப் பாடும்போது, 'அளவிலாப் புதுமை தழைக்க' (130) முகியித்தீன் உதித்தனர் எனப் பாடுவர். இவையெல்லாம் வண்ணக் களஞ்சியப் புலவரின் காப்பியப் பாவிகம் ஆண்டகையின் காரணப் புகழே எனத் தெளிவு படுத்துவனவாகும்.

**அற்புதங்கள் இறையருளே :**

ஆண்டகை ஆற்றிய அற்புதங்களைப் பாடிச் செல்லும் வண்ணக் களஞ்சியப் புலவர், அற்புதங்கள் அனைத்தும் இறையருளால் ஆற்றப் பெற்றவையே என்பதனைத் தெளிவுறுத்தத் தவறவில்லை. மகன் கடலில் சென்று மறைந்துவிட, அன்னை அழுது முறையிட்ட போது ஞானக் கண்ணால் நோக்கி உண்மை கண்ட ஆண்டகை, இறந்தவரை மீண்டும் தருமாறு இறைவனை நினைந்து அன்பு நிறைந்த உள்ளத்தோடு, இரந்து இரந்து வேண்டியதைப் புலவர் தெளிவு படுத்துவர். (1409). ஆண்டகையின் தோழர் இப்னு அறபி குழந்தைப் பேற்றிற்கு ஆண்டகையிடம் முறையிட்டபோது, விதிப்பலகையில் இறைவன் எழுதாதவற்றைக்கூட ஆண்டகையின் மன்றாட்டால் இறைவன் எழுதி மாற்றுவன் எனக் கூறுவர். தமக்காக மன்றாடித் தமக்கு குழந்தைப்பேற்றை விதிப் பலகையில் எழுதச் செய்யுமாறு வேண்டி நின்றார் எனப் புலவர் பாடுவர். (1013, 1014) 'ஏற்கும் ஆதி இடத்தில் மன்றாடுவீர்' (104) என்ற குறிப்பு ஆண்டகை இறைவனிடம் அழுது மன்றாடித் 'துஆ' இரந்து இரந்து அற்புதங்களை ஆற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார்கள் என்ற உண்மை காட்டும். அபுல் முலப்பருக்காகப் பதினேழு முறை இறைவனிடம் மன்றாடி வேண்டியதைப் பெற்றதும் (படலம் 21) அறியத்தக்கதாகும்.

**ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள்**

(படலங்களில் விரித்துப் பேசப் பட்டவை)'

1. அன்னையின் கருவிலிருந்து வேங்கையாக வெளியே வந்து பூதத்தைக் கொன்றது.
2. கதிரவனை அழைத்துத் தம்மை ஏழு முறை வலஞ்சுற்றச் செய்த அற்புதம்.

3. பகுதாது போகும் வழியில் வாய்மையால் திருடர் கூட்டத்தைத் திருத்தியது.
4. தீனுக்குப் புத்துயிரூட்டி 'முகியித்தீன்' என்ற பட்டம் பெற்றது.
5. பாம்பாக வந்த ஜின்னின் சோதனையில் வென்றது.
6. மன்சூரின் தர்க்க வாத நூலை வேறு நூலாக மாற்றியது.
7. ஆண்டகை அபுல்கபுசின் ஐயம் தீர்த்தது.
8. வகுறம் (அபுல் கைறு) ஆண்டகை அவை சேர்ந்து புதுமைகள் கண்டது.
9. முதல் ஹஜ்ஜுப் பயணத்தில் நிகழ்ந்த அற்புதங்கள்.
10. மதினாவில் நபிகள் நாயகத்தோடு வசனித்தது.
11. அபாபக்கரில் கம்மாமியை ஒறுத்துத் திருத்திய அற்புதம்.
12. அபுல் மஆலியின் மகனுடைய சுரம் போக்கியது.
13. இசுபகான் நகரப் பெண் தலை ஆடையை ஆண்டகை அவையில் எறிந்து, மீண்டும் ஆண்டகை தோளிலிருந்து அதனைப் பெற்றுக் கொண்டதை ஆண்டகை கண்டுரைத்த அற்புதம்.
14. நபிகள் நாயகம் அபுல் ஹஸனலியின் கனவில் தோன்றி அவரை ஆண்டகைபால் ஆற்றுப்படுத்தியது.
15. நபிகள் நாயகமும் அலியாரும் கனவில் வந்து ஆண்டகைக்கு வாயமிழ்து ஊட்டியது.
16. அவையில் நபிகள் நாயகத்தைச் செய்கு அலி கனவில் கண்டதை ஆண்டகை நனவில் கண்டது.
17. மகுறாபில் கறுக்கி தம் புதை குழியில் இருந்தவாறே ஆண்டகையின் ஞான நிலைகளைப் புகழ்ந்து வாழ்த்தியது.
18. செய்குமார் நாட்டங்களை ஆண்டகை நிறைவேற்றியது.
19. செய்கு உதுமானைக் கிலிறு நபிமூலம் தம்பால் அழைத்துக் கொண்டது.
20. அபுல் முலப்பரின் உயிரையும் உடமையையும் காத்தமை.
21. துறவிக்கு உதவி ஓடக் காரனைச் செல்வனாக்கியது.

22. செய்கு அப்துற்றஹ்மான் அனுப்பிய செய்தி வருமுன்னரே அவர் ஐயத்திற்கு விடையனுப்பி, அவர் செருக்ககற்றியது.

23. காபு மலைத் தலைவர் நால்வரும் ஆண்டகை புகழ் உரைத்தது.

24. நபுனான் (லுபுனான்)மலைவாழ் இறை நேயர்கள் ஆண்டகையின் தவ உயர்வையும் வலிமையையும் உரைத்தது.

25. முன்கர் நக்கீர் எனும் வானவர் தடிபறித்து அவருக்கு அறிவுறுத்தியது.

26. கூற்றுவனிடமிருந்து உயிரை மீட்டது.

27. திருடனைக் கையால் அடித்து அவரை இறை நேயராக ஆண்டகை ஆக்கியது.

28. அறபிக்குப் பிள்ளைப் பேறுதவியது.

29. நல்லடியார்களுக்குத் தொல்லை கொடுத்த நசாறாக்களை (கிறித்துவர்களை) இறை மார்க்கத்தில் இணைத்தது.

30. செருக்குற்ற செய்குதனாவின் இறை நேயத்தைப் பறித்துத் தண்டித்தது.

31. குன்ம நோயாளியின் துயரை முன்னரே அறிந்து குதிரைகளை வாங்கிய நிகழ்ச்சி.

32. கடலில் இறந்தவனை மீட்டுத் தந்தது.

33. இறந்தவளை எழுப்பிப் பிள்ளைப்பேறு தந்தது.

34. இறைநெறி பிழைத்த செய்கை உருமாற்றி ஒறுத்தது.

35. பெண் பிள்ளைகளை ஆண்களாக மாற்றி மீட்டும் பெண் பிள்ளைகளாக மாற்றியது.

36. ஆடை நெய்வோன் வாழ்ந்த நாட்டு மன்னனையும் மக்களையும் அந்நகரை இருளிலாழ்த்தித் திருத்தியது.

**ஆறு நோக்கங்கள்:**

வண்ணக் களஞ்சியப்புலவர் பாடியுள்ள அனைத்து அற்புதங்களையும் நுனித்து நோக்கும் போது கீழ்க்கண்ட ஆறுகாரணங்களுக்காக அற்புதங்கள் ஆற்றப்பெற்றுள்ளன என அறிய முடிகிறது. இங்கு 36 என எண்ணப்பட்டுள்ள அற்புதங்கள் படலங்களில் முழுமை பெற்ற நிகழ்ச்சிகளாக விரித்துப் பாடப்பெற்றவையாகும். இவையன்றி, ஞானியர் தோள்களில் இறையேவியபடி மலர்த்தாள் பதித்த அற்புதம் போன்ற பல இங்கு எண்ணப்பெறவில்லை. இந்நிகழ்ச்சியை

மிகப்பல இடங்களில் குறிப்பினும் ஆண்டகையின் இறுதிக்காலக் கட்டத்தில் நிகழ்ந்த இவ்வற்புதத்தை வண்ணக் களஞ்சியப்புலவரும் விரித்துப் பாடவில்லை. வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கும் இவ்வருமை நிகழ்ச்சியைச் சேகுனாப் புலவர் பாடவில்லை பதுறுத்தீன் புலவரும் இந்நிகழ்ச்சி நடந்த கால கட்டம் வரை பாடி, காப்பியத்தை நிறைவு செய்யாமையால், பாடவாய்ப்பில்லை. ஆனால் அனைவரும் இதனைக்குறித்துக் காட்டியுள்ளனர். இங்ஙனம் வண்ணக் களஞ்சியப்புலவர் குறித்துக் காட்டியவற்றை விடுத்து முழுமையாகப் பாடியவற்றை மட்டுமே நோக்கி அற்புதங்கள் ஆறு அடிப்படைக் காரணங்களில் ஆற்றப்பட்டன என ஆய்ந்து முடிவு செய்யப் படுகிறது. இறை நம்பிக்கையில் அடியார்களை உறுதிப்படுத்தவும் (படலம்—13,15,17), இறை நேயம் இறையருளைப் பெற்றுத் தரும் என்பதைத் தெளிவு படுத்தவும் (படலம்—18,19,20,30), தம் தோழர்களின் துயரம் இடையூறுகள் நோய் முதலான துன்பங்களை நீக்கவும் (படலம்—16,34,35,36,38), இறை மார்க்கத்தில் இணைக்கவும் (படலம்—32,39), இறை மார்க்கத்தில் வழுவியோரையும் நபிவழி பிறழ்ந்தோரையும் தண்டிக்கவும் (படலம்—16,37), உள்ளத்தில் செருக்குற்றோரை ஒறுத்து உண்மை உணர்த்தற்கும் (படலம்—33) ஆகிய காரணங்களுக்காக அற்புதங்கள் ஆற்றப்பட்டன என்பதை அறியலாம்.

**புலவர் நாயகமும் வண்ணக் களஞ்சியமும் :**

வண்ணக்களஞ்சியப் புலவர் படலங்களில் விரிவாகப் பேசும் அற்புதங்கள் முப்பத்தாறு ஆகும். புலவர்நாயகம் சேகுனாப்புலவர் பதினேழு அற்புதங்களையே விரிவாகப் பேசுவர். இருவர் காப்பிய அளவையும் கருத்திற் கொண்டு நோக்கினால் வண்ணக் களஞ்சியப் புலவர் மிகுதியான அற்புதங்களைப் பேசியுள்ளமை புலப்படும். பாடல்களின் அளவுப்படி இக்காப்பியத்தின் மூன்றில் இருபங்கே சேகுனாவுடையதாகும். இருவரையும் ஒப்பு நோக்கும் போது ஒரு செய்தி தெளிவாகும். காப்பிய அரங்கேற்ற நாளைக் கொண்டு கணித்தால் நான்காண்டுகள் பின்னர்க் காப்பியஞ் செய்த வண்ணக்களஞ்சியப் புலவர் சேகுனாப் புலவர்தம் காப்பியத்தைக் கண்டாரா என்பதை உறுதியாக உரைக்க இயலவில்லை. எனினும் இரு காப்பியங்களையும் நுனித்து ஆய்ந்தால் சேகுனாவின் காப்பியத்தை வண்ணக் களஞ்சியப் புலவர் கண்டிருக்க வேண்டும் எனத் துணியலாம். சேகுனா விரித்துச் சொன்னவற்றை நம் புலவர்

சுருக்கியும், அவர் கூறாது விடுத்தவற்றை விடுத்தும் பேசுவதே இத்துணிவுக்குக் காரணம் ஆகும்.

சேகுனா ஆறு படங்களில் (7-11,16) தனித்து விரித்துப் பேசிய செய்திகளை வண்ணக்களஞ்சியப் புலவர் ஒருபடலத்தில் (படலம்-8) சுருக்கிப் பேசி விடுவர். சேகுனாவின் முதல் ஆறு படலச் செய்திகளும் ஆண்டகை வரலாறு கூறுவன ஆதலின் வண்ணக்களஞ்சியப் புலவரால் அவற்றை விடுவிக்க இயல வில்லை.

சேகுனா புலவர் கிலிறுநபி பற்றிய செய்திகளைத் தனிப் படலத்துப் பேசுவர் வண்ணக்களஞ்சியப் புலவர் அதனையும் பேசி, வேறொரு தனிப்படலத்திலும் கிலிறுநபி ஆண்டகை தொடர்பு பற்றிய புது செய்திகளைத் தருவர். சேகுனாப் புலவர் இரண்டாங் காண்டத்தில் பதினோரு படலங்களில் பல அற்புதங்களை விரித்துப் பாடுவர். இவற்றில் ஆறு படலச் செய்திகளை (படலங்கள்—20, 21, 22, 24, 25, 27.) வண்ணக் களஞ்சியப் புலவர் பாடாது விடுப்பர். மேலும் சேகுனா பேசாது விடுத்த செய்திகளை விரித்துப் பேசுவார். (படலங்கள்—10, 11, 13, 15, 16, 18, 22, 23, 24, 26—39). இச் செய்தி சேகுனாப் புலவர் பாடாதவற்றையே விரித்துப் பேச வேண்டும் எனப்புலவர் கொண்டிருந்த நோக்கத்தை ஐயமின்றி அறிவிக்கும்.

## இ. இறையருளால் ஆண்டகை பெற்றிருந்த ஆற்றல்கள்

இறையருளால் ஆண்டகை பெற்றிருந்த ஆற்றல்களுள் தலையாயது எல்லாவுலகின் இயற்கைகளையும் நடை முறை களையும் உள்ளது உள்ளபடி அறியும் ஆற்றலாகும். இவ் வாற்றலை ஆண்டகை பெற்றிருந்ததை, 'உலகின் உற்றிடும் உயிர் நினைப்பவையெலாம் உணரும் முகியித்தீன்' (972) எனவும், எலாம் தெரியும் சித்தம் (984) எனவும், நடந்த காரணம் முழுதும் முன்னுணரும் நாயகர் (1142) எனவும், கருத்தெலாம் உணர்பொருவறு புண்ணியப் பொருள் (1514) எனவும் பாடுவர். எங்கு நடக்கும் நிகழ்வுகளையும் தம் ஞானக் கண்ணால் காணும் திறத்தை ஆண்டகை பெற்றிருந்ததை, முன்னர் கடலிற் சென்று கவிழ்ந்து இறந்தவர் தமைத் தம் 'ஞானக்கண்ணால் நோக்கினர்...... இறந்தவை தோற்றிற்றன்றே' (1408) எனப்பாடுவர்.

### பிறர் உள்ளம் உணரும் ஆற்றல் :

உலக நடைமுறைகளை அறியும் ஆற்றலைப் பெற்றிருந் ததைப் போலவே, பிறர் உள்ளத்து நினைவுகளையும் அவர்

உரைக்கு முன்னர் அறியும் ஆற்றலை வல்ல இறைவன் அருளால் ஆண்டகை பெற்றிருந்தார்கள். தமக்கு வல்லவன் வழங்கிய இந்த ஆற்றலைப் பற்றி ஆண்டகையே, தாம் மொழியும் சொற்களெல்லாம் இறையேவியபடியே மொழிவதாகும் (382) எனவும், இறைவனோடு தமக்கு வார்த்தைப்பாடு உண்டென்றும், வல்லவன் கூறப் பணித்ததையே தாம் கூறுவதாகவும், செய்ய ஏவியதையே செய்வதாகவும் (573), இறைத்தூதரின் கட்டுப்பாடு இன்றேல் அனைவரும் உண்ணுவது குடிப்பது செய்வது அனைத்தையும் கண்டு உரைப்பேன் (576) எனவும் பேசுகின்றார்கள்.

தம் தோழர்கள் நடந்த நடப்புக்களைத் தம்மிடம் வந்து கூறும் முன்னர், அவற்றை ஆண்டகை அறிந்திருந்தார்கள்; அவர்களிடம் கூறவும் செய்தார்கள் என்ற உண்மை விளங்கும் பல நிகழ்ச்சிகளைப் புலவர் குறித்துக் காட்டுவர். தோழர் அபுல்கபுசு இபுலீசைக் கனவில் கண்டு கருத்துக் கேட்க வந்ததை ஆண்டகை எடுத்துக் காட்டுவது (373-376), செய்கு அபாபக்கரில் கம்மாமியின் தோழர் முலப்பர் கம்மாமிக்காக மேற்கொண்ட செயல்களைக் கூறு முன்னரே அறிந்து ஆண்டகை உரைத்தது (465-467), செய்கு கம்மாதின் சீடர் அபுல் முலப்பர் வாணிகம் முடித்து மீண்டும் வந்து, பகுதாதில் செய்கு கம்மாதைக் கண்டு பேசி வந்தவற்றை அவர் உரைக்கு முன்னரே ஆண்டகை உரைத்துக் கட்டியது (659, 660), செய்கு கபீபுமுகம்மது காபுமலைத் தலைவர்களைக் கண்டு ஆசி பெற்று ஆண்டகையை வந்தடைந்தபோது, ஆண்டகை நிகழ்ந்தவை அனைத்தையும் கூறியது (860) ஆண்டகை பற்றி அறியாது தவறாக நினைத்துக் குன்ம நோய் கொண்டவரின் துன்பந் தீர்த்த பின்னர், பின் நடக்கப் போவதை முன்னறிந்து அவர் நோய் தீர்ப்பதற்காகவே குதிரைகளை விலைக்கு வாங்கியிருந்ததாக ஆண்டகை கூறுவது(1274, 1275) என வரும் பல இடங்கள் முன்னடந்த நிகழ்வுகளையும் பிறர் உள்ளங்களையும் ஆண்டகை உணரும் ஆற்றல் பெற்றிருந்ததைக் காட்டும்.

**விதிப்பலகை காணும் ஆற்றல்:**

அனைத்துலகத்து அனைத்துச்செயல்களும் இறைவிதிப்பின்படி நிகழும் முன்னரே குறிக்கப் பெற்ற பலகை விதிப்பலகை (லவுகுல் மகுபூல்) என்பதாகும். இவ்விதிப்பலகையைக் கண்டு எதிர் கால நடப்புக்களை அறியும் ஆற்றலை இறையருளால் ஆண்டகை பெற்றிருந்ததை, பிற முகியித்தீன் புராணப் புலவர்களைப் போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் குறித்துக் காட்டுவார்.

அபுல் முலப்பருக்காக ஆண்டகை விதிப்பலகை நோக்கி அவருக்கு வரவிருந்த இடையூறுகளையறிந்து பதினேழு முறை இறைவனை மன்றாடி அவற்றை மாற்றிய நிகழ்ச்சியில் (655) ஆண்டகையின் இவ்வாற்றல் குறித்துக் காட்டப்படும். புலவருக்கு முன்னர் காப்பியஞ் செய்த சேகுனாப் புலவரும் பின்னர் காப்பியஞ் செய்த பதுறுத்தீன் புலவரும் இந்நிகழ்ச்சியை விரித்துப் பாடியுள்ளனர்.[19] தோழர் இப்னு அறபிக்காக விதிப்பலகையை நோக்கி, அவருக்குக் குழந்தைப் பேறின்மையைக் கண்டுரைத்ததனைப் புலவர் காட்டுவர்(1011). அப்போது இப்னு அறபி ஆண்டகையிடம் பேசிய பேச்சில் ஆண்டகை இறைவனிடத்தில் மன்றாடி விதிப்பலகையில் குறிக்கப்பெற்றவற்றை மாற்றும் அருட்பேற்றினைப் பெற்றிருந்ததையும் புலவர் குறித்துக் காட்டுவது அறியத்தக்கதாகும். (1014) இக்குறிப்பு ஆண்டகை இறையருளாலேயே இத்தகு ஆற்றல்களைப் பெற்றிருந்தமையை விளக்கிக் காட்டும்.

**தோழர் துயர் துடைக்கும் ஆற்றல் :**

இறையடியார்கள், தோழர்கள் ஆகியோரின் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் பிள்ளைப்பேறின்றித் துன்புற்றோர் துயரங்களையும் இறையருளால் ஆண்டகை நீக்கிய திறம் மிகப்பலவிடங்களில் புலவரால் காட்டப்படுகிறது. குருடு, செவிடு, முடம், பிணி, மலடு ஆகிய குறைகளையுடையோர் வந்து அல்லல் நீங்கிச் செல்வர் (966, 967). முதிய கிழவனும் கிழவியுங்கூட ஆண்டகை பால் வந்து பிள்ளைப் பேறு பெற்று (978—989) மகிழ்ந்ததும், தோழர் அபுல் மஆலியின் மகன் சுரம் நீங்கியவும் (470, 471) அபாபக்கரில் கம்மாமியின் தாயின் துயர் துடைத்ததும் (449—451) ஆகப் பல நிகழ்ச்சிகள் புவவரால் காட்டப்பட்டுள்ளன.

பிறர் துயர் துடைக்கும் ஆற்றலை இறையருளால் கைவரப் பெற்றிருந்த ஆண்டகை, பிழை புரிந்தோரைக் கடுமையாக ஒறுத்துத் திருத்தும் உறுதியையும் பெற்றிருந்தார்கள். செய்குதனு (செய்குசன்ஹா என்பர் பதுறுத்தீன்)வின் இறை நேயத்துவம் பறிக்கப்பட்ட நிகழ்ச்சியும் (1157—1159), உடல் தூய்மை செய்யும்போது மார்க்க நெறிமுறை பிறழ்ந்தமைக்காக இறை நேயர் ஒருவரைத் தண்டித்த நிகழ்ச்சியும் (1563, 1564) பிழை புரிந்தோரைச் சினந்து ஒறுக்கும் ஆண்டகை இயல்பு காட்டுவன. ஆயினும் அவர்கள் திருந்த பின்னர் அவர்களுக்காக ஆண்டகை, இறைவனை மன்றாடி அவர்களின் பிழைகளைப் பொறுக்க வேண்டுவதும் இறையருளால் அவர்களும் பிழை

பொறுக்கப் பெற்று, உயர்நிலை பெறுவதும் அறியத் தக்க தாகும். (1206—1209, 1598, 1599)

### ஈ. ஆண்டகையின் நற்பண்புகள்

நற்பண்புகளை நிலை நாட்டுதற்கே நானிலத்திற்கு வந்த நபிகள் நாயகம் இறை நம்பிக்கையின் உயிர் நிலையே நற்பண்பு கள்தாம் என நவின்றனர். நற்பண்புகளுக்கு இஸ்லாம் தரும் சிறப்பிடம் மிகப் பெரிதாகும். நபிகள் நாயகத்தை முழுமையும் பின்பற்றி வாழ்ந்த முகியித்தீன் ஆண்டகையும் நற்பண்புகளின் உறைவிடமாக விளங்கினார்கள்.

#### அருளுடைமை:

முகியித்தீன் ஆண்டகையின் நற்பண்புகளில் நாயகமாக விளங்குவது அவர்களின் இரக்கப் பண்பும் அதனோடு தொடர் புடைய ஈகைப் பண்புமாகும். ஆண்டகை அருளின் வடிவமாக வும், கருணையின் உருவமாகவும் விளங்கிப் பிறர் துன்பங்களை யும் துயரங்களையும் போக்குவதில் தலை நின்றமையைப் புலவர் தவவுறக் காட்டுவர். ஆண்டகையைப் புலவர் 'அருள் முகில்' (373) என்பார். 'அருள் அடை கிடந்து வாழ் கண்ணுர்' (656) என்று குறித்து அன்பு, அருள், இரக்கம், ஈகை ஆகிய அனைத்துப் பண்புகளுக்கும் ஆண்டகை உறைவிடமாக விளங்குவது காட்டுவர். மேலும் இப்பண்புகளுக்கெல்லாம் 'கண்' சிறப்பிடமாக விளங்கும் இயல்பையும் வள்ளுவர் வழி நின்று புலவர் காட்டுவர். கருணை பொங்கி (638) அருள்மழை பொழியும் அண்ணல் (640) எனப் பிறர் துன்பந் துடைக்க முந்தும் இயம்பு பேசுவர். கடலிடைத்தியங்குவாரைக் கருணை யால் கரை சேர்க்கும் மரக் கலமாக உதவும் இயல்பினர் (641) என்பார். பொழி தரும் கருணைப் புயல் (724), கருணை பூண்டோர் (659), கருணை நாயகம் (809) என ஆண்டகையின் கருணைப் பண்பு காட்டப்படும். (560, 808, 809)

ஆண்டகை பகுதாதில் கல்வித் தகுதி பெறக் கடுமையாக உழைத்து வாழ்ந்த தொடக்கக் காலத்தில் இருபது நாள் தொடர்ந்து பட்டினி இருந்த பிறகும், அன்னை அன்பொடு அனுப்பியிருந்த சிறிதளவு பொன்னில் ஒரு சிறு பகுதியைத் தமக்காக வைத்துக் கொண்டு எஞ்சியதைக் கானகத்தில் பசித் திருந்த எழுபது இறை நேயர்களுக்குப் பங்கு வைத்துக் கொடுத்துவிட்ட ஈகைப் பண்பைத் தாய் உணவு இடு படலத் தில் புலவர் விரித்துரைப்பர் (படலம்-23). தமக்காக வைத்துக் கொண்ட சிறிதளவு பொன்னையும் கடைத் தெருவில் விற்றுப் பெற்ற பணத்திற்கு உணவுப் பொருள்கள் வாங்கிப் பசியாளர்

களுக்கெல்லாம் புசிக்கக் கொடுத்த பண்பும் புலவரால் புகழ்ந்து பேசப்படுகிறது. இக்கொடைப் பண்பை 'மழையெலாம் பொருவா மலர்க்கரநிதியே' (451) எனப் புலவர் பாராட்டிப் பேசுவர்.

**பொறுமை:**

கல்வி தேடிப் பகுதாதில் வாழ்ந்த காலத்திலும், காடுகளில் கடுந்தவம் செய்த காலத்திலும் ஆண்டகை காட்டிய அளவற்ற பொறுமை உலகம் புகழ்ந்ததொன்றாகும். ஆண்டகையின் பொறுமைப் பண்பை இறைஞானச் செல்வியர் றாபியாவின் நிறையுணர்த்தும் படலத்தில் வண்ணக் களஞ்சியப் புலவர் நிறைவாகப் பேசுகின்றார். றாபியாவின் ஞான நன்னிலையை உணராதோர் பொறுக்க இயலா இழிவான செய்திகளைப் பேசியபோதும் ஆண்டகை 'உளமதில் பொறையாய்' (759) உறைந்த பெருமையைப் புலவர் காட்டுவர். மேலும் கருணை யோடு அவர்களை நோக்கி உரைக்க விரும்புவதை உரைக்கு மாறு கூறிப் பொறுமை காட்டியதையும் (762) அவர்கள் பிழை யுணர்ந்து வருந்தியபோது, இறைவனிடம் அவர்கள் பிழை யினைப் பொறுக்க வேண்டியதையும் (775) புலவர் விரித்துப் பாடுவர்.

ஆண்டகையின் பொறைப் பண்போடு வாய்மைப் பண்பை யும் இணைத்துப் பேசுவர். 'சாற்றுவர் மதுர வாய்மை' (759) என உரைப்பர். ஆண்டகை வாய்மைப் பண்பின் வடிவமாக விளங்கிய திறத்தைப் 'பொய்யா நாவினர்' (813) எனப் புலவர் புகழ்வர். எந்நிலையிலும் பொய்யுரையாது வாய்மையறம் காக்கும் பண்பை அன்னையார் ஆண்டகைக்கு இளமையிலேயே போதித்தார்கள். அப்பண்பைத் தம் வாழ்வில் உயிரெனப் போற்றியதாக ஆண்டகையே தம் பொய்யுரையா நாவால் புகன்றனர். ஆண்டகை போற்றிய வாய்மை யறம் வண்ணக் களஞ்சியப் புலவரால் கல்வி நெறிப் படலத்தில் (225—227) கவினுறப் பேசப்படுகிறது. வாய்மை யறத்தின் வலிமையால் திருடரையும் திருத்திய ஆண்டகையின் அருஞ் செயலைப் பிற முகியித்தீன் புராணப் புலவர்களும் தம் காப்பியங்களில் புகழ்ந்து பேசுவர்.

**உ. ஆண்டகையின் சிறப்புப் பெயர்கள்:**

முகியித்தீன் புராணம் பாடிய பிற இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் போலவே, வண்ணக் களஞ்சியப் புலவரும் காப்பிய நாயகர்களைக் குறிக்கப் பிற தமிழ்க் காப்பியங்களில் ஆளப் பெற்ற தலைமைப் பெயர்கள் பலவற்றைக் குறித்துச் செல்வர்.

அடிகள் (484), ஆண்டவர் (1487), அண்ணல் (238), ஏந்தல் (659( கடவுள் (138), குரிசில் (281), கொண்டல் (253), செம்மல் (254), தோன்றல் (127), வள்ளல் (144) இறைபோன்ற சிறப்புப் பெயர்களைப் புலவர் ஆள்வர். மேலும் அரசர் (137), நாதர் (113), நாயகர் (147), வேந்து (321) போன்ற தலைமைப்பெயர்களைக் குறித்து ஆண்டகையின் ஞானவுலகத் தலைமையில் தாம் கொண்டுள்ள உறுதியைப் புலப்படுத்துவர். மேலும் திகழ் மணித்தீபம் (1519), சத்தலோகமும் புகழ் தருமர் (1528) புடவையிற் காணொணாப் புதுமையங்கடல் (1430), எண்ணிறைதவம் (1431), திருநிதி (1613), அருள் முகில் (373) போன்ற மிகப்பல உள்ளத்தை உருக்கும் உருவகத்தொடர்களால் புகழ்வர்.

இஸ்லாமிய மெய்ஞ்ஞான உலகின் புகழ்ப் பெயர்களாகிய முகியித்தீன் (143), கவுது (356), குதுபு (137), அவுலியா (143), சுல்தான் (143), செய்கு (206), ஒலி (201) ஆகிய பெயர்களாலும் ஆண்டகையைப் புகழ்வர்.

### தமிழிலக்கியத்தில் முகியித்தீன் ஆண்டகையின் செல்வாக்கு

முஸ்லிம் தமிழ்ப்புலவர்களிடையே முகியித்தீன் ஆண்டகை மிகப் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருக்கிறார்கள். அவர்களைப் போற்றிக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முக்கியமான இடத்தைப் பெறுவன காப்பியங்களே என்பது டாக்டர் ம மு. உவைஸ் அவர்கள் கருத்து.[20] இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களில் (ஏறத்தாழப் பதினைந்து) ஆண்டகை புகழ்பாடும் காப்பியங்கள். நான்கு நமக்குக் கிடைத்துள்ளன. ''உலக இலக்கிய வரலாற்றிலேயே ஐம்பதாண்டு காலத்திற்குள் ஒரே காப்பிய நாயகரைப் பற்றி ஐந்து பெருங்காப்பியங்கள் தோன்றியுள்ளதாக வேறு ஒரு வரலாறு குறிக்கப்படமுடியாது.[21]

இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களின் கடவுள் வாழ்த்து அல்லது பாயிரத்தில் எல்லாப் புலவர்களுமே, காப்பியம் எதுவாயினும் முகியித்தீன் ஆண்டகையின் முதுபெரும் புகழைப் பாடத் தவறவில்லை. உமறுப் புலவரும், 'அவுலியா வாய்த் தோன்றிய அனைவரினும் மேலாம் முகியித்தீன்' எனப் பாடுவர்[22] இப்புகழ் மொழிகளை முழுதும் போற்றி வண்ணக் களஞ்சியப் புலவர் தம் இராஜ நாயகக் காப்பியக் கடவுள் வாழ்த்தில் பாடுவர்.[23]

**புலவர் ஆண்டகை பால் கொண்ட அளவற்ற அன்பு**

சேகுனாப் புலவரைப் போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் முகியித்தின் ஆண்டகை இடத்துப் பேரன்பு கொண்டவராவர். புலவர் ஆண்டகை பால் கொண்ட பேரன்பு தனிப் பிரித்துப் பேசும் தகவுடையது என்பதில் ஐயமில்லை. இக்கருத்துக்குக் குதுபுநாயகக் காப்பியத்தின் கடவுள் வாழ்த்துப் படலம் சுரியாகும். இஸ்லாமியத் தமிழ்க் காப்பியப் புலவர்கள் அனைவருமே முகியித்தீன் ஆண்டகையின் திருவடிகளைச் சிரத்திலும் தோளிலும் கருத்திலும் ஏற்றி, புலவர் ஞானியர்களாக விளங்கும் சிறப்பைப் பெற முந்துவர். பிற இஸ்லாமியத் தமிழ்க் காப்பியப் புலவர்கள் ஆண்டகையின் அரும்பதங்களைத் தம் சிரத்திலும் கழுத்திலும் ஏற்றிப்பாடுவர். வண்ணக் களஞ்சியப் புலவரோ முகியித்தீன் அப்பொற் பாதத்தை ''நெஞ்சினும் புயத்து மீதும் நேரத்திரத்தினிலும் ஏற்றி.........சிரத்தினும் இருத்துவேனே'' (21) எனப் பாடுவர். மேலும் அஃது தம் தவத்தின் பேறே எனக் காரணமும் கூறித் தாம் புலவர் ஞானியாக விளங்கும் பெற்றி காட்டுவர். புலவர் ஆண்டகை பாற்கொண்ட அளவிடற்கரிய அன்பு ஓரிடத்துத் தோன்றும். படலம் படலமாகக் காப்பியத்தைப் பாடி வந்த புலவர், நான்காவது படலமாகிய மரபியற் படலத்தைப் பாடி முடித்ததும் ஒரு புத்துணர்வு பெறுகின்றார். எழுது கோலைப் பிடித்த கைகளில் ஒரு நடுக்கம் பிறக்கிறது. ஒவ்வொரு படல முடிவிலும் கடவுள் வாழ்த்து முற்றும், நாட்டுப் படலம் முற்றும் என எழுதி வந்தவர், மரபியற் படலம் முற்றிற்று என எழுதி முடித்ததும் 'இனி குருக்கள் நாயகம் எம் குலத்தின் நாயகம் உதயஞ் செய்யும் அவதாரப் படலம்' என இங்கு மட்டும் எழுதக் காண்கின்றோம். புலவர் உள்ளங்காணும் ஆவலுடையோருக்கு இஃது ஓர் அருங்களமாகும். இது வரை காப்பிய இலக்கணத்தைக் கருத்திற்கொண்டு காப்பு, கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப் படலம், மரபியற்படலம் பாடிய புலவர்—இவற்றிலும் முழுக்க முழுக்க ஆண்டகையின் புகழையே பாடியிருப்பினும் — இனிக் குதுபுநாயகரின் பிறப்பைப் பாடப் போகிறோம் என்ற உணர்வு தோன்றியதும் மகிழ்ச்சி மேலீட்டால் இங்ஙனம் எழுதுவர். புதிதாக இங்கு மட்டும் எழுதப்பட்ட இச் சொற்களில் ''இனி'' என்ற தொடக்கச் சொல் சிந்திக்கத் தக்கது. 'குருக்கள் நாயகம்' என்றதோடு நிறுத்தாது, 'எம் குலத்தின் நாயகம்' எனக் குறித்தது புலவரின் அளவற்ற அன்பு காட்டுவதாகும். இப் போக்குக் காப்பியம் முழுவதும் தொடர்கின்றது. ஆண்டகை

யைத் தம்மொடு தொடர்பு படுத்தித் தம்முள்ளன்பு தோன்றப் பாடும் போக்குப் பிற புலவர்களிடத்தும் உண்டு. ஆனால் இவ் வகையில் வண்ணக் களஞ்சியப் புலவர் அனைவரையும் விஞ்சி விடக் காண்கிறோம். பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணத்தில் இப்போக்குக் குறைவு. சேகுனாப் புலவர் 'எம் முயிர் அனையவர்.' 'நம்முயிர்க்குத்பு நாயகர்,' 'என்னிருகண் மணி,' எந்தன் சுகத்தின் வாழ்வே[24] என்றெல்லாம் ஆண்டகை பால் தமக்குள்ள அன்பைப் புலப்படுத்துவர். வண்ணக் களஞ்சியப் புலவரோ ஆண்டகை பால் தமக்குள்ள தலையான அன்பு வெளிப்படும் வகையில் தம்மொடு உளப்படுத்தித் தன்மைப் பன்மை நடையில் எம் கோமான், எங்கோ, எமை யாளும் என்ற தொடர்களால் மிகப் பல இடங்களில் பாடுவர். (156. 164, 191, 248, 258, 297, 300, 314, 373, 489, 511, 530, 538, 667, 700, 821, 852. 859, 1442). 'அண்ணலே அப்துல் காதிர் முகியித்தீனாம் எங்கோவே' (248), 'கோது போக்கி எந்தமை யெலாம் புரந்தருள் கோமான்' (297), 'எங்கள் நாயகர் குதுபு நாயகர்'(667) எனப்பாடும் பல இடங்களில் ஆண்டகைபால் புலவர் கொண்ட பேரன்பு பொங்கிப் புறப்பட்டு வருதல் காண்க.

**ஊ. ஆண்டகை புகழ் தோன்றும் வாயில்கள்:**
**(மூவிடங்களில் ஒன்பது வாயில்கள்):**

இலக்கிய வகைகளில் மணிமுடியாக விளங்கும் காப்பியம், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் செய்தி களைப் பேசக் கவிஞனுக்கு பெரு வாய்ப்பை வழங்குகின்றது. காப்பிய வடிவில் ஆண்டகை புகழ் பேசிய பிற முகியித்தீன் புராணப் புலவரும் மூவிடங்களிலும் ஆண்டகை புகழை முழு மையுறப் பேசுவர்.

**வாயில்கள் :** 1) புலவர் கூற்று (1) தன்மை;

2) பாத்திரங்கள் கூற்று (2—7) முன்னிலை;

3) இறைவன், நபிகள் நாயகம் கூற்று (8,9) படர்க்கை.

காப்பியம் முழுமையும் ஆண்டகையின் புகழே பேசப்படு கின்றதாதலின் இங்ஙனம் தொகை வகை செய்து கொண்டு கற்பதே விளக்கம் தரும். விளக்கக் கல்விக்கு வழி காட்டுவதே திறனாய்வாளன் கடமை.

**படர்க்கை :**

**1) இறைவன் கூற்று :**

சிறப்பு நோக்கி இங்கு முதற் கண் படர்க்கை இடம் பேசப் படுகிறது. முகியித்தீன் ஆண்டகை இறைவனை ஞானக் கண்ணால் காணவும், உரையாடவும் இறையருள் பெற்றிருந் தார்கள் என்பது முன்னர் காட்டப்பட்டது. வானவர் மூலமும் பிற பொருள்களின் வாயிலாகவும் இறைவன் ஆண்டகைக்குச் செய்திகளை அறிவித்ததைப் பிற புலவர்களைப் போலவே, வண்ணக் களஞ்சியப் புலவரும் குறித்துக் காட்டுவர். ஆண் டகை கருவில் இருந்தபோதே இறைவன் ஏவலின்படி கிலிறு நன்னபி வந்து இறை வேதம் கற்பித்த செய்தியும் (114), ஆண்டகை பள்ளிக்குச் சென்றபோது இறைவனின் வான வர்கள் மரியாதை செய்ததும் (194, 195, 201), இறையேவலின் படி நிகழ்ந்தவையாகும். ஆண்டகையின் ஹஜ்ஜு யாத்தி ரையின் போது மக்கப் பதியில் இறைவன் அசரீரி மூலம் ஆண்ட கையின் எதிர்கால உயர்வைக் கூறியருளினான் (413) அபாபக் கரில் கம்மாமிப் படலத்தில் தோழர் முலப்பரின் இறையருட் காட்சியில் இறைவன் ஆண்டகையைப் புகழ்வதும், ஆண்டகை பாற் சென்று பிழை பொறுக்க வேண்டுமாறு கூறுவதும் இறைவன் வாயிலாகத் தோன்றும் ஆண்டகையின் புகழாகும். புதை குழியில் வந்து கணக்குக் கேட்கும் வானவர்களிடம் (முன்கர், நக்கீர்) இறைவனே 'முகியித்தீன்' என்னும் நாமத் தின் மகிமையைப் பேசுவதும் ஆண்டகைபால் மேற் குறித்த வானவர்களை அனுப்பிப் பிழை பொறுக்க வேண்டச் செய் வதும் இறைவாயிலாக வெளிப்படும் புகழின் உச்சமாகும். (907—909). உயிர் வாங்கும் வானவரிடம் (இசுறாயீல்) இறைவன் கூறியதும் அது போன்றதேயாகும். (938) மேற் குறித்த இறைவன் வாயில் வழிப் புகழ் தோன்றும் களத்தை நம் புலவர்க்குப் பின்னர் வந்த பதுறுத்தீன் புலவரோடு ஒப்பிடுதல் பெருநயம் தருவதாகும்.[25]

**2) நபிகள் நாயகத்தின் கூற்று :**

ஆண்டகையின் இளமைப் பருவத்தில் ஜெயிலான் நகரில், நபிகள் நாயகம் நல்லறத் தோழர் நால்வரோடு (205) ஆண்ட கையின் கனவில் வந்து, நபிகள் நாயகத்தின் வழிமுறையினர் அனைவருக்கும் நன்னெறி காட்டுமாறு ஏவி, அனைவர்க்கும் காரணக் குருவாக வாழ்க என வாழ்த்தி, உமைத் தொடர்ந் தோர் அனைவரும் எமைத்தொடர்ந்தோர் ஆவர் எனக் கூறிச் சென்றது நபிகள் நாயகத்தின் வாய் மொழிகளாக அமைந்த ஆண்டகை பற்றிய நனி மிகு புகழ் மொழிகளாகும், (206, 207.)

ஆண்டகையின் புகழ் வெளிப்படும் இடங்களில் சிறப்புமிக்கது நபிகள் நாயகம் ஆண்டகையின் கனவில் தோன்றி ஏழு முறை தம் வாயமுது ஊட்டி வாழ்த்தியதாகும்.

''இழிவற வுலகின் மாந்தர் எவர்களும் இயல்சன் மார்க்க வழியுறத் திருத்தி ஞான வகைபெறப் பொருத்தி வாழ்க'' (550) என்ற நபிகள் நாயகத்தின் வாழ்த்து ஆண்டகையின் அரும் புகழைப் பெருமையுறக் காட்டும் இயல்புடையதாகும். உலக மாந்தர் அனைவரும் இழிவுதரும் அழிவுப்பாதையிலிருந்து விடுபட்டு, இறைச் சன்மார்க்கத்தில் ஈடுபடும் வகையில் உலகைத் திருத்தவும், அச்சன்மார்க்கத்தில் ஞான மார்க்கத்தை வகை பெறப் பொருத்தவும் ஆகிய வளமான பணியை ஆற்றி வாழ்க என நபிகள் நாயகம் வாழ்த்தியதாகப் புலவர் பாடுவர். இறைச் சன்மார்க்க வழி எனப் புலவர் குறிப்பது 'ஷரிஅத்' எனப்படும் மார்க்கச் சட்ட திட்டங்களேயாகும். ஞானவகை எனப்புலவர் குறிப்பது அச்சன்மார்க்க வழியில் தேர்ச்சி பெறு வதற்குப் பயிற்சி தருகின்ற ஞான நெறிமுறைகளே 'தரீகத்' ஆகும். எதிர்காலத்தில் தம் திருப்பெயரர் முகியித்தீன் ஆண்டகை சன்மார்க்கம் ஞானமார்க்கம் என்ற இரண்டிற்கும் ஒரு தலைவராக வாழ்ந்து இஸ்லாத்துக்குப் புத்துயிரூட்டிப் பொலிவேற்ற வேண்டும் என்ற வாழ்த்துப் பிற்காலத்தில் உண்மையாகிய வரலாறு உணர்ந்து இன்புறத்தக்கதாகும்.

நபிகள் நாயகம் என்னும் ஞானப் பட்டினத்தின் தலை வாயிலாக அலியார் அவர்களும் ஆண்டகையின் கனவில் தோன்றி, ஆறுமுறை வாயமுதூட்டிக், ''கண்ணகல் ஞால மெல்லாம் காரணக்குரு வென்றேத்தக்'' (552) கவின் பெற்று வாழ்க என வாழ்த்துவர். நபிகள் நாயகத்தின் வாழ்த்திலும் அலியார் வாழ்த்திலும் ஆண்டகை அரும் புகழின் உயர்நிலை கள் அனைத்தும் புலவரால் தொகுத்துச் சுட்டப்படுவது காண்க.

**தன்மை:**

**3. புலவர் கூற்று**

இறைவன், நபிகள் நாயகம், பிறபாத்திரங்கள் வாயிலாக வெல்லாம் ஆண்டகை புகழ் பாடியும் அடங்காத் தன் ஆவலை நிறைவு செய்ய, இடையிடையே தம் கூற்றாகவும் புலவர் ஆண்டகை புகழ் பாடுவர். காப்பியம் முழுமையும் அன்றிக் கடவுள் வாழ்த்துப்படத்திலுங்கூட ஆண்டகை வாழ்த்தாகத் தவத்தோரின் ஞான விழி எனவும் அரசு எனவும் புகழ்வர். மேலும் ஆண்டகையின் அம்பொற் பாதத்தை நெஞ்சினும்

புயத்தினும் கண்ணிலும் தாங்குவதாகக் கூறி ஒருபடி மேலே சென்று சிரத்திலும் இருத்துகின்ற போது அப்பொற் பாதத்தின் அழகு கண்டு தாமரையும் நாணும் எனப்பாடுவர்.(21)

''மிஞ்சிய தவத்தோர் ஞான விழிகளா யரசாய் நாளு
மஞ்சலி புரியுங் காதிற் முகியித்தீ னம்பொற் பாத
நெஞ்சினும் புயத்து மீது நேத்திரத் தினிலு மேற்றிச்
செஞ்சரோ ருகமு நாணச் சிரத்தினு மிருத்து வேனே.''(21)

புலவர் கூற்றாகப் பாட எங்கெங்கு வாய்ப்புக் கிட்டுமோ அங்கெல்லாம் ஒவ்வொரு முழுப்பாட்டிலும் ஆண்டகை புகழ் புலவரால் பாடப் பெறும்.

''திருவருண் முழுது மொன்றாய்த் திரண்டுரு வெடுத்த தொப்பாய்க்
குருமுகம் மதுதம் பேரர் குதுபுகள் புயத்தில் வைக்கு
முருகலர் முளரிப் பாத முகியித்தீ னப்துல் காதி
றிருநில மதனிற் றோன்று மெழிலவ தாரஞ் சொல்வாம்.''(107)

ஆண்டகையின் அவதாரம் பாடத் தொடங்குவதாக அறிமுகம் செய்யும் முதற்பாட்டில் இறைவன் திருவருள் முழுதும் ஒன்றாகத் திரண்டு உருவெடுத்து ஆண்டகையாக அவதரித்திருப்பதாகக் கூறுவர். மேலும் நபிகள் நாயகத்தின் பெயரர், ஞானிகள் புயத்தில் பாதம் வைத்த முகியித்தீன் எனப் பிற புகழ்களையும் இணைத்துப்பாடுவர். படலச் செய்தி இன்னது எனக் குறிக்கும் வகையிலோ அல்லது பகுதாது நகரில் ஆண்டகை புகழ் பூத்து வாழும் நாளில் எனவோ ஒவ்வொரு படலத்து முதற் பாடலும் ஆண்டகையின் புகழ்ப் பாவாக அமைந்திருப்பதும், அப்பாடல் புலவர் கூற்றாக அமைந்திருப்பதும் அறியத்தக்கதாகும். அபாபக்கரில் கம்மாமிப் படலத்தில் (படலம்-16) பகுதாதில் ஆண்டகை வாழ்ந்திருக்கும் நாளில் என முதற்பாடலைத் தொடங்குவர். அப்பாடலின் முதல் மூன்று அடிகளிலும் ஆண்டகை புகழின் அரும்பெரும் கூறுகளை அடுக்கி உரைப்பர்.

''அருந்தவத் துயிரா யாரணத் தெளிவா யகுமது நபிகுல விளக்காய்
பெரும்பவக் கடலுய்த் திடுங்குபி ரிருளின் பிழம்பகற் றிடுந்தனிக் கதிராய்
திருந்துமற் புதங்கள் விளைத்தருண் முகியித் தீனெனுங் காரணக் கடவுள்
விரிந்தபூ நிழற்றண் டலைபகு தாது மீதுவாழ்ந் திருக்கு மந்நாளில்.'' (438)

தவத்தின் உயிர், வேதத்தின் தெளிவு, அகமது நபி குலவிளக்கு, பவக்கடல் கடக்கும் மரக்கலம், இறைமறுப்பெனும் இருளகற்றிடும் கதிரவன், அற்புதம் விளைவிக்கும் காரணக் கடவுள், அருள் முகியித்தீன் என ஏழு பெருமைகளை, படல முதற்பாட்டில் முழுமையுறப்பாடுவர். இங்ஙனம் பெரும்பாலும் ஒவ்வொரு படலத்தின் முதற் பாடலும் ஆண்டகையின் புகழ்ப் பாடல்களாகவும் புலவர் கூற்றாகவும் அமைந்து கிடக்கின்றன. (படலங்கள்—26-28; 31-39.)

**முன்னிலை—(பாத்திரங்கள் கூற்று)**

**4. கலிறுநபி கூற்று :**

கலிறுநபி வாயிலாகவும் ஆண்டகையின் புகழ்ப் பாடல்களைப் புலவர் நலமுறப் பாடியுள்ளார். செய்கு உதுமான் அவர்களைக் கண்டு ஆண்டகையிடம் செல்ல ஆற்றுப்படுத்தும் கலிறு நபியின் கூற்றாக அமையும் புகழ்ப்பாடல் சொல்லிலும் பொருளிலும் ஓசையிலும் உணர்விலும் உயர்ந்துநிற்கும் ஓர் அரிய பாடலாகும்.

''நன்கருள் கருணையெல்லா ஞானநுண் பொருள்களெல்லாம்
பொங்குயர் தவங்களெல்லாம் புனிதமென் றிடுவ தெல்லாந்
தங்குமோ ருருவ தாகி முகியித்தீ னெனும்பேர் தாங்கி
யிங்குவந் துதித்த வள்ள லிவர்க்கிணையெவரு மின்றே'' (615).

அருள், கருணை, ஞானம், தவம், புனிதம் என உலகில் உரைக்கப்படுவதாக உள்ள அனைத்தும் ஓரிடத்தில் தங்கி உறையுமாயின் அவ்விடத்தின் பெயர் முகியித்தீன் எனக் கலிறு நபியின் வாயிலாக வண்ணக்களஞ்சியப்புலவர் உணர்ச்சி பொங்க ஆண்டகை புகழ்பாடுவர். மேற்குறித்த அனைத்துப் பொருள்களின் மொத்த உருவம் முகியித்தீன் என்பதே இங்கு உரைக்கப்படும் புகழாகும். மேலும் நான்கு திக்கிலும் வாழும் ஞானியர் யார்க்கும் உலகோர் எவர்க்கும் நாயகப் பொருள் என ஆண்டகைபுகழ் நவிலப்படும். (614).

**5. ஆண்டகை கூற்று**

ஆண்டகையின் புகழை ஆண்டகை வாயிலாகவும் புலவர் பேசுவர். இறையருளால் தாம் பெற்றிருந்த ஆற்றல்களை மற்றவர் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆண்டகையே அவையில் பேசிய செய்திகளை இப்பகுதியில் அடக்கலாம். சேகுனாப்புலவர் 'தன்னிலை விளக்கிய படலம்' (படலம்—26) என்ற பெயரில் இச்செய்தியைப் பேசுவர். பதுறுத்தீன் புலவர் வல்லபம் பேசியபடலம், மகத்துவம் பேசிய

படலம் என இரு படலங்களில் (படலம்—21,24) இச்செய்தி களைப் பேசுவர். வண்ணக்களஞ்சியப் புலவர் தனிப்படல மாகப் பேசாது பேறோங்கு படலத்தின் ஒரு பகுதியாகப் பேசுவர். (572—578). ஆண்டகை வாயிலாகவே புகழ் பேசப்படும் இடங்கள் மேலும் சிலவுண்டு. (558—560; 584, 585).

**6. ஆண்டகையின் ஆசிரியர்கள்—அபுல்வபா கூற்று.**

முன்னிலை வாயில்களில் ஆண்டகையின் ஆசிரியராக விளங்கிய அபுல்வஃபா பேசிய ஆண்டகையின் புகழ் குறிக்கத் தக்கதாகும். (241-248).இங்கு ஆண்டகையின் அளவிலாப்புகழ் காலங்கடந்து, இடங்கடந்து, இறுதி நாள் மட்டும் நிலைக்க இருக்கும் தன்மை இனிது விளக்கப்படுகிறது. இக்களத்தில் புகழ் பேசும் வாயில் ஆண்டகையின் ஆசிரியராக இருத்தலின் ஆண்டகை புகழின் அனைத்து நிலைகளும் தோன்றத் தொகுத்துப் பேசுவர் புலவர். 'மெஞ்ஞானச் செம்மல், (244) அப்துல் காதிர் அண்ணல், 'முகியித்தீனாம் எங்கோ, 'குதுபுக் கெல்லாம் நாயகம். 'புண்ணிய பொருள், எனவரும் தொடர் களில் புகழ் தொகுக்கப்படும். (248)

**செய்கு கம்மாது கூற்று:**

ஆண்டகையின் ஆசிரியராகவும், அக்கால்த்துப் புகழ்பெற்ற பெரும் ஞானியாகவும் விளங்கிய செய்கு கம்மாது அவர்கள், அபுல் முலப்பரிடம் கூறும் மொழிகளாக அமைந்த ஆண்டகை புகழ் குறிக்கத் தக்கதாகும்.(655,656).வணிகம் முடித்து உயிரும் உடமையும் காக்கப் பெற்று ஆண்டகைபால் நன்றி உணர்வு பொங்க திரும்பிய அபுல் முலப்பரிடம் ஞானி கம்மாது ''இறை வனிடம் பதினேழு முறை மன்றாடி உயிரையும் பொருளையும் மீட்டுத்தந்தவர் முகியித்தீன் என்னும் ஏந்தலே ஆவர்; அருள் அடைகிடந்து வாழ்கண்ணார் ஆகவும் பெரு ஞானியர் கட்கெல்லாம் (ஆரிபீன்) ஒருதனி அரசாகவும் விளங்கும் ஆண்டகை பாற் செல்க என உரைத்ததகாகப் புலவர் பாடுவர்.

**7. ஆண்டகையின் தோழர்களும் தொடர்பு கொண்டோர்களும்:**

ஆண்டகையின் தோழர்களில் அபுல் ஹஸனலி, அறபி, செய்கு கபீபு முகம்மது, செய்கு அபில் காசீம் ஆகியோர் வாயிலாக ஆண்டகை புகழ் புலவரால் புகலப்படுகிறது. நபிகள் நாயகத்தைக் கனவில் கண்டு ஆண்டகையைக் கைபிடித்து குருவாக ஏற்குமாறு ஏவப்பெற்றுத் தந்தையோடு ஆண்டகை பால் வந்து ஞான உபதேசம் பெறும் அபுல் ஹஸனலி அவர்கள் வாயிலாக புலவர் பாடும் புகழ்ப்பாக்கள் பெருமை மிக்கன வாகும்.

''துறந்துள பெயர்க்கெலாந் தோன்றலாகியும்
பிறந்துள வுயிர்க்கெலாம் பேறு நல்கவே
சிறந்துள முகியித்தீன் செம்பொற் பாதத்தை
மறந்துள நாளெல்லாம் வாழு நாளன்றே,''
''மூலமு முடிவுமாம் பொருளை முத்தியின்
சீலமு முதவவந் துதித்த செம்மலை
யேலமுன் னுணர்ந்திலா தகன்றிங் கித்தனை
காலமுங் கழித்தனங் கண்டி ருந்துமே, (509,510)

ஆண்டகை அவையில் அறிவுரைத்துக் கொண்டிருந்த போது, செய்கு அலி, நபிகள் நாயகத்தைக் கனவில் கண்டனர். அதனை நனவில் உணர்ந்த ஆண்டகை செய்கு அலியை நோக்கி, கனவு பற்றி வினவ, மறுமொழியாக செய்கு அலி 'ஆண்டகை அவையில் வந்திருந்த சிறப்பால் தமக்கு நபிகள் நாயகத்தைக் கனவில் காணும் பேறு வாய்த்தது என ஆண்டகை புகழ் பேசுவர். (566). ஆண்டகையின் தோழர்களாகிய அபுல் முலப்பர் (661), செய்கு கபீபு முகம்மது துஆ பெற்ற சான்றோர்கள் (855-858),செய்கு அபுல்காசீம் (செய்குசைலிவாயிலாக நபுனான் (லுபுனான்) இறைநேயர்கள் உரைக்கக்கேட்ட புகழ் மொழிகள்) (873-877), அறபி (1013,1014) ஆகியோர் வாயிலாகவும் புலவர் ஆண்டகை புகழ் பேசுவர்.

ஆண்டகையோடு தொடர்பு கொண்டோர் வாயிலாகப் புகழ் பேசப்படும் களங்களும் உள. அவற்றுள் செய்கு உதுமான் வாயிலாகவும் (படலம்-30). ஆண்டகைக்கு ஆடுகள் மேய்த்த ஆயன் வாயிலாகவும் (படலம்-28)ஆண்டகை ஹஜ்ஜுப் புனிதப் பயணம் மேற்கொண்டபோது வந்து தோன்றிய ஹபஷிப் பெண் (கருப்பர் குலப்பெண்) வாயிலாகவும் (414, 415), ஆடை நெய்யும் அன்பர் வாயிலாகவும் (1656) ஆண்டகை புகழ் பேசப் படும். கிலிறு நபியிடம் வாய்மை கேட்ட சான்றோர் வாயிலாக அமைந்த,

''முரட்பெருங்குபிரை மாய்த்த முகம்மது பெயரர் தம்மைக்
குருத்திற லுயிராய்த் தோன்றுங் குதுபுகட் கரசை மாறா
வருட்பயோ ததியை யெம்மையாண்டருண் முகியித்தீனைக்
கருத்தினாற் கண்டே னென்றன் கண்ணினுங் கண்டே
னென்றார்.'' (191)

என்ற புகழ்ப் பாடல் அருமையுடையதாகும்.

ஆண்டகையோடு தொடர்பு கொண்டு தங்கள் துயர் நீங்கப் பெற்று ஆண்டகையைப் புகழ்ந்தோரும் புலவரால் புகழ்பேசும் வாயில்கள் ஆக்கப்பட்டுள்ளனர். குன்ம நோய்

பெற்று வருந்தி அது நீங்கப் பெற்றவர் (படலம்—34), கடலில் மகனை இழந்து பின்னர் மீண்டும் பெற்ற அன்னை(படலம்-35) மரித்தவள் மீண்டும் உயிர் பெற்று எழுந்து மக்களை ஈன்ற தாய் (படலம்-36), பெண் பிள்ளைகள் ஆணுருப் பெற வேண்டிப் பயன் பெற்றோர் (படலம்-38) ஆகியோர் வாயில் களாவர்.

## 8. ஆண்டகையால் தண்டிக்கப் பெற்றுத் திருந்தியோர்

ஆண்டகையால் தண்டிக்கப் பெற்றுத் திருந்திய பின்னர் ஆண்டகையைப் புகழ்ந்த வாயில்களையும் புலவர் படைத் துள்ளார். அபாபக்கரில் கம்மாமி மார்க்க நெறிமுறையில் பிழை செய்ய, ஆண்டகையால் தண்டிக்கப்பெற்று, அவர் திருந்த பின்னர் புகழ்ந்ததும் (படலம்—16), செருக்கி நின்ற செய்குதனா, தண்டிக்கப்பட்டு திருந்திய பின்னர் இறை நேயத்துவம் பெற்று புகழ்ந்ததும் (படலம்-33), தொழுகைக்கு உடல் தூய்மை செய்யும் போது, பெண்ணைக் கண்டு காமுற்றுக் குற்றம் இழைத்த செய்கு, தண்டனை நீங்கித் திருந்திய பின்னர் புகழ்ந்ததும் (படலம்-37) ஆகிய புகழ் வாயில்களும் புலவரால் பேசப்படுகின்றன.

## 9. வானவர், ஜின், முதலியோர் புகழ்ந்தது

வானவர் (133, 194), ஜின் (195, 301-307),
ஞாயிறு, திங்கள் (89, 160, 164-166),

ஆண்டு, மாதம், நாள் (196), பூமி (176-181) முதலியோர் வாயிலாகவும் ஆண்டகை புகழ் பேசப்படும்:

இயல் ஐந்து

# இஸ்லாமியக் கொள்கை விளக்கம்

## அ. ஐந்து அடிப்படைக் கடமைகள்

காப்பியப் பாவிகம்—காப்பியப் புலவர் நோக்கம்—முகியித்தீன் ஆண்டகையின் புகழை முழுமையுறப் பாட வேண்டும் என்பதேயாகும் என்ற செய்தி முன்னர் விளக்கப் பட்டுள்ளது. ஆண்டகையின் புகழ்ப் பாடும் காப்பியத்தில் இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கிப் பேச வாய்ப்புண்டா என்ற எண்ணம் எழக் கூடும் இஸ்லாத்தை—நபிகள் நாயகம் நிலை நிறுத்திய நல்வழியை—முழுமையுற ஏற்றுப் போற்றிய மையே ஆண்டகை பெற்ற பெரும் புகழுக்கு ஒரே காரணம் என்பதை விளங்கிக் கொண்டால் இவ்வையம் தோன்ற இட மிருக்காது. நபிகள் நாயகம் நானிலத்தில் நாட்டிய இறை மார்க்கத்தை நாயகத் தோழர்களுக்குப் பிறகு முகியித்தீன் ஆண்டகை பொலிவும் வலிவும் ஊட்டி நானிலத்தில் நிலை நிறுத்தும் வாரிசாக விளங்கியதே வண்ணக் களஞ்சியப் புலவர் நோக்கப்படி ஆண்டகை புகழின் ஆணிவேர் ஆகும். இறையரு ளால் ஆண்டகை, பாட்டனார் வழியை முழுமையும் வழுவாது போற்றி வாழ்ந்தனர். அதுவே அவர்களின் பெரும் புகழாகும். இதனை உணர்த்தவே புலவர், ஆண்டகையை 'முகம்மது பேரர்' எனவே குறிப்பர். அடுத்து ஆண்டகைக்கு உரைக்கப் படும் புகழெல்லாம் இஸ்லாமிய சன்மார்க்கத்தை நிலை நிறுத்த ஞான மார்க்கத்தைச் சொல்லாலும் செயலாலும் பரப்பியதே யாகும். ஞானவுலகத் தலைமை ஏற்று ஆண்டகை ஆற்றிய அறப் பொழிவுகளே அவர்கட்கு அரும்புகழ் ஈந்தன. ஆண்டகை அறப் பொழிவு ஆற்றத் தொடங்கியதற்குப் பாட்டனார் வாயமிழ்தூட்டி வாழ்த்தியதே காரணமாகும் எனப் புலவர் பாடுவர். இவ்விளக்க மெல்லாம் ஆண்டகை புகழ் பேசும் வகையில் அவர்கள் போற்றிய இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கிக் காட்டுவதே காப்பியப் போக்காக இருக்கும் உண்மை காட்டும். சுருக்கமாக ஆண்டகை புகழ் என்பதும் இஸ்லாமிய விளக்கம் என்பதும் ஒன்றே எனக் கூறி விடலாம்.

**ஓரிறைக் கொள்கை :**

மேற் குறித்த விளக்கத்தால் ஆண்டகை புகழ்பாடும் காப்பியத்தில் இஸ்லாமிய விளக்கம் இயல்பாக இடம் பெறும் என்பது தெளிவாகும். இஸ்லாமிய உயிர்க் கொள்கை ஓரிறைக் கொள்கையாகும். இஸ்லாமிய மூலமந்திரம் (கலிமா) ஓரிறைக் கொள்கையை விளக்குவதாகும். இஸ்லாமிய ஓரிறைக் கொள்கை, மனிதன் இறைவனையே நம்பி, அவனையே சார்ந்து, வேறு யாரையும் நம்பாமலும் சாராமலும் இருப்பதாகும். மேலும் இறைவன் ஒருவனையே உதவியாளனாகக் கருதி, அவனிடம் மட்டுமே உதவி தேடுவதுமாகும். (திருமறை—2: 257; 3: 150; 4: 45) இஸ்லாத்தின் உயிர்க் கொள்கையான ஓரிறைக் கொள்கைத் தத்துவத்தைக் காப்பியம் முழுவதும் இறைவனைக் குறிக்கும் போதெல்லாம் விளக்கிக் காட்டுவர்.

இறைவன் ஒருவன், தனித்தவன், இணையில்லாதவன் எனவரும் ஓரிறைக் கொள்கையின் தத்துவங்களை 'உவமையில்லா ஒருவன்' (1100), தன்னிகர் ஒருவரில்லாத் தனியவன் (177), ஓதற்கரிய ஒரு முதலோன் (403) தனியவன் கருணை செய்வான் (1410) எனப் பல இடங்களில் விளக்கிக் காட்டுவர்.

இறைவனின் பிற தன்மைகளையும் புலவர் தெளிவுபடுத்துவர். இறைத் தன்மைகள் இறைவனின் ஒருமையையும் தலைமையையும் ஆற்றலையும் அறிவுறுத்துவனவாகும். இறையடியான் இவ்விறைத்தன்மைகளை விளங்கிக் கொள்கிறபோது தான் இறைவனுக்கு அஞ்சி, இறைச் சட்டங்களுக்குட்பட்டு வாழ வேண்டும் என்ற உணர்வையும் அவ்வாழ்வே உலகில் சாந்தியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்தும் என்ற தெளிவையும் இறையடியான் பெறுகின்றான். இந் நோக்கிலேயே இறைமறை இறைவனுடய ஒருமையையும் தலைமையையும் ஆற்றலையும் மீண்டும் மீண்டும் பேசுகின்றது. (குர்ஆன்— 2: 128—140; 3: 78—85; 17: 42 —44, 31: 22.) இறைவனே அனைத்தையும் அறிந்தவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான் என்பதை இறைமறை மீண்டும் மீண்டும் எடுத்தியம்புகிறது. (குர்ஆன்— 57: 1—6; 59: 22—24). இறைமறைத் தெளிவுடைய புலவர் காப்புச் செய்யுளிலேயே 'மண்ணிலும் விண்ணிலும் மறைந்திருந்த பல்வகை ஞானங்களையும் தெரிந்தவன் கண்ணின்றிக் காண்பவன்' (காப்பு— 2 )எனக் குறித்துக் காட்டுவர். மேலும் அத்தகைய இறையவனின் தன்மைகளுள் தலையாயதாக அனைத்து உயிர்கட்கும் அனைத்தையும் வழங்கி அருள்பவன் அவனே என்ற

உண்மையைத் திருமறை வலியுறுத்தும். (குர்ஆன் 1: 1; 6: 164; 10: 32; 11: 6; 29: 60) இவ்வுண்மையை முதற் செய்யுளில் எண்ணரிய பல்லுயிர் மேல் கண்மை வைத்தாள்பவன்' (காப்பு —1) எனப்பாடுவர். அருளுடைமையை இங்கு புலவர் 'கண்மை' எனக் குறிப்பர். வள்ளுவரும்கண்ணோட்டம் என்பது எண்ணத் தக்கது. (குறள்: அதிகாரம். 58). இறைவன் தன்மைகளுள் தலையாயது அருளுடைமை என்பது காட்டத் 'திருவருள் பொழியும் ஆதிநாயகன்' எனப்பாடிக் கடவுள் வாழ்த்துத் தொடங்குவர்.

இறைவன் தூயவன் என்ற உண்மையை இறைமறை பல முறை இயம்பும். இறைத்தன்மைகளிலேயே சுப்ஹானல்லா எனப்படும் 'இறைவன் தூயவன்' என்ற மொழியே முதன்மை பெறுகிறது. இறைவனைத் 'தூயோன்' (1202) என்பர் புலவர். இறைவனுக்கே எல்லாப் புகழும் (அல்ஹம்துலில்லாஹ்) உரியது என்ற தொடரை இறைவன் மிக விரும்புகின்றான் என்பது நபி மொழி. இவ்வுண்மையைப் புலவர், 'வருபுகழ் எவையும் தனக் குரியவன்' (1) 'புகழெலாம் பொருந்தியோன்' (4) என உணர்த் துவர். இறைவன் தன்னிகரற்றவன், உவமை இல்லாதவன், குறை யில்லாதவன் (குர்ஆன்—16:86; 25: 2, 3; 28: 68) என்ற உண்மை களைப் புலவர் குறித்துக் காட்டுவார். (177,408,1100,1410,1587) பிறர் தேவைகளையெல்லாம் நிறைவேற்றும் இறைவன், தேவை கள் இல்லாதவன் என்பது இறைமறை காட்டும் ஓர் இறைத் தன்மையாகும். (குர்ஆன்—112:2) 'வேண்டல் வேண்டாமை இல்லவன்' (2) வேண்டுதல் இல்லான் (212) என இத்தன்மை காட்டுவர். பிறப்பும் இறப்பு மற்ற இறைவன் (குர்ஆன்—112 :3) உயிர்களின் பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாக விளங்கு வதையும் காட்டுவர். (410)

வண்ணக் களஞ்சியப்புலவர் இறைவனைச் 'சுயம்பு ஆனவன்' எனக் குறிப்பர். சுயம்பு என்ற சொல் சைவசித்தாந் தத்திலும் 'யாராலும் படைக்கப்படாது தானே தோன்றித் தனித்து வாழ்பவன்' என்ற பொருளையே குறிக்கும். இறை மறையிலும் இறைவன் யாராலும் பெறப்படாதவன் (குர்ஆன் 122:3) எனவே குறிக்கப்படுகிறான். எனவே வண்ணக்களஞ்சியப் புலவர் சுயம்பு என்று பயன்படுத்துவது பொருத்தமே ஆகும். மேலும் சின்மயன், ஆனந்தபூரணன் (3) எனவரும் இறைவனைக் குறிக்கும் தொடர்கள் இஸ்லாமியக் கொள்கைக்கு முழுக்க முழுக்க ஏற்புடையன ஆதலால் தமிழ் இலக்கியங்களில் பயின்ற அச் சொற்களை இறைத்தன்மைகள் காட்டப் புலவர் ஆளுவர். எல்லாவற்றின் தொடக்கமும் முடிவும் காலமும் கணக்கும்

கடந்த காரணஞக விளங்குகின்ற இறைவனிடமே இருக்கிறது என்ற உண்மையை இறைமறை எடுத்துக் கூறும். (குர்ஆன்-92:13) முகியித்தீன்புராணப் புலவர்கள் ஆதியும்நடுவும் முடிவும் இல்லாதவன் என இறைவனின் காலங்கடந்த தன்மையைக் கழறுவர். வண்ணக்களஞ்சியப் புலவர், ஆதியும் நடுவும் ஈறும் அகன்ற மெய்ப்பொருள்' (626) எனப் பாடுவர். நம் புலவருக்குப் பிந்திய பதுறுத்தீன் புலவர் தம் முகியித்தீன் புராணத்தில் மிகப்பல இடங்களில் இச் செய்தியைப் பேசுவர்.

**'கலிமா':**

இஸ்லாமிய ஓரிறைக் கோட்பாடு அதன் மூல மந்திரமாகிய கலிமாவில் உரைக்கப்படுகிறது. கலிமா விளக்கும் தத்துவம் 'தௌஹீது' எனப்படும். தௌஹீது எனும் அறபுச் சொல் ஒருமை என்ற பொருள்தரும். இறைவனையன்றி வேறு யாரையும் இறைவனுகக் கருதாது, இறைவன் ஒருவனை மட்டுமே இறைவஞகக் கருதுவது தௌஹீது எனும் தத்துவமாகும். 'இறைவன் ஒருவனே; அவனே வணக்கத்துக்குரியவன்' என்பதுவே கலிமா விளக்கும் தத்துவமாகும். இத்தத்துவத்தையே நபிகள் நாயகம் மண்ணுலகில் நாட்டினுர்கள்.

இத்தத்துவம் இறைவன் ஒருவனே என நாட்டியதாலும், அங்ஙனம் நாட்டியவர்கள் நபிகள் நாயகம் ஆதலானும் 'இறை நபி கலிமா' (1145) எனவும் 'ஆதிமுகம்மது நபி கலிமா' (1692) எனவும் புலவர் குறிப்பர், மேலும் இறைவன் ஒருவனே, இறைத்தூதர் முகம்மது அவர்களே என்ற இரண்டு செய்திகளையும் இணைத்தே முதற் கலிமா உரைக்கப்படுகிறது. இறைவன் ஒருவனே என்ற உண்மையை உரைத்துக் காட்டியவர் இறைத்தூதர் (நபி) ஆதலின் 'நபி கலிமா' எனப் புலவர் பொருத்தமுற உரைப்பர்

இறை நபிக் கலிமாவை நாவால் உரைத்து உள்ளத்தில் உறுதியாக்கிக் கொண்டவர் அடையும் மேன்மைகளையும் புலவர் எடுத்து உரைப்பர். உள்ளத்து அறியாமை இருள் நீங்கியது எனவும் இறைமார்க்கத் தெளிவாகிய ஒளி நிறைந்தது எனவும் இறையருள் பெற்று உயர்ந்தனர் எனவும் பயன்களைப் புலவர் உரைத்துக் காட்டுவர். (1147)

இறைவனுக்கு அஞ்சி, இறைச் சட்டங்களை வழுவாது, நபிகள் நாயகம் காட்டிய வழியில் வாழ்வதே கலிமா வாழ்வு என்று சொல்லப்படும். ஆண்டகை தோழர் அபுல்ஹஸன் அலி நபிகள் நாயகத்தைக் கனவில் கண்டபோது, இத்தகுவாழ்வைத் தாம் பெற இறைவனிடம் வேண்டுமாறு கேட்கின்றார்.

வாழ்நாள் எல்லாம் நபிகள் நாயகத்தின் வழியில் (சுன்னத்) வாழ்ந்து, இறப்பு வரும்போது இறைக் 'கலிமா'வைக் கூறும் மனநிலையில் இருப்போர் (கலிமா வாழ்வு பெற்றோர்) சொர்க்கம் (ஜன்னத்) பெறுவது உறுதி என இங்குப் புலவர் உரைத்துக் காட்டுவர், (505)

**தொழுகை :**

இஸ்லாம் விதிக்கும் கடமைகளுள் தலையாயது தொழுகை. கலிமாவின் செயல் வடிவம் தொழுகை எனக் கூறலாம். 'நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் மனிதனை விலக்குகிறது' என்பது திருமறை (29:45) தொழுகையின் பயன்களை நபிகள் நாயகத்தின் பொருள் மொழிகள் நயமுற விளக்குகின்றன.[26]

வண்ணக் களஞ்சியப் புலவர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தொழுகை பற்றிய நுட்பங்களைக் கூறிச் செல்வார். முகியித்தீன் ஆண்டகை பள்ளியில் தனித்திருந்து தொழுது கொண்டிருந்த போது 'ஜின்' (ஒரு வகைப்படைப் பினம்) பாம்பாக வந்து சோதித்த களத்தில் புலவர் தொழுகை பற்றிப் பேசுவர். 'வல்லவனை யுன்னியுட் கனிவொடு' (295) என்ற குறிப்பு இறைவனைத் தொழும் போது இறையடியான் போற்ற வேண்டிய உள்ளப் பக்குவத்தைக் காட்டுவதாகும். பிற நினைப்பு நீங்கி, இறை நினைப்பு ஒன்றே உள்ளத்தை நிறைக்க, அச்சமும், பணிவும், கனிவும் தோன்ற தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. 'அந்தமற்றவன் தொழுகையில் தியானமேயானீர்' (304) என்ற ஆண்டகையைப் புகழும் ஜின்னின் மொழிகளும் மேற்குறித்த செய்தியை விளக்கும்.

புலவர் இப்படலத்தில் தொழுகையின் பல்வேறு நிலைகளையும் குறித்துக் காட்டுவர். 'சுஜூது' என்பது இருப்பிலிருந்து முழுமையும் குனிந்து முகத்தின் நெற்றியும் மூக்கும் நிலத்தில்பட வணங்குதல் ஆகும். தொழுகையின் பல்வேறு நிலைகளுள் இதுவே இறையடியான் தன்னை முழுமையாக இறைவனுக்கு அடிமையாக்கிக்கொண்டதன் அடையாளமாகும், இதனைச் 'சுஜூது இட்டனர்' (295) என்பார். அதற்கு அடுத்த நிலை இரண்டு கால்களையும் பின்னதாக மடித்து, இரண்டு முன்னங்கைகளையும் முழங்காலின் மேல் சூட்டி அமர்ந்திருக்கும் இருப்பு நிலையாகும். இந்நிலையில் ஓதப்படும் வாசகத்தைக் கருத்திற் கொண்டு புலவர், 'அத்தகியாத்தின் இருப்பு நிலை' என இதனைக் குறிப்பர். (296)

தொழுகை முடித்து இருபுறத்தினும் தலையைத் திருப்புதல் 'சலாம் கூறுதல்' எனப்படும், இதனை 'ஓதியே முடித்து இருபுறத்தினும் சலாம் உதவி' (297) என்பார். இக்களத்தில் புலவர் விளக்கும் தொழுகை, தனியே செய்யப்படும் சிறப்புத் தொழுகையேயாகும் என்பதனைப் 'பள்ளியதனில் ஒருமையிற் புகுந்து ஆதியைத் தொழுதிடுபோதில்' எனக் கூறுவர் (292) ஒருமையிற் புகுந்து என்ற குறிப்பு இங்கு குறிப்பிட்ட தொழுகை, கூட்டுத் தொழுகை அன்று என்பதைப் புலப்படுத்தும். ஒருநாளில் ஐந்து வேளையும், வெள்ளியன்று நண்பகலிலும் ஆண்டின் இரண்டு பெருநாட்களின் காலையிலும் கூட்டுத் தொழுகை நிகழ்த்தப் பெற வேண்டும். கூட்டுத் தொழுகைகளைத் தனியே நிறைவேற்றும் போது கடமை நிறைவேறுமே தவிர இருபத்தேழு மடங்கு சிறப்புக் குறைந்து விடுகிறது என்பது நபி மொழியாகும்.

வெள்ளிக் கிழமை ஜும்மாத் தொழுகைக்கு ஆண்டகை சென்றதை 'வெள்ளித் தொழுகைக்கு அன்பிருத்தியேகி(257) எனக் குறிப்பார். உரிய காலத்தில் முன்னதாகவே ஆர்வத்தோடு பரபரப்பின்றி, மெதுவாக நடந்து கூட்டுத் தொழுகைக்குப் போக வேண்டுமென்பது கருத்து. தொழுகை முடிந்து அனைவரும் புறப்பட்டுச் சென்றதை, 'தொழுது அவை தீர்ந்த பின்னர்' (258) எனக் குறிப்பர்.

தொழுகை நேரங்கள் ஐந்தில் 'சுபுஹு' என்பது விடியற் காலத் தொழுகை. 'கங்குல் போய் விடிந்து கீழ்ப்பக்கம் வெளுக்கும் நேரம்' என அத்தொழுகையின் நேரத்தைப் புலவர் தெளிவுபடுத்துவர் (372), 'இசா ஒலு கொண்டு சுபுஹு தொழுவதானார்' (351) என்ற குறிப்பில் இரவு நேரத் தொழுகையையும் (இஷா), விடியற் காலத் தொழுகையையும் (சுபுஹு) புலவர் குறிப்பர். மாலைக்கும் இரவுக்கும் இடைப்பட்ட இரவின் தொடக்க நேரத் தொழுகை 'மகுரிபு' எனப்படும். நோன்பு திறக்கும் நேரமும் மகுரிபு தொழுகைக்குரிய நேரமும் ஒன்றாகும். இரண்டின் நேரத்தையும் 'பகல் முற்றொழுகி' (404) எனப் பகல் முடிந்து இரவு தொடங்கும் நேரத்தைப் புலவர் குறித்துக் காட்டுவர்.

**நோன்பு** : இஸ்லாத்தின் மூன்றாவது கட்டாயக் கடமை நோன்பாகும். இஸ்லாமியத் திங்கள் பன்னிரண்டில் றமலான் எனக் குறிக்கப் பெறும் ஒரு திங்கள் எல்லா நாட்களிலும் குறிப்பிட்ட நேரம் விடியற் காலம் முதல் இரவு தொடங்கும் நேரம் வரை) இறைவனுக்காகப் பசியோடும் தாகத்தோடும் நோன்பிருப்பதை இறைமறை கடமையாக்கியிருக்

கிறது (குர்ஆன் 2 :183). மிகப்பல நபிமொழிகள் நோன்பின் மாண்பு பேசுகின்றன.[27]

வண்ணக் களஞ்சியப் புலவர் கடமையாகிய றமலான் நோன்பு முப்பது என்பதையும், விடியற்காலமிருந்து இரவு தொடங்கும் வரை உண்ணுதல், குடித்தல் தவிர்த்திருக்கும் நேரம் ஆகும் என்பதையும், பிறை கண்டே நோன்பு மாதத் தொடக்கம் அறிந்து நோன்பு நோற்க வேண்டும் என்பதையும் முகிலால் பிறை மறைந்து தெரியா நிலையில் நோன்பு நோற்க இயலாது என்பதையும் தெளிவுபடுத்துவர். (134,135,136) மேலும் நோன்பு பிடிக்கும் நேரத்தையும் (ஸகர்) (352), நோன்பு திறந்து உணவு உண்ணும் நேரத்தையும் (404), புலவர் பேசுவர்.

**ஏழைவரி (ஜகாத்)**

இஸ்லாத்தின் நான்காவது அடிப்படைக் கொள்கை 'ஜகாத்' ஆகும். இவ்வறபுச் சொல்லிற்குத் தூய்மை என்று பொருள். இறைவன் தந்த செல்வத்திலிருந்து நாற்பதில் ஒரு பகுதியை ஏழைவரியாகப் பொருளிலார்க்கும் வறுமையாளர்க்கும் மகிழ்ந்து கொடுத்து விடுவதன் மூலம் ஒருவனிடம் எஞ்சியிருக்கும் பொருளும் அவன் உள்ளமும் தூய்மைப்பட்டு விடுவதை இவ்வறபுச் சொல் தெளிவு படுத்துகிறது. இறைமறை தொழுகையைக் குறிக்கும் இடத்தெல்லாம் ஏழை வரியை (ஜகாத்தை)யும் இணைத்தே கூறுகின்றது. (குர்ஆன்- 2:2,3,43; 5:12;19:31).

வண்ணக் களஞ்சியப் புலவர் இவ்வேழை வரி கட்டாயக் கடமை என்பதைப் 'புரிகடன் எனும் சக்காத்து' என்பர். மேலும் கடனாக உள்ள ஏழை வரியன்றி, எளியோர்க்கிரங்கிப் பரிவொடு தரும் பொருள் 'சதக்கா' எனப்படும். இதுவும் இஸ்லாத்தில் செல்வர்களுக்கு வலியுத்தப் பட்டுள்ளது. இவ்விரண்டையும் (ஜகாத், சதக்கா) புலவர் குறித்துக் காட்டுவர். (800) இவ்விரு வகைக் கொடைகளையும் இறைவன் தன் திருமறையில் வலியுறுத்திக் கூறியுள்ள செய்தியையும் (802) புலவர் குறித்துள்ளார். நகரப் படலத்தில் ஆடவர் அரும் பண்புகளைப் பேசும்போது இவ்விரண்டையுமே புலவர் 'கொடையும் தருமமும்' (95) எனக் குறிக்கின்றார். இவ்விரு சொற்களும் தமிழில் பொதுவாக ஈகையைக் குறிப்பனவேயாயினும் கொடை என்றது கட்டாயக் கடமையாகிய ஜகாத்தையும், தருமம் என்றது அதன் மேலும் செல்வர்கள் விரும்பி வழங்கும் சதக்காவையும் குறிப்பதாகும்.

—4

மேலும் புலவர் இப்படி வழங்கப்படும் ஈகை, இரப்பவர்க்கு அவர் உரைக்கு முன்னர் நினைத்த அளவிலேயே கொடுக்கப் பெற வேண்டும் எனவும், அங்ஙனம் கொடுப்போர்க்கு இறையருள் பெருகும் எனவும் பேசுவர் (101).

**மக்காப் புனிதப் பயணம் ('ஹஜ்')**

இஸ்லாத்தின் கட்டாயக் கடமைகளுள் இறுதியாகக் குறிக்கப் பெறுவது மக்காப் புனிதப் பயணமாகிய 'ஹஜ்' ஆகும். பொருள் வசதியும் உடல்நலமும் உடையோருக்கு இது கடமையாகும். இப்புனிதப் பயணம் மேற்கொண்டு இறை வழிபாடு செய்வது, இறை விதித்த கட்டாயக் கடமை என்பதை, 'மக்கப்பதிபோய்ப் பரிவொடு கச்சுச் செய்வது விதியாகும்' (1052) எனப் புலவர் குறிப்பர். புனிதநகரத்தைத் திருமக்கப்பதி என்பர். மேலும் அப்பதி நபிகள் நாயகம் அரசாள்பதி எனவும் அதன் சிறப்புரைப்பர். (1052) மக்காப் புனிதப் பயணத்தில் 'கஃபதுல்லா' எனும் இறையாலயத்தை வலம் வருதல் (தவாபு) மிகச் சிறந்த இறைவழிபாடாகும். இச்செய்தியினை 'மக்கம் புகுந்து கருபாவில் தொழுகாரணன் தன் அருள்கூரத்துலங்குந் தவாபு செய்து உவந்தார் எனப்பாடுவர். (408).

புனிதப் பதியாகிய மக்கம் புகுவதும், இறை வீடாகிய கருபாவை வலம் வருவதும் ஒருவருடைய வாழ்நாளில் இறைவனுடைய பேரருளால் நிகழக் கூடிய அருஞ்செயல் என்பதையும் அப்பேறு பெற்றமையால் ஆண்டகையும் தோழரும் மகிழ்வுற்றனர் என்பதையும் 'உவந்தார்' எனப் புலவர் குறித்துக் காட்டுகின்றார். மேலும் இதனை வலியுறுத்த 'இறையோன் பண்பார் கருணை பழுத்தொழுக' (408) எனவும் பாடுவர். மக்காப் புனிதப் பயணிகள் ஹஜ்ஜுப் பெருநாளுக்கு முந்திய நாளில் அடிவாரத்தில் உள்ள பரந்த வெளியில் அனைவரும் திரண்டு நின்று உள்ளம் உருகி இறைவனை வேண்டுவர் என்ற செய்தியையும் புலவர் (211) குறிப்பர்.

மக்காவில் இறைக் கடமைகளைச் செய்து முடித்த பின்னர் அனைவரும் மதினா சென்று நபிகள் நாயகத்தின் அடக்க விடத்தை (றௌலா)த் தரிசிப்பர். நபிகள் நாயகத்தின் அடக்க இடத்தை முகியித்தீன் ஆண்டகை உள்ளம் கனிந்து ஏழு முறை வலம் வந்ததாகவும் பின்னர் அங்கு நின்று இறைவனைத் துதித்ததாகவும் (பாத்திஹா) பாடுவர். (419, 420) ஆடை நெய்வோனின் அன்னையும் எழில் சேர் மதின நன்னகர் சேர்ந்து உலகு உயர் றௌலாவினில் தவாபுஇயற்றி பாத்திஹா ஓதி நின்றனர் எனப் பாடுவர் (1692). நபிகள் நாயகம்

பத்தாண்டுகள் வாழ்ந்து அரசோச்சிய மதினப் பதியைப் புலவர் 'எழில் சேர் மதின நன்னகர்' என இங்குக் குறிப்பர்.

**ஆ. இஸ்லாத்தின் பிற நம்பிக்கைகளும் செய்திகளும் :**
**நபிகள் நாயகம் :**

இஸ்லாத்தின் ஐந்து அடிப்படை மையக் கொள்கைகளும் கடமைகளும் பற்றிய வண்ணக் களஞ்சியப் புலவர் கருத்துக்கள் இதுவரை ஆராயப்பட்டது. அவற்றோடு தொடர்புடைய பிற நம்பிக்கைகள் கொள்கைகள் பற்றி இங்குப் பேசப்படுகிறது. முகம்மது நபியவர்கள் இறைவனுடைய இறுதித் தூதராகப் பிற நபிமார்களுக்கு முத்திரையாக இருக்கும் உண்மை திருமறையில் தெளிவு படுத்தப்படுகிறது. (33:40) இத்திருமறை வசனம் நபிகள் நாயகம் இறுதித் தூதராகவும், முந்திய தூதர்களுக்கு முத்திரையாகவும் விளங்குவதைக் காட்டி, நபிகள் நாயகம் கொணர்ந்த நன்மார்க்கம் இறுதியானது, முழுமையானது, இறுதி நாள் வரை மனித குலத்தை வழி நடத்தப் போதுமானது எனத் தெளிவு படுத்துகின்றது.

இத்திரு வசனம் ஒன்றே நபிகள் நாயகத்தின் நனிமிகு பெருமையையும் தனிப் பெரும் புகழையும் காட்டப் போதுமானது. இதனை உணர்த்த வண்ணக் களஞ்சியப் புலவர் காப்பியத்தின் முதற் பாடலில் (காப்பு—1) 'காத்திமுன் றசூல்' எனப் பாடுவர். இறை மறை மேற் குறித்த வசனத்தில் பயன் படுத்திய தொடரையே குறித்து நபிகள் நாயகத்தின் நற்புகழ் பாடிக் காப்பியத்தைத் தொடங்குவர். சேகுனாப் புலவரும் 'அந்த நந்நபி காத்திமுல்அன்பியா' (சேகுனா1237) என இத்தொடரை ஆள்வர். 'காத்தமுன் நபியீன்' என்ற அறபுத் தொடர் நபிமார்களுக்கு இறுதி முத்திரை என்ற பொருளைத் தரும்.

முகியித்தீன் புராணக் காப்பியத்தின் முதற் காப்பு வெண்பாவில் இறையருள் வேண்டி, இறுதி முத்திரையாக விளங்கிய நபிகள் நாயகத்தின் நனிபெரும் புகழ் பாடி, அவர்களின் அருமைப் பெயரர் மோன முகியித்தீன் முதிர்சரிதை பாடக் காப்பு வேண்டுவது புலவர் தம் புலமைத் திறத்தையும் இஸ்லாமியத் தெளிவையும் உடன் காட்டுவதாகும். உலகுக்கு உயர் வழி காட்ட, இறையருள், நபிகள் நாயகத்தைத் தந்து பின்னர் அவர் பேரரை உரியகாலத்தில் மார்க்கத்திற்குப் புத்துயிரூட்டத் தந்தது; அதே இறையருள், பாட்டனார் பெயர் இருவர் தம் புகழையும் இனிது நாட்டக் காப்பாக அமைய வேண்டும் என்பதுவே புலவர் கருத்து.

இங்குப் புலவர் யாருக்கும் தோன்றக் கூடிய ஓர் ஐயத்தை வெளிப்படையாக இன்றி மறைமுகமாக, ஆனால் தெளிவாக நீக்கி, இஸ்லாமியக் கொள்கை விளக்கம் செய்யும் முறை அற்புதமானது. இஃது முகியித்தீன் புராணமா நபிகள் நாயகத்தின் புராணமா? இங்குப் பேசப்படுவது பாட்டனார் புகழா பேரனார் புகழா என்ற ஐயம் கற்போர் உள்ளத்தில் எழுவது இயற்கை. பாட்டனாரின்றிப் பெயரனார் ஏது? எனக் கேட்பார் போல, வண்ணக் களஞ்சியப் புலவர் இரண்டாவது காப்புச் செய்யுளில் 'மூவுலகோர் போற்றும் முகம்மதுறசூல் பேரர்' எனப் பாடுவர். இறுதித் திருத் தூதர், எல்லா உலகுக்கும் தூதராக விளங்கியமை இங்கு காட்டப்படும். இராமன் புகழ் பாடவே கம்பன் காப்பியஞ் செய்தான் என்பதில் கருத்து வேறுபாடிருக்க முடியாது.

தசரதன் தனிப் புகழைக் கம்பன் பேசும்போது இராமனையும் பெற்ற தந்தை என எண்ணுவதன்றித் தசரதன் புகழ் இராமன் புகழுக்கு மாறானது எனக் கருதுவாரில்லை. அது போலவே, முகியித்தீன் புகழ் பாடும் இப்புராணத்தில் முகியித்தீன், எந்த இறுதித் திருத்தூதரை நூற்றுக்கு நூறு பின் பற்றி வாழ்ந்தார்களோ, யாருடைய திருப்பாதங்களைத் தம் திருப்புயங்களில் பெரும் பேறாகக் கருதிச் சூட்டிக் கொண்டார்களோ (886), யாரைத் தமையாட் கொள்ள மனு உரு எடுத்து வந்த வள்ளலாக மகிழ்ந்து போற்றினார்களோ, யாரை 'ஒருவன்' தூதாக உவந்து ஏற்றுக் கொண்டார்களோ, யாரைத் தம் உள்ளகப் பொருளாக உவந்து போற்றிக் கொண்டார்களோ அந்த மூதாதை முகம்மதையே (565) வண்ணக் களஞ்சியப் புலவர் முகியித்தீன் புராணத்தில் முதன்மை கொடுத்துப் புகழ்கின்றார் என்பதைப் புரிந்து கொண்டால் இஸ்லாமியக் கொள்கைகளைப் புரிந்து கொள்வதிலும் முகியித்தீன் புராணப் போக்கைப் புரிந்து கொள்வதிலும் குழப்பம் ஏற்பட முடியாது.

முகியித்தீன் புராண புலவர்கள் அனைவரும் நபிகள் நாயகம் இறைவனின் தூதர் என்ற உண்மையையும், இறைத் தூதர்களில் தலைவர் என்ற உண்மையையும், இறுதி நபி என்ற உண்மையையும் பொருத்தமான இடங்களில் எல்லாம் குறித்துச் செல்கின்றனர். வண்ணக் களஞ்சியப் புலவரும் இறுதி நபி என்ற உண்மை (காப்பு-1) காட்டுவர். இறைத் தூதர்களின் தலைவர் என்ற உண்மையை 'நித்திய இறைத் தூதர் யாவர்க்கும் முதியோர்' (5) எனக் காட்டுவர். நபிகள் நாயகத்தைக் குறிக்கும் போதெல்லாம் அவர்கள் இறைத் தூதர்

என்ற உண்மை காட்டுவர். (843). ஓங்கிய அன்பியாக்கட்கு ஒரு தனியரசு......முகம்மது நபி' (1562) எனக் கூறும் புலவர் 'முகம்மது' நபியாகவும் நபிகட்கு அரசாகவும் விளங்கும் திறங் காட்டுவர். காப்பியம் முழுக்க இவ்வுண்மை தொடர்ந்து பேசப் பெறும் (5, 6, 81, 176. 504, 505, 886, 1097).

நபிகள் நாயகத்திற்கு முந்திய இறைத் தூதர்களெல்லாம் ஒரு நாடு ஒரு குலம் என உலகின் ஒரு பகுதியினருக்கு வழி காட்ட வந்தார்கள் எனவும், நபிகள் நாயகம் மட்டுமே அகில உலகுக்கும் வழி காட்ட வந்தார்கள் என்பதும் இஸ்லாமியக் கொள்கையாகும். இக் கருத்தை வண்ணக் களஞ்சியப் புலவர்,

'மன்பதைக் குலமெலாம் வாழ்க வந்ததோர்
நன்பொருள் முகம்மது நபியுல்லா வன்றோ' (536)

எனப் பேசுவர். மேலும் அடுத்த பாட்டில் இக்கருத்தை

'உலகம் முற்றும் .....நற்கதியிற் சேர்த்திட நம்மை
யாள் முகம்மது நபியுல்லா' (637) என வலியுறுத்துவர்.

நபிகள் நாயகம் ஆற்றிய அற்புதங்களையும் (முஃஜிஸா)
புலவர் குறித்துக் காட்டுவர். நபிகள் நாயகம்

மானுக்குப் பிணை நின்ற மாண்பினை உமறுப் புலவர் உயர்வுறப் பாடினார். (சீறா, படலம்-36)

வண்ணக் களஞ்சியப் புலவரும் நபிகள் நாயகத்தின் இவ் வற்புதத்தால் உளம் பிணிக்கப் பெற்று முதற் காப்புச் செய் யுளிலும், பின்னர் பல இடங்களிலும் பாடுவர். (1097, 1493).

மேலும் உடும்பொடு வசனம் பேசிய அற்பு தத்தையும் (1059), தசையினைப் பெண்ணதாக்கிய அற்புதத்தையும் (1555), கிழட்டு ஆட்டைப் பால் தரும் இளைய ஆடாக்கிய அற்புதத்தையும் (1151) மதியை அழைப்பித்த அற்புதத்தையும் (431) பெரும்பான்மையும் உமறுப் புலவர் பாடியவற்றைப் புலவரும் புகழ்ந்து பாடுவர்.

வண்ணக் களஞ்சியப் புலவர் ஆண்டகை புகழ் பாடும் இடத்திலெல்லாம் நபிகள் நாயகத்தின் நற்புகழை முன்னர்ப் பாடுவதோடு, மிகப்பல படலங்களில் முதற்பாட்டில் நபிகள் நாயகத்தின் நற்புகழை முன்னர்ப் பாடக் காண்கிறோம். (படலங்கள்—30, 32, 33, 34, 35, 36, 37, 38, 39,)

நபிகள் நாயகம் இறுதித் தீர்ப்பு நாளில் தம் வழி யினருக்காக இறைவனிடம் மன்றாடி நரகை நீக்கிச் சொர்க்கம்

புகுவிப்பார் என்ற நம்பிக்கையையும் வண்ணக் களஞ்சியப் புலவர் 'நரகு இவர் பெயர் சொன்னாலும் எரிவது மாறி ஓயுமே' (9) எனப் பாடுவர்.

**இறுதித் திருமறை:**

நபிகள் நாயகம் ஆற்றிய மாபெரும் அற்புதமாகக் கருதப் படுவது, அகிலவுலகுக்கும் அருட்பெருங் கொடையாகவும், நூல்களுக்கெல்லாம் தாயாகவும் விளங்குகின்ற இறுதித் திருமறை 'அல்குர்ஆனை'க் கொணர்ந்ததாகும். வல்ல இறைவன் தன்னுடைய வசனங்களை நபிகள் நாயகத்தின் நெஞ்சுகளனாக நா வழியாக வரச் செய்தான் ஆகையால் நபிகள் நாயகத்தின் திருவாயிலைச் 'செழுமறை பிறந்தவாய்' (549) எனப் புலவர் புகழ்வர். நபிகள் நாயகத்தை வேதங் கொணர்ந்தமையால் 'வேதநாயகர்' (839) என்பார். இறை மறை வல்ல இறைவனால் வழங்கப்பட்ட இறை மொழிக ளாகும் என்பதை 'இனியன்மறை' (322), 'ஆதிவல்லவன் குறுஆன்' (597), 'சோதி தன் குறுஆன்' (593) எனப் பேசுவர். இறைமறை இறுதித் தூதராலும் ஆண்டகை போன்ற ஞானியர் களாலும் மக்களினத்திற்குக் கற்பிக்கத் தரப் பட்டது என்ற உண்மையை, 'உயர் மறைநூற் கல்வி' (197) 'எனவும், செயிரறு மறை நூற் கல்வி' (200) எனவும் உரைத்துக் காட்டுவர். இங்கு முழுமையான வாழ்வுக்கு இம்மறை நூற் கல்வியே துணைபுரி யும் என்ற உண்மையும் துலங்கி நிற்கும். 'உயர் மறை' என்ற குறிப்பும் 'செயிரறு மறை' என்ற குறிப்பும் 'எதிரேதுமற்ற சுருதி' (11) என்ற குறிப்பும், சுருதி மெய்ப்பொருள்' (130) என்ற குறிப்பும் காண்க. நூல்களுக்குக்கெல்லாம் உயர்வான நூல்; குற்றம் நீங்கிய புரையிலாப் பெருநூல்; இணையிலாது உயர்ந்து நிற்கின்ற ஒரு நூல்; என்றும் மாறா மெய்ப் பொருள்கள் அடங்கிய நூல் எனவெல்லாம் இறுதித் திருமறையின் இயல்பு களை வண்ணக்களஞ்சியப் புலவர் வகுத்துரைப்பர்.

**கலிறு நபி:**

கலிறு என்றும் கிலிறு என்றும் குறிக்கப் படுகிறவர் இறைத் தூதரா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இஸ்லாமிய ஞான மார்க்கத் தொடர்புடையோர் அனைவரும் இறைத் தூதராகவே கருதுகின்றனர். மேலும் இறைவனுக்கும் இறை ஞானியர்களுக்கும் கருத்துத் தொடர்புக்குப் பாலமாகக் கலிறு நபி இன்றுவரை விளங்கி வருகிறார்கள். கலிறு அவர்களை வானவர்களுள் ஒருவராகக் கருதுவோருமுண்டு. பிற முகி யித்தீன் புராணப் புலவர்களைப் போலவே வண்ணக்

களஞ்சியப் புலவர் கலிறு நபி எனவே கூறுகின்றார். 'கலிறு நபி வாய்மைப் படலம்' (பட—7) எனவே பெயர் சூட்டுவர். கலிறு நன்னபி (114), கலிறுல்லா (192) (இறைவனின் கலிறு), என்ற தொடர்களின் அமைப்பு புலவர் கருத்துக் காட்டுவ தாகும். இறைவனே ஏவ முகியித்தீன் ஆண்டகையோடு இணைந்து உறட்டியும் உதகமும் உண்பர் கலிறு. (317).

மூசா நபி காலத்து வாழ்ந்து பின்னர் நபிகள் நாயகத்தின் காலத்தும் வாழ்ந்து ஆண்டகை காலத்தும் தொடர்ந்து வாழ்ந்த கலிறு நபி அவர்களை 'ஆவிநன்னபி' (327) எனப் புலவர் குறித்தது மிக நீண்ட ஆயுளையுடையார் எனக் காட்டவேயாகும்.

முகியித்தீன் ஆண்டகை கருவிலிருக்கும்போதே இறையே வலால் திருமறை பயிற்றுவித்ததும் (114), செய்கு உதுமானை ஆண்டகை ஏவற்படி ஆண்டகைபால் ஆற்றுப்படுத்தியதும் (611—616) புலவர் கலிறு பற்றிக் காப்பியத்தில் குறித்த களங் களாகும்.

**வானவர் பற்றிய நம்பிக்கை:**

வானவர் (மலக்குகள்) மீது நம்பிக்கை வைத்தல் இஸ்லாமிய இறை நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். (குர்ஆன்- 2: 98). பிற முகியித்தீன் புராணப் புலவர்களைப் போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் காப்பியத்தில் பல இடங்களில் வானவரைப் பற்றிக் குறிப்பர். மலக்குகள் பலர் உற்று (133) ஆண்டகைக் குழவி பிறக்குமளவும் ஆங்கிருந்து சலாஞ் சொலித்துதித்தார்கள் எனப் பாடுவதும், ஜெயிலான் நகரில் ஆண்டகை பள்ளிக்குப் போந்தபோது, அங்கு வந்து இறை வனின் ஒலி வருவதால் இடம்விட்டு ஒதுங்கிப் போற்றுமின் என இறைவனின் வானவர் கூறியதாகப் பாடுவதும் (201), முகியித்தீன் ஆண்டகை ஹஜ்ஜுக்குப் போனபோது ஹபஷி மங்கை கூற்றாக ஆண்டகையை எப்போதும் விண்ணவர் சூழ்ந்து உறைந்து மகிழ்வு சிறந்தார் (414) எனப் பாடுவதும் புலவர் வானோர் பற்றிக் குறிக்கும் இடங்களிற் சிலவாகும்.

**நாயகத் தோழர் பெருமை:**

மனைவியர், மகள் பாத்திமா, மருகர் அலியார், பெயரர் களாகிய ஹஸன் ஹுஸைனார் ஆகியோர் அடங்கிய நபிகள் நாயகத்தின் குடும்பத்தை 'அஹ்லுல்பைத்' என்ற திருமறைத் தொடர் குறிக்கும். (குர்ஆன். 33: 33) நபிகள் நாயகத்திற்கு அடுத்தபடி அவர்களின் குடும்பத்தினரும் நல்லறத் தோழர்

நால்வரும், சொர்க்கம் உறுதி செய்யப்பட்ட பதின்மரும் பிற நாயகத் தோழர்களும் இஸ்லாமியப் பார்வையில் பெருமைக் குரியோராவர். நபிகள் நாயகத்திற்குப் பின்னர் மார்க்கச் சட்டங்களை விளக்கிப் போந்த மார்க்க அறிஞர் நால்வரும் (இமாம்கள்) இறைஞானியர்களும் அடுத்த சிறப்புக்குரியோரா வர். இவர்கள் அனைவருமே வண்ணக்களஞ்சியப் புலவரால் கடவுள் வாழ்த்துப் படலத்தில் வாழ்த்தப் பெறுகின்றனர். (5— 28).

**சுவர்க்கம் நரகம் பற்றிய நம்பிக்கை:**

சுவர்க்கம், நரகம் பற்றிய நம்பிக்கை இஸ்லாத்தில் வலியுறுத்தப்படுகிறது. திருமறையில் அவற்றின் வருணனைகள் இடம் பெறுகின்றன. (குர்ஆன். 3: 185, 9: 72), சேகுனாப் புலவர் திருமறைக் கருத்துக்கள் பலவற்றைச் சுவர்க்க நரக வருணனைகளில் குறிப்பர். (சேகுனா— 6; 1116— 1122). வண்ணக் களஞ்சியப் புலவரும் சுவர்க்கம் நரகம் பற்றிய குறிப்புகளை ஆங்காங்கே வழங்கியுள்ளார். சுவர்க்கத்தை 'சென்னத்' (ஜன்னத்) (505) என்னும் அறபுச் சொல்லால் புலவர் குறிப்பர். அதன் தமிழ் விளக்கமாக 'நெடிய பொற்பதி' என்பார். (132). சுவர்க்கப் பதியிலுட் புகுந்தால் அழிவின்றி நெடுங்காலம் நிறைவாக வாழ்வர் என்ற குறிப்பையும், பொன்னுலகு எனக்குறிக்கப்பெறும் தமிழ்மரபையும் போற்றிப் புலவர் நெடிய பொற்பதி என்றார். நபிகள் நாயகமும் முகியித்தீன் ஆண்டகையும் ஆற்றிய அரும்பணி இறையடியார்களைச் சுவர்க்கம் சேர்க்கும் சிறப்புடையதாதலின் இருவரையும் சுவர்க்கம் புக வழி காட்டுவோர் எனவே புலவர் புகழ்வர். சென்னத் என்பதைத் தரு தேவரீர் (505) என நபிகள் நாயகத்தையும், கதி புகும் வழியைக் காட்டும் காரணக் குரு (207) என ஆண்டகையையும் புலவர் போற்றிப் பாடுவர். ஆண்டகையின் அவதாரப் படலத்திலேயே நெடிய பொற்பதி, நல்லடியார்களால் நிறைந்து விடுமாறு முகியித்தீன் மண்ணுலகில் உதித்தனர் (132) எனப் பாடுவர். முகியித்தின் ஆண்டகையைப் போற்றி இறை மார்க்கத்தில் உறுதியாக நின்றோர், நரகம் நீங்கிச் சுவர்க்கம் பெறுவர் என்ற சுபச் செய்தியைப் புலவர் பல பாடல்களில் குறிக்கின்றார். (260,261,309,490,600, 819).

**இபுலீசு (சைத்தான்):**

மனித குலத்தை வழி கெடுக்கும் கொடியோனை 'இபுலீசு' எனவும் சைத்தான் எனவும் இறுதித் திருமறை குறிக்கும்.

இபுலீசு என்ற சொல் இறை மறையில் ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களிலும் சைத்தான் என்ற சொல் பல இடங்களிலும், இரண்டு சொற்களும் இணைந்து சில இடங்களிலும் குறிக்கப் படுகின்றன. (2:34; 4:118, 119; 7:11, 13.)

முகியித்தீன் புராணப் புலவர்கள் இறைமறைச் செய்தி களின் வழி, பல கருத்துக்களைத் தம் காப்பியங்களில் பேசுவர். தருமம் அகற்று இபுலீசு (131), கலைவு செய் கொடியோன் (372), பொய்மையோன் (374), தூண்டிலிட்டு இழுப்பார் போல நல்லவர் போல நடித்து அடுத்துக்கெடுக்கும் வேடதாரி (376) எனவெல்லாம் அவர் இழிவு பேசுவர் வண்ணக் களஞ்சியப் புலவர். நபிகள் நாயகம் பிறந்தபோது இபுலீசு வருந்தி அழுது புலம்பியது போலவே, முகியித்தீன் ஆண்டகை பிறந்த போதும், இபுலீசு மனத்தில் துயரந்தோன்றியதாகவும், இறைவனுடைய வானவர்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சி தோன்றியதாகவும் (131) புலவர் பாடுவர். ஜின் பாம்பாக வந்து ஆண்டகையைச் சோதித்த இடத்திலும் வண்ணக் களஞ்சியப் புலவர் இது போன்றதொரு ஒத்த களத்தைப் படைத்துக் காட்டுவர். ஆண்டகையின் பாதங் கண்ட கணத்தில் ஜின் முன்பு செய்த பவமெலாம் அழியப் போதங் கண்டதாகவும் புனிதங் கண்டதாகவும், நீதங்கண்டதாகவும், நெடுந்தவம் கண்டதாகவும் மகிழ்ந்தபோது, இபுலீசு என்னும் தீயோன் மட்டும் கைச்சேதங்கண்டதாகப் புலவர் பேசுவர் (306).

முகியித்தீன் ஆண்டகையின் அருந்தவத்தை அழிக்கத் தன் படைகளை ஏவிய இபுலீசையும் அவன் கூட்டத்தையும் ஆண்டகை இறையருளால் அடித்து ஓட்டிப் பொடிப் பொடி யாய் நூறிய முறையைப் புலவர் பொருத்தமுறப் பேசுவர் (288, 289).

**பிற செய்திகள் :**

உணவு உண்ணத் தொடங்கும்போது இறைவனை நினைந்து அவனுக்கு நன்றி செய்பவனாக இறைவன் பெயரால் 'பிசுமில்' ஓதி உண்ணுவது இஸ்லாமிய மரபு கிஞ்சுகங்களும் பூவைகளுங்கூடப் பிசுமில் ஓதி அருந்தும் எனப் பாடுவார் (78). அது போலவே உண்டு முடித்ததும் இறைவனுக்கு நன்றி பாராட்டும் வகையில் இறைப் புகழ் ('அல்ஹம்துலில்லாஹ்' இறைவனுக்கே எல்லாப் புகழும்) ஓதும் இஸ்லாமிய மரபையும் (52) ஆண்டகை வாயிலாகவே புலவர் காட்டுவர்.

இறைவனைப் புகழ்வதும் இறைவனுக்கு அடுத்தபடியாக நபிகள் நாயகத்தைப் போற்றுவதும் இஸ்லாமிய மரபு (ஹம்து சலவாத்). இம்மரபு உணர்ந்த புலவர் சலவாத் எனப்படும் நபி புகழ் மொழிகள் நாடெங்கும் முழங்கியதாக நாட்டுப் படலத்தில் (81) பாடுவர். பகுதாது நகரிலும் கபீபு முகம்மதின் சலவாத் ஓதை (941) சிறந்து விளங்கியதாகப் பாடுவர். நகரப் படலத்தும் முகம்மது சலவாத் தோதை (91) ஓயாது ஒலித்தது எனப் பாடுவர் (1612).

வாழ்வில் நன்மை நிகழ்ந்த போதெல்லாம் இறைவனுக்கு நன்றி செலுத்தும் இஸ்லாமிய மரபினையும் புலவர் குறித்துக் காட்டுவர். (168, 230.) தமக்கு மட்டுமின்றிப் பிறர் நன்மைக் காவும் இறைவனை வேண்டும் இஸ்லாமிய மரபையும் புலவர் போற்றுவர் (325, 406, 626, 777).

ஒருவரை யொருவர் காணுகின்றபோது இறையருளால் நலம் விளைய வாழ்த்துக் கூறும் (சலாம் கூறும்) இஸ்லாமிய மரபும் புலவரால் போற்றப் பெறும் (253, 609, 618).

சிறிதேனும் பெரிதேனும் சொன்ன சொல்லை—கொடுத்த வாக்குறுதியைப் பேணிக்காத்தல் இறைமறையும் நபிவழியும் போற்றும் நலமிகு பண்பாகும். ஒரு தோழரிடம் கொடுத்த வாக்குறுதிக்காக நபிகள் நாயகம் ஒருநாள் முழுதும் குறித்த இடத்தை விட்டு நீங்காது நின்ற வரலாறு வையகம் அறிந்த தாகும். இந்த இஸ்லாமியப் பண்பைப் பாட்டனார் வழிநின்று போற்றிய முகியித்தீன் ஆண்டகையும் கிலிறு நபியிடத்து உரைத்த வாய்மைப்படி மூன்றாண்டுகள் தொடர்ந்து காத் திருந்ததைக் கவினுறப் புலவர் பேசுவர் (313—315).

மனைவியல்லாத பிற பெண்ணோடு உறவு கொள்வது இஸ்லாம் வெறுத்தொதுக்கி விலக்கிய தொன்றாகும் என்ற உண்மையையும் புலவர் காட்டுவர் (1584). இறந்தவர்க்குச் செய்யப்படும் இஸ்லாமியச் சடங்குகளை முறையாக எடுத் தியம்புவர் (1530, 1547),

இஸ்லாமிய மது மறுப்புக் கொள்கையை உவமையில் வைத்து உயர்த்திக் காட்டுவர் (368).

பெண்கள் உடல் அழகு புறத்தே தோன்றாதவாறு ஆடை யால் உடல் முழுவதையும், முடிந்தவரை முகத்தையுங் கூட மறைத்துக் கொள்வதும், பெண்கள் இருக்குமிடத்தில் திரையிட் டுக் கொள்வதுமாகிய கோஷாமுறையை றாபியா அம்மையார் போற்றியாங்குப் புலவர் புகல்கின்றார் (702, 705, 708, 709, 710, 730).

உணவு உண்ணும்போது இருப்பதை உடனிருப்போருக்கும் பகிர்ந்தளித்து எஞ்சியதை உண்ணும் இஸ்லாமிய மரபை ஆண்டகை போற்றியாங்கு புலவர் பாராட்டுவர் (796).

## இ. இஸ்லாமியச் சன்மார்க்கமும் ஞான மார்க்கமும்

இஸ்லாமிய சன்மார்க்கம் (ஷரிஅத்), இஸ்லாமிய ஞான மார்க்கம் (தரீக்கத்) என்னும் இரண்டும் இரு மார்க்கங்கள் அல்லதுநெறிகளல்ல.'தீன்' எனப்படும் இறைமார்க்கம்வகுத்துத் தந்துள்ள வாழ்க்கை நெறி முறைகள் சன்மார்க்கம் என இங்குக் குறிக்கப் பெறுகின்றது. ஞானமார்க்கம் என நாம் விளக்கத்திற்காகக் குறிப்பது, 'ஷரிஅத்' எனப்படும் சன்மார்க்கச் சட்டங்கட்கு மெய்ஞ்ஞானிகள் தம் அனுபவத்தால் ஆய்ந்து தந்த விளக்கங்களே தவிரப் புதிய மார்க்கமன்று. நபிகள் நாயகம் உட்பட நபித் தோழர்களாகிய அபூபக்கர், அலியார் ஆகியோர் தொடங்கி, இப்ராஹீம் இப்னு அத்ஹம், ஹஸன்பஸரி, றாபியத்துல் பசறிய்யா, முகியித்தீன் அப்துல் காதர் ஜீலானி போன்ற மெய்ஞ்ஞானியர் இஸ்லாமிய மெய்ஞ் ஞான அமுதைப் பிறர் உளங் கொள ஊட்டும் உறுபணியில் உயர்ந்து விளங்கினர். இப்பணியில் இம் மெய்ஞ்ஞானியர் மேற்கொண்ட வழிமுறைகளே இஸ்லாமிய ஞான மார்க்கம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இஸ்லாமிய மெய்ஞ் ஞானியர் ஞான மடங்களை உருவாக்கித் தம் சீடர்களுக்குப் பயிற்சி தந்தனர். இங்குப் பயிலப் பட்டது சன்மார்க்கம்; பயிலுதற்கு மேற்கொண்ட நெறிமுறை ஞான மார்க்கம் எனப் பெயர் பெறுகிறது. இப்பணியை மெய்ஞ் ஞானியர்கள் நிறுவன அடிப்படையில் செய்யத் தொடங்கியபோது, நிறுவனங்களாகிய ஞானப்பாட்டைகள் 'தரீக்கா'க்கள் என அழைக்கப் பட்டன. இதுவரை நாம் விளக்கிய செய்திகள் 'ஷரிஅத்' எனப்படும் இஸ்லாமியச் சன்மார்க்கச் சட்டங்களைச் செயல் படுத்துவதற்கும், தெளிவு படுத்துவதற்கும் நிறுவன அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இஸ்லாமிய ஞானமார்க்கம் (தரீகத்) எனப் பெயர் பெறுகிறது என்பதே யாகும். இஸ்லாமிய ஞான மார்க்கம் ஷரிஅத் எனப்படும் இஸ்லாமியச் சன்மார்க்கத்திலிருந்து இம்மியும் மாறுபடாது; மாறுபடின் அஃது இஸ்லாமிய ஞான மார்க்கம் என்ற பெயர் பெறாது.

நபிகள் நாயகம், தம்மை ஞானத்தின் கோட்டையாகவும் அலியார் அவர்களை அதன் வாயிலாகவும் கூறினர்.[23] இக் குறிப்பு ஞானமார்க்கம் நபிகள் நாயகத்திடமிருந்தே தொடங்கு

கிறது என்பதைக் காட்டும். நபிகள் நாயகம் தம் தோழர்களுக்கு நேரடியாகவே பயிற்சி தரும் ஞானாசிரியராகத் திகழ்ந்தார்கள். நாயகத் தோழர்களிடம் ஞானப் பயிற்சி பெறும் வாய்ப்பு அவர்களின் தோழர்களுக்குக் கிட்டியது. இங்ஙனம் மூன்று தலைமுறையினருக்கு நபிகள் நாயகமே தரீகத் என்னும் ஞானப் பயிற்சியை வழங்கினர். அதற்குப் பின்னர் பிற மெய்ஞ்ஞானியர் ஞானப் பயிற்சிதரும் தேவை ஏற்பட்டது. காலப்போக்கில் அத்தேவையின் அளவு மிகுதிப்பட்டது. அத்தேவையை நிறைவு செய்யும் போக்கில் மெய்ஞ்ஞானியர் பலரும் பல நிறுவனங்களை (தரீக்குகள்) ஏற்படுத்தித் தம் சீடர்களுக்குப் பயிற்சி தந்தனர். இதுவே ஞான மார்க்கம் (தரீகத்) தோன்றிய வரலாறாகும்.

நிறுவன அமைப்பில் பல்வேறு தரீக்காக்கள் தோன்றி மெய்ஞ்ஞானப் பயிற்சி தந்தன. நூற்று எழுபத்தைந்து சூஃபி தரீக்குகள் இருப்பதாகச் சையிது இபுறாகீம் அவர்கள் கணக்கிடுவர்.[29] ஜாமிவுல் உசூல் என்ற நூலில் நாற்பது தரீக்காக்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.[30] உலகப் புகழ் பெற்ற பதினான்கு தரீக்காக்களில் ஐந்து அமைப்புகளே இந்தியாவில் புகழ் பெற்று வளர்ந்துள்ளன. அவற்றுள் தலையாயது 'காதரிய்யா தரீக்கா'.

நிறுவன அமைப்பில் உருப்பெற்ற உலகப் புகழ் பெற்ற முதல் தரீக்கா காதரிய்யாவேயாகும் ஆண்டகை காலத்திலேயே மக்களிடம் செல்வாக்குப் பெற்ற காதரிய்யா தரீக்கா உலகெங்கும் பரவியுள்ளது.

முகியித்தீன் புராணப் புலவர்கள் அனைவரும் காதரிய்யா தரீக்காவில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பது அவர்தம் காப்பியங்களால் தெளிவாகிறது.

வண்ணக் களஞ்சியப் புலவர் இறைநேயர்களாகிய மெய்ஞ்ஞானிகளை 'அவுலியா'க்கள் எனவே குறிப்பர். (180) இறைமறையில் அவுலியா என்ற சொல் இடம் பெற்றுள்ளது. (குர்ஆன்-10:62—64). இறைமறை உரைகாரர்கள் அத்தொடருக்கு அல்லாவுக்குச் சொந்தமான நல்லடியார்கள் என்றும், இறை நேயர்கள் என்றும், மெய்ஞ்ஞானிகள் என்றும் பொருள் கொண்டுள்ளார்கள். இறை அண்மை பெற்ற இறைநேயர்கள் இறைப் பண்புகளைத் தம்முள் ஆக்கிக் கொள்கிறார்கள். இறைவனின் தலைமைப் பண்பு அருளே ஆகும். ஆகவே வண்ணக்களஞ்சியப் புலவர் 'அருளுருக் கொளும் மனத்து அவுலியாக்கள்' (534) எனக் குறிப்பர். இறைநேயர்களாகிய

அவுலியாக்கள் அனைவர்க்கும் மேலானவர் முகியித்தீன் ஆண்டகை எனக் கிலிறுநபியின் வாய் மொழியாக வண்ணக் களஞ்சியப் புலவர் வகுத்துரைப்பர் (187,188).

வண்ணக் களஞ்சியப் புலவர் கிலிறுநபி வாய்மைப் படலம என ஒரு தனிப்படலத்தை இஸ்லாமிய மெய்ஞ்ஞான வரலாறு கூறவே தனியாகப் படைத்துள்ளனர். நாம் கண் முன் காணும் உலகு போலவே மெய்ஞ்ஞான உலகும் இறையருளால் தனிச் சட்டங்களைக் கொண்டு தனித்தியங்கிக் கொண்டிருக்கிறது. அதனை இறை நேயர்கள் அல்லாதோர் அறிய இயலாது. மெய்ஞ்ஞானவுலகு பற்றிய சில உண்மைகளைப் புலவர் எடுத்துரைக்கின்றார். இறுதித் திருத்தூதராகிய நபிகள் நாயகம் பொன்னுலகு புகுந்த பின்னர் இறை மார்க்கத்திற்கு வழி காட்டுவார் இல்லையே என வருந்திய நிலவுலகு, இறைவனை நோக்கி, இனி யார் ஏவலின்படி செயல்படுவது என முறையிட்டது. அம்மொழிக்கு மறுமொழி கூறத் தொடங்கிய இறைவன், நபிமார்கள் போல நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற அவுலியாக்கள் எனும் இறைநேயர்களை நிலத்தில் உருவாக்கி வழிகாட்டியிருப்பதாக நிலவுலகுக்கு ஆறுதல் கூறுகின்றான். (176—181)

இறைநேயர்களின் பல்வேறு படித்தரங்களையும் புலவர் இப்படலத்தில் எடுத்துக் காட்டுகின்றார் (182—183). 'நுகபா'க்கள் முன்னூறு பேர்; அவர்களின் உயர்ந்த 'நுஜபா'க்கள் எழுபது பேர்; அவர்களினும் மேம்பட்ட 'புதலா'க்கள் நாற்பது பேர்; அவரினும் மிஞ்சியோர் 'அக்யாறு'கள் பத்துப் பேர்; 'உறபா'க்கள் ஏழு பேர்; 'அன்வார்'கள் ஐந்து பேர்; 'அவுதாது'கள் நான்கு பேர்; 'முகுத்தாறு'கள் மூன்று பேர் ஆவர். இவ்வெட்டு வகையினருக்கும் தலைமையாம் தகுதி பெற்றோர் 'குத்பு' எனப்படுவார்.

பழைய பதிப்பின் அடிக்குறிப்பில் குத்பு, கௌது என்ற ஞானத் தலைமைப் பெயர்கள்இரண்டும் 'ஒன்றெனக் கொள்க' எனக் கூறப்பட்டுள்ளது. இஃது மெய்ஞ்ஞானியர் கருத்துப் படியும் வண்ணக் களஞ்சியப் புலவர் கருத்துப்படியும் ஏற்க இயலாததாக இருக்கிறது.

வண்ணக் களஞ்சியப் புலவர் 'தாழுறா இவர்கட்கெல்லாம் தலைபதி கௌது' எனக் குறிப்பதையும், அடுத்த அடியில் 'சூழும் இன்னவர்க்குத்தானே குத்பெனு நாமஞ் செல்லும்' என்பதையும் (183) பிறழ உணர்ந்து புலவர் கருத்து குத்பும் கௌதும் ஒன்றேயாகும் என மயங்கியுள்ளார் பதிப்பாசிரியர். உண்மையில் புலவர் எண்ணம் அதுவன்று. 'தாழ்ந்தோர்

உயர்ந்து வந் தெய்தி யெய்தி..... குத்பாய் வாழ்வர்' (186) எனவும், 'உயர்ந்த இத்தவத்தோர் தம்முள் உண்டவர் எவர்க்கும் மேலாம் வயங்கிய அப்துல் காதிர்' (188) எனவும், 'முகம்மது பெயரர்... ... ... குத்பு' கட்கு அரசு' (191) எனவும் புலவர் வழங்கும் குறிப்புக்கள் சிந்தனைக்குரியன. மேலும் பகுதாது புகுந்த ஆண்டகையை வாழ்த்தும் அபுல்வபா அவர்களைப் புலவர் 'அந்நாள் உற்ற குத்பு' (234) எனக் குறிப்பர். இக் கருத்தை அடுத்த பாட்டிலும் ஆண்டகை, அபுல்வபாவிடம் சென்றதை, 'குத்புபால் போயினாரே' (235) எனக் குறிப்பர். பின்னர் அபுல்வபா அவர்கள் அவையோரை நோக்கிப் "புனித நம் குத்புக் கெல்லாம் உவப்பரசு இவரே" (241) என ஆண்டகையைக் குத்புகளுக்கெல்லாம் இவர் அரசாவர் எனக் கூறுகின்றார். மீண்டும் ஆண்டகையை நோக்கி அக்காலக் குத்பாகிய அபுல்வபா, 'முகியித்தீனே, எதிர் காலத்தில், 'நண்ணிய குத்புக்கெல்லாம் நாயகம் ஆகும்' காலத்தில் (248) 'என்னையும் நினைக' எனக் கூறியதாகப் புலவர் பாடுவர். 'குத்புக்கெல்லாம் அரசு இவர்' எனவும், 'குத்புக்கெல்லாம் நாயகம் ஆகுங் காலம்' எனவும் பேசும் புலவர் நடை ஒரு காலத்தில் பல குத்புகள் வாழ்வர் என்பதையும், அவர்கட்கு அரசாகவும், நாயகமாகவும் ஆண்டகை திகழ்வர் என்பதையும் தெளிவுபடுத்தும், மேலும் குத்பாக வாழ்வோர் ஞானத் தலைமை, அங்கு அவர் வாழுங்காலம் மட்டுமே (243) எனவும், ஆண்டகையின் தலைமை 'ஓயாது கியாமநாள் காணு மட்டும்' (244) சிறப்புறும் எனவும் அபுல்வபா பேசுவதாகப் புலவர் காட்டுவர். இக்குறிப்பு ஒரு குத்பின் ஞானச் செங்கோல் அவர் காலத்து மட்டுமே செல்லும் என்பதையும் ஆண்டகையின் ஞானச் செங்கோல் இறுதி நாள்வரை நடக்கும் ஆதலின் ஆண்டகை குத்புகட்கு அரசராக—கௌதாக — விளங்குகிறார்கள் என்பதையும் தெளிவுபடுத்தும்.

முகியித்தீன் ஆண்டகையைக் குத்பு நாயகம் எனச் சேகுனாப் புலவரும் வண்ணக் களஞ்சியப் புலவரும் அழைத்திருப்பதே, குத்புகள் பலராவர் என்பது காட்டும் அவர்களின் தலைமைக் குத்பாக—கௌது ஆக—ஆண்டகை விளங்குவதை அத்தொடர் குறிக்கும் என்பதும் தெளிவு, நம் புலவர்க்கு முந்திய சேகுனாப்புலவரும், அபுல்வபா அவர்கள் ஆண்டகையைப் பாராட்டும் வகையில், 'குத்புகளாக உயர்வு பெற்றோர் அனைவரும் போற்றுதற்குரிய தகுதியையுடைய கௌது ஆக எதிர் காலத்தில் ஆண்டகை திகழ்வர்' எனப் பாடுவர் (சேகுனா—பா. 474). இவையெல்லாம் குத்புப்பட்டத்திலும்

கௌதுப் பட்டமே பெரிது என்ற உண்மையைக் காட்டும். இறைவன் ஆண்டகையைக் கௌதுல் அஃலம் (பாதுகாவலர் களின் தலைவர்) என அழைத்ததாக ஆண்டகை தம் சீடர் களுக்குத் தம் பொய்யுரையா நாவால் புகன்றுள்ளனர்.[31]

**குருவின் பெருமை :**

இஸ்லாமிய மெய்ஞ்ஞான மார்க்கத்தில் ஒரு சீடர் ஞான வழியில் முன்னேற்றம் அடையக் குருவின் தேவை இன்றியமை யாததாகக் கருதப்படுகிறது. செய்கு உதுமான் அவர்கள், ஞானத்தேட்டம் பெற்று, அத்துறையில் தம்மை முன்னேற்றும் குருவின்றித் தவித்து நின்று, இறைவனை நோக்கி, 'உன்னை நெஞ்சறிவுறுத்தித் தேற்றும் குருவுக்காக ஏங்கி நிற்கின்றேன்; அத்தகைய ஒருவருக்காக என் உடல், பொருள், ஆவி மூன்றையும் தருதற்கு அருள் புரிவாய்' என இறைவனை வேண்டுவர் (608). இப்பகுதி குருவின்றி ஞானவழியில் முன்னேற இயலாது என்பதையும், குரு ஒருவரைப் பெறுதல் இறைவனின் அருள் என்பதையும் காட்டுவதாகும்.

**ஞான தீட்சை பெறும் முறைகள் :**

இஸ்லாமிய மெய்ஞ்ஞான நெறியில் ஞான தீட்சை பெறும் முறையினை 'முரீது பெறுதல்' எனப் பேசுவர். ஞான தீட்சை பெறும் மாணவர் 'முரீது' எனப் பெறுவார். குரு 'செய்கு' எனக் குறிக்கப் பெறுவார். ஆசிரியர் சீடருக்கு உபதேசம் செய்தலை 'நசீகத்' செய்தல் எனக் குறிப்பர் (246). முகியித்தீன் ஆண்டகை ஞானவழி முறையின்படி அபூசகீது என்னும் ஞானாசிரியரிடம் முரீதாக இருந்து உபதேசம் பெற்ற செய்தி யைப் புலவர் பாடுவார் (340). பின்னர் உபதேசம் பெற்ற மாணவருக்கு ஞானாசிரியர், ஆடைபூட்டுவார். அது 'கிர்க்கா' எனப்படும். இதனைப் பொன்னணி ஆடை ஈந்து என்பர் புலவர் (341), பின்னர் பல்வேறு இஸ்லாமிய மெஞ்ஞான மார்க்க அறிவு வகைளையும் தந்து உபதேசம் செய்ததைக் குறிப்பார். மேலும் 'மன்னிய கிலாபத்தும் மகிழ்வொடு புரிந்தார்' எனப் பாடுவர். கிலாபத் என்பது சீடர்களுக்கு (முரீதுகள்) ஞான உபதேசம் செய்யும் தலைமைத் தகுதி யாகும். பிறரை மெய்ஞ்ஞான நெறிப் படுத்தும் தலைமைத் தகுதியைய்ும் அபூசகீது ஆண்டகைக்கு மகிழ்வொடு வழங் கினார்கள் (341). நபியேவு படலத்தில் நபிகள் நாயகத்தால் ஏவப் பெற்று ஆண்டகையை அடைந்த அபுல்ஹஸனும் அவரது தந்தையாரும், ஆண்டகையிடம் ஞான வழியில் உபதேசம் பெற்றுச் சிறப்பெய்தியமையைப் புலவர் பாடுவர் (539—541).

ஆண்டகை அபுல்ஹஸனுக்குக் கிர்க்கா என்னும் குரு சீடருக்குப பூட்டும் ஆடையை அணிவித்ததையும், 'சில்சிலா' எனும் பட்டயம் எழுதித் தந்ததையும் பாடுவர் (540). சில்சிலா என்பது ஞானாசிரியரின் முந்திய வழி முறையினரின் பெயர்ப் பட்டியலாகும். ஒரு ஞானாசிரியர், தமக்கு உபதேசம் செய்த ஞானாசிரியர், அவருக்கு உபதேசம் செய்த ஆசிரியர் எனத் தமது குரு பரம்பரை பற்றிய பட்டியலைத் தமது மாணாக் கருக்கு வழங்குவர். இதனைப் புலவர் 'கோது அடி வகை' என்பார். இங்கு ஆண்டகைபால் உபதேசம் பெற்ற அபுல்ஹஸனார் தாம் உபதேசம் பெற்றமையால் பெற்ற பயன் களையும் விளக்கிப் பேசுவர் (541).

ஞான தீட்சை பெறுவோர் பக்குவ நிலை பெறுவதற்குக் 'கல்வத்' (குறித்த காலம் தனியிடத்தே ஞான நிட்டையில் இருத்தல்) என்னும் பயிற்சி நிலையினை இஸ்லாமிய மெய்ஞ் ஞானிகள் காட்டியுள்ளனர். 'நாற்பது நாட்கள் எவர் கலப்பற்ற மனத்துடன் அல்லாவைத் தியானிக்கிறாரோ அவருடைய மனத்திலிருந்து ஞானத்தின் ஊற்று நாவழியாக வெளியாகும்' என்பது நபிமொழியாகும்.[32] இதனடிப்படையில் இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகள் நாற்பது நாட்கள் மூன்று மாதம் எனக் காலம் கணக்கிட்டு மனம் ஒன்றிய இறைத் தியானமாகிய 'கல்வத்' தில் தம் சீடர்களை இருத்துவர். இதனை வண்ணக் களஞ்சியப் புலவர் காதரிய்யா தரீக்கா வழியில் பயிற்சி பெறும் சீடர்களின் ஞானப் பயிற்சி வகைகளைத் தொகுத்துரைக்கும் போது பேசுவர், (347, 348) செய்கு உதுமானைச் சீடராக ஏற்றுக் கொண்ட முகியித்தீன் ஆண்டகை மூன்று மாதம் கலப்பின்றி நிட்டையில் இருக்கும் கல்வத்துப் பயிற்சியை அவருக்குக் கொடுத்தார்கள் எனப்புலவர் பேசுவர்(627). கல்வத் தின் விளக்கத்தை, 'ஈரொரு திங்கட்காலம்......... மாறிலா துறைய வென்றே வகுத்துரைத்தனர்;..............நிட்டை கலைவுறாத்தவஞ் செய்தேனே' எனச் செய்கு உதுமான் வாய் மொழியாகப் புலவர் வகுத்துக் காட்டுவர்.

**தவத்தின் விளக்கம்:**

தவத்தில் தலை நின்ற மெய்ஞ்ஞானியர் தலைவராகிய ஆண்டகை பற்றிய காப்பிய மாதலின் ஆண்டகை யின் முன்னோர், பிறஞானியர், தோழர் ஆகியோ ரைப் பேசும் போதெல்லாம் தவநெறியின் இயல்புகளைத் தகவுறப் பேசுவர். 'புலன்தரு பொறியில் நெஞ்சம் புகுத்திடாத் தவம்' (25), புலன்கள் போமியல் வழியே புகுத்திடாத் தவம்

(89) எனத் தவத்தின் பயன் பொறி புலன்களைச் சென்ற விடத்துச் செலவிடாது காத்தலேயாகும் எனக் காட்டுவர். தவசியர் நிலையை அறிவுயர்ந்து அடங்கும் நிலை (67) என அறிவுடைமையும் அடக்கமுடைமையுமே தவத்தின் இயல்புக ளெனக் காட்டுவார்.

கலிறுநபி வாய்மைப் படலத்தின் முதற்பாடலில் தவசியின் இலக்கணத்தைத் தகவுற மொழிவர். 'பொறி வழி மனம் புகாது புரிதவம்' எனத் தவத்தின் இலக்கணத்தைத் தகவொடு கூறுவர். தவசிகளின் உள்ளப் பெருமையை ஞானம், கல்வி, அறிவு. ஒழுக்கம், அன்பு, பொறை, நிறை ஆகிய புனிதப் பண்புகளெல்லாம் நிறைந்த உள்ளம் (172) என்பார். அடுத்த பாடலில் கிலுறுநபி பெருமை கூறும் வகையில் 'புலமெலாம் அடக்கிச் செய்யும் தவம்' (173) என்பர். மேலும் அத்தவசியர் உள்ளத்தைக் குவியிரு வினைகள் நீங்கும் கோதிலா மனம் என்பர். (176) மேலும் பெருகிய 'தவஞ்சீர் அன்பு பிரிவறும் உள்ளத் தோராய அவுலியாக்கள்' என்பர். (180) இஸ்லாமிய ஞானிகளின் தலையாய பண்புகளாகப் பொறுமையும் சகிப்புத் தன்மையும் பேசப்படும். வண்ணக் களஞ்சியப் புலவர் 'தவத் தினுக் கழகு மாறாப் பொறை' என்பர். (241). மேவும் ஆண்டகையைப் பூரணப் பொறுமை காட்டும் புண்ணியப் பொருள் (238) என்பர். ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும் மலங்களையும் நீத்த வித்தகர்களாகிய இறை நேயர்களை 'ஆணவத்தொடு மூன்று அறும் அவுலியாக்கள்' என்பர். (301)

> " முத்தொகை வுலகு முய்ய முதிர் பெருங் கல்வி ஞான
> வித்துவந் துலகத் தூன்றி வளர்தல் போல் விளங்கி
> னாரே" (198)

என மெய்ஞ்ஞான வித்தாக பூமியில் தோன்றி, மெய்ஞ்ஞானப் பெரு மரமாக வளர்ந்து, ஞான நன்னிழல் எனும் ஒரு குடையில் அகில உலகத்தையும் செங்கோலாட்சி செய்த முகியித்தீன் ஆண்டகை பற்றிய காப்பிய மாதலின், எல்லா இடங்களிலும் இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் துறை பற்றிய பல்வேறு கருத்துக் களையும் புலவர் பேசிச் செல்வர். (1-0, 172, 439, 527, 1158.)

**குருவிடம் பேரன்பு:**

குருவிடம் சீடர் கொள்ளும் அளப்பரிய அன்பு பற்றிப் பல விடங்களில் வண்ணக் களஞ்சியப் புலவர் பேசுவர். குருபரனை ஒருபரனாகக் கொள்ளும் நிலை இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்தில் இல்லை. ஆயினும் ஒருபரனை உள்ளபடி உணர்த்திக் காட்டி, அவனுக்கே உள்ளத்தில் இடம் தரும் வழி

யைக் காட்டும் குருபரனை ஒருபரனுக்கு அடுத்தபடியாகப் போற்றும் நிலையுண்டு. செய்கு அப்துற்றகுமான் தம்முடைய ஞானத்தலைமையை மிகுத்துப் பேசியபோது, அவையிலிருந்த ஆண்டகையின் சீடர் அபுல் ஹஸன், செவிகளை அச்சொற்கள் சுட்டன எனவும், விழிகளில் அழல் எழுந்தது எனவும், மேலும் மல்லுக்கு எழுந்தனர் எனவும் பாடுவது குருவின்பால் சீடர் கொள்ளும் அன்பு காட்டுவதாகும். (823). மேலும் 'வெல்லும் என் குரு' (827) எனவும் பேசுவர். அப்போது செய்கு அப்துற் றகுமான் உமது குரு யார் எனக் கேட்க, 'செய்கெனப் பெயர் பெறுபவர் எவர்க்கும் ஓர் செய்காவர் என் செய்கு, அவர் பெயர் அப்துல்காதிர்' எனப்பாடுவர். (830). இக்களத்தில் குருவிடம் சீடர் கொண்ட அளப்பரிய அன்பைப் புலவர் காட்டு வர். செய்குதனாவின் சீடர் செய்கு பரீது, தம் குருவிடம் கொண்ட பேரன்பும் (1178, 1183, 1186), ஒலுச்செய்யும்போது பெண்ணைக் காமுற்று உருமாறிய செய்கின் மாணவர், குரு விடம் கொண்ட பேரன்பும் (1593— 1598) காட்டப்படும். அத்தகு சீடரை ஆண்டகை 'பசும் பொன் நற் குணத்தீர்' (1599) எனப் பாராட்டுவர். அபாபக்கரில் கம்மாமியின் சீடர், முலப்பர் தம் குருவிடம் கொண்ட பேரன்பும் (464— 467), கலையருட்படலத்தில் ஆடை நெய்வோன், ஆண்டகையை, 'எந்தமைப்புரக்குங்கோமான்எழிற்குரு' எனப்போற்றி, அரசன் அழைத்தும் அதனை மதியாமல் ஆண்டகைக்கு அரிய ஆடை ஒன்றைக் கையுறையாக எடுத்துச் சென்று ஆண்டகைபாற் காட்டிய அன்பும் (1644) குருவிடத்துச் சீடர் காட்டும் அன்புக்கு வண்ணக் களஞ்சியப் புலவர் காட்டும் அரிய சான்று களாகும்.

# தமிழ் மரபு

## முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் தமிழ்ப்பற்று:

தமிழ்மொழி சமயங்களின் மொழி எனப்பாராட்டப் பெறும். உலகப் பெருஞ்சமயங்களுக்கெல்லாம் காப்பியங் கண்ட கவின் மொழி தமிழ். இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங் களைச் செய்த தமிழ்ப்புலவர்கள் இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கும் கருவியாகவே காப்பியங்களை உருவாக்கினாலும், அக்கருவி இனிய தமிழ்த்தகுதி சான்ற அரிய கருவியாக இருக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொண்டிருந்தனர். தமிழ் மரபனைத்தும் தழுவிய தமிழ்க் காப்பியங்களாகவே அவற்றைப் படைக்க முயன்றனர்.

தமிழ் இஸ்லாமியக் காப்பியங்களில் முஸ்லிம் புலவர்தம் தமிழ்ப்பற்றுத் தெளிவாகத் தெரிகின்றது. முகியித்தீன் புராணங்களிலும் முஸ்லிம் புலவர்தம் தமிழ்ப்பற்றுத் தகவுறத் தோன்றி நிற்கின்றது. இன்றியமையாத் தேவை காரணமாக அறபு, பாரசீகச் சொற்களைக் கலந்து பாடுதல் இஸ்லாமிய இலக்கியங்களின் தனித்தன்மையாகும். ஒரு செய்தி இங்கு உணர்த்தப்பட வேண்டும். பிறமொழிச் சொற்களைக் கலந்த போதும், அச் சொற்களின் ஒலிகளைத் தமிழ் ஒலிகளாகத் தயங்காது மாற்றிக்கொண்ட இயல்பு எண்ணி மகிழத்தக்க தாகும். மக்காப்பயணத்தைக் குறிக்கும் சொல்லை அறபுமொழி ஒலியோடு குறித்தால் 'ஹஜ்' என்றே எழுத வேண்டும். இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இவ்வறபுச் சொல்லைக் 'கச்சு' எனவே குறிப்பர்.

வண்ணக் களஞ்சியப் புலவர், கச்சுக்குப் போந்த படலம் (படலம்-14) எனப் பெயரிடுவர். மொழியின் உயிர்நாடி சொல் இல்லை, ஒலியே ஆகும் என்று உணர்ந்த காரணத்தால் பிறமொழிச்சொல் கலப்பினும் ஒலிகலவாது காத்துக் கொண்ட னர். டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள், ''பிறமொழிக் கிளவிகளைக் கூடை கூடையாக அள்ளிக் கொண்ட போதும் ஒலிக்கறப்பில் பிறழவில்லை நல்லிடைக்காலத்தார்'' எனப் பாராட்டி, ''ஒலிக்கலப்பு என்பது தமிழ்க் கலைப்பாகும். ஒலிப்பிறழ்ச்சி என்பது தமிழ் உயிர்ப் பிறழ்ச்சியாகும்'' என்று

உண்மையையும் உரைப்பர்.[33] இப்பாராட்டு இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கட்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

**தமிழ்ப் புலவர்களைப் போற்றும் வண்ணக் களஞ்சியப் புலவர்:**

வண்ணக் களஞ்சியப் புலவர் தமிழ் மொழியிடத்து அளப்பரிய அன்பும் பற்றும் கொண்டவராவர். செந்தமிழ்ப் புலவர்தம் முந்து நூல்களின் சொற்களையும் கருத்துக்களையும் பொன்னெனப் போற்றியுள்ளதிறன் பின் வரும் இயலில் ஆயப்படும். கடவுள் வாழ்த்துப் படலத்தில் இறைநேயர்கள், மார்க்க அறிஞர்கள், தமிழ்ப் புலவோர் ஆகியோரை வாழ்த்தும் பாடலில் 'மூன்றாய்த் தெரிதரு தமிழின் மேலோர் திருச்சரணங்கள் எல்லாம் பரிவொடுதுதித்து 'வாழ்த்துவர். (28) இங்கு இறைநேயர்களோடும் மார்க்க அறிஞர்களோடும் தமிழ்ப் புலவோரையும் சரி நிகர் சமானமாகப் போற்றும் புலவர் உள்ளம் காண்க. அவையடக்கப் பாடல்கள் ஆறினும் புலவர் புலமை திறம் மட்டும் ஓங்கி நிற்க வில்லை; புலவரின் தமிழ்ப்பற்றும் தமிழ்ப் புலவரை மதிக்கும் திறனும் துலங்கி நிற்கின்றன. தம் கவியைப் புன்கவி எனப்பேசும் புலவர், முந்திய நூலோர் நற்கவி நலத்தை நயம் பெறப் பாராட்டுவர். முந்நூல் உணர்ந்தோர் (35), இயற் புலவோர் (35), பொழிகவிப் புலவோர் (36), நீள ஆய்ந்த புலவோர் (37), 'முழுக்க நன்றென முற்றும் உணர்ந்தவர்' கவி (38), கற்ற பெற்றியோர் (39) என தமக்கு முந்திய முத்தமிழ்ப் புலவர்களின் வித்தகத் திறத்தை வியந்து பாடுவர்.

**அறபுநாடு தமிழ் நாடாகிறது**

வண்ணக் களஞ்சியப் புலவரின் முகியத்தீன் ஆண்டகை புகழ்பாடும் தமிழ்க் காப்பியம் தமிழ்நாட்டு மரபுகளையும் தமிழ் இலக்கிய மரபுகளையும் முற்றும் போற்றும் முழுமையுடையதாகும். காப்பியத்து வரும் களங்களெல்லாம் வேறு நாட்டு மண்ணையும் மக்களையும் பற்றியதாயினும், புலவர் படைக்கும் களங்களெல்லாம் தமிழ் மண்ணையும் தமிழ்ப் பண்பு தழைத்த மக்களையும் காட்டக் காண்கிறோம். நாட்டுப் படலமும் நகரப் படலமும் (படலங்கள்—2,3) தமிழ் நாட்டையும், தமிழ் நகரத்தையுமே காட்டக் காண்கிறோம். காப்பிய நாயகர் போற்றிய கொள்கைகள் அனைத்து நாட்டு மக்கட்கும் உரியன ஆதலின், தமிழ் மக்களும் இக்காப்பியத்தைக் கற்றுப் பயன் பெற்றுச் சிறக்க வேண்டும் என்பது புலவர் வேணவர், ஆதலின், தமிழ் மரபு போற்றுவதில் புலவர் தலை நிற்கின்றார்.

''அரபு நாடு தமிழ் நாடாகிறது. இசுலாமிய சமயம் தமிழ்(ச்) சமயமாகிறது. நபிகள் நாயகம் தமிழ்த் தலை மாந்தர் ஆகிறார்'' என்ற டாக்டர் சாரங்கபாணி அவர்களின் ஆய்வுரை வண்ணக்களஞ்சியப் புலவரின் முகியித்தீன் புராணத்திற்கு முற்றும் பொருந்துவதாகும்.

தமிழிலக்கியங்களில் தலைவர்களைப் பாடும்போது மாலை சூடிய தோளினன், மார்பினன் எனப் பாடுதல் மரபாகும். முகியித்தீன் ஆண்டகையைப் பாடும் போது, 'மஞ்சரி நறவஞ் சிந்தும் மணிப்புய அரசு' (180) எனவும், முடிமன்னர்களைத் 'தோடு கொள் மலர்த்தேன் மாலை சூட்டிய மகுட வேந்தர்' (887) எனவும் புலவர் போற்றுவர்.

ஒருவனின் கொடைப் பண்பைப் பேசவந்த புலவர், தேவையுடையோர் தேவைக்குத் தக தரும் பண்புடையான் என்பதைக் காட்ட 'அருளுங் கற்பகம்' எனப்பாடுவர்.

'திருவந்து நடனஞ் செய்யும் செழும் பொழில் நாகை' (26) எனத் தமிழ் நாட்டு நாகப்பட்டினத்தைப் பாடிய புலவர், நகரப் படலத்தில், உயர்பதிகள் எல்லாவற்றினும் ஜெயிலான் நகரமே வளம் மிக்க பதி எனக் கருதித் திருமகள் வந்து குடியிருந்ததாகப் பாடுவர். (87)

'ஜெயிலான் நகர் சூழ்ந்த' ஆண்டகையின் நாட்டைக் காட்ட வந்த புலவர், அந்நாட்டு மருத நிலத்தின் உழத்தியர் நாற்றினை நடுகின்ற போது அவர்தம் முகத்தில் சேற்றுத் துளிகள் தெறித்தன; அப்போது உழத்தியர் எழுப்பிய இனிய குரவை ஒலி விண்ணகத்தை எட்டியது; அவ்வொலி கேட்டு வியந்த வானவ மகளிர் உழத்தியரை நோக்கினர்; அந்நோக்கால் கண்ணேறு பட்டுவிடா வண்ணம் 'மதன்' இட்ட திட்டிப் பொட்டாகச் சேற்றுத் துளிகள் திகழ்ந்தன (64) எனத் தமிழ் நிலத்து மருத நிலக்காட்சி புலவர் கற்பனைத் திறத்தோடு காட்டப் படுகிறது. ஜெயிலான் நாட்டுக்கு உழத்தியர் குரவையும், மன் மதனின் திட்டிப் பொட்டும் புலவரால் எடுத்துச் செல்லப்படுவது சிந்திக்கத் தக்கதாகும். ஜெயிலான் நாட்டு உழத்தியர் நாற்று நடும்போது குயில்களும் நாணக் குரவையும் கீதமும் பாடுவதாகக் காட்டுவர் (63) மேலும் வண்டுகள் யாழ்களின் ஏழிசையை எழுப்பிக்கீதம் பாடுவதாகவும் பேசுவர். (71)

ஜெயிலான் நகர் வளம் பாடும் நகரப் படலத்தில் 'புவியினைச் சூழ் எண்கிரி' எனவும், வான் கங்கை எனவும் (84), கதிரவனைப் பொற்றேரோன் எனவும் (168) இந்து புராணச் செய்திகளை இஸ்லாமியப் புராணத்தில் ஏற்றிப் புலவர்

பாடுவர். இந்து புராணங்களில், நெடுங்காலம் வாழ உதவும் சாவா மருந்தாகக் குறிக்கப் பெற்ற அமுது, பாற்கடலைக் கடைந்தபோது பெறப்பட்டது என்பதனையும் அமுதொடு விடமும் பிறந்த செய்தியையும் உவமை வழி குறிப்பர். 'மதிதர அனந்தங் காலம் வாழ்ந்துற அமுதை' (368) எனவும் 'அமுதொடு விடமும் பிறந்திடு கடல்போல்' (1345) எனவும் பாடுவர். இறை திரைக் கடலொடு திருமாலை (69)யும் உவமையில் வைத்துப் புலவர் பேசுவர்.

**மது அருந்தும் மள்ளர் :**

தமிழ்க் காப்பியங்களில் மருதவளம் பாடும்போது தேவரும் கம்பரும் உமறுவும் பதுறுத்தீனும் கள்ளைப் பருகி உழவர் திளைத்த காட்சியைப் பாடுவர். தேவரும் கம்பரும் போற்றிய மரபை இஸ்லாமியக் கொள்கைக்கு மாறுபட்டதாயினும் உமறு போற்றிக் கொண்டார். முஸ்லிம்கள் கள் குடித்ததாகப் பாடாது வயலில் வேலை செய்த உழவர்கள் கள் குடித்ததாகப் பாடுவதால் இஸ்லாமிய மது மறுப்புக் கொள்கைக்கு இஃது முரண் எனக் கூற முடியாது. இருப்பினும் இஸ்லாமியப் புலவர்கள் மது அருந்துவது பற்றித் தம் காப்பியத்தில் குறிப்பதையே குறை கூறுவோர் உண்டு. இது கருதியே சேகுனாப் புலவர் தம் குத்பு நாயக நாட்டுப் படலத்தில் முந்திய புலவர்கள் எல்லாம் பாடிய முறையிலேயே இக் காட்சியைப் பாடி, 'மது அருந்தி' என்பதனை மட்டும் 'கூழ் பல குடித்து' (சேகுனா-பா. 104) என மாற்றுவர். ஆனால் உமறுப் புலவரும் பதுறுத்தீன் புலவரும் உழவர் கள்ளுண்டு களித்ததாகவே பாடுவர். (சீறா-நாட்டுப் படலம், பா. 37). (பதுறுத்தீன்-பா. 64). வண்ணக் களஞ்சியப் புலவரும் உழவர்கள் கள்ளுண்டு கிணைப்பறை முழக்கிப் போந்ததாகப் பாடுவர். (56) சேகுனா நீங்கலாகப் பிற முகியித்தீன் புராணப் புலவர்கள் தமிழ் மரபு போற்றும் தகைமைக்கே முதன்மை தந்து மருதநிலக் காட்சிகளைப் பாடுதல் கருதத் தக்கதாகும்.

**நானில வருணனை :**

தமிழ் நிலமக்கட்குத் தமிழ்க் காப்பியஞ் செய்த வண்ணக் களஞ்சியப் புலவர் வேறு நாடுகளைப் பாடும் போதும் தமிழ் மக்கள் விரும்பிப் போற்றும் வகையில் தமிழ் நானிலப் பகுப்பைப் போற்றிப் பாடுவர். ஆண்டகை நசாறாக்கள் வாழும் பதிக்குப் புறப்பட்டுப் போனவழிகளைப் பாடும் போது (1104—1107) முல்லை, பாலை, குறிஞ்சி, மருதம் ஆகிய நானில வருணனைகளையும் நயம் படப் பேசுவர். நானிலங்

களின் கரு, உரிப்பொருள்களையும் குறித்துக் காட்டுவர். மேலும் குன்மந் தீர்ந்த படலத்தில் நானிலங்களையும் கடந்து சென்றதாகப்பாடுவர். (1224) மற்று மோரிடத்தில், 'கள்ளத் தாமரைத் தடங்கட நெடுங்கிரி கடந்தார்' (840) என மருதம், முல்லை, குறிஞ்சி ஆகிய மூன்று நிலங்களையும் குறித்துக் காட்டுவர். நாட்டுப்படலத்தில் பெருகியவெள்ளம் குறிஞ்சி, பாலை, முல்லை, மருத நிலங்களில் புகுந்ததைப் பாடும் வருணனையிலும் நானிலங்களின் கரு, உரிப்பொருள்கள் தோன்ற நிலவளம் பாடுவர். (49—53).

ஆண்டகை பாலை நிலங்களில் பெருந்தவஞ் செய்த பெற்றிபேசும் 'பாலை புகு படல'த்தில் பாலைநில வருணனையைப் பரணிப்பாட்டின் கற்பனை நயங்களை விஞ்சப்பாடுவர். (264—270) ஆண்டகை தவம் இயற்றிய இறாக்நாட்டு வனங்களில் தமிழ்ப் பாலை நிலத்துக் காளியையும் அதன் கணங்களையும் காட்டுவர். (274).

**இலக்கியத் திருமண மரபுகள் :**

இஸ்லாமியக் கொள்கை விளக்கஞ் செய்யும் வகையில் ஆண்டகை புகழ்பாடும் இஸ்லாமியத் தமிழ்க் காப்பியத்தில் வண்ணக் களஞ்சியப்புலவர் தமிழ் இலக்கியத் திருமண மரபுகளை, இஸ்லாமிய மரபுகளுக்கு உடன்படாதாயினும் தமிழ் மரபு பேணும் தலையாய நோக்கில் பாடுவர். வீதியில் முஸ்லிம் பெண்கள் பந்தாடுவது, நடை முறை நோக்கிலும் இஸ்லாமிய நோக்கிலும் காணமுடியாத தொன்றாகும். தமிழ்க் காப்பியப் புலவோர், பெண் பந்தாடுவதாகவும். கழங்கு, அம்மானை, ஊசல் ஆடியதாகவும் பாடுவர். இப் போக்கைத் தழுவி நம் புலவர் காலத்தவராகிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்களும் தம் நாடகக் காப்பியத் தலைவி பந்து வந்தாடியதாகப்பாடுவர். பிற முகியித்தீன் புராணப் புலவர்களும் இத்தமிழ் மரபு போற்றுவர். (சேகுனா—பாக். 166, 1272) தமிழ்மரபு போற்றி வண்ணக் களஞ்சியப் புலவரும், இறந்து வந்து மணஞ்செய் படலத்தில், 'சிந்துகள் படிப்பார்; ஊசல் ஆடுவார் பந்துகள் அடிப்பார்' (1375) எனவும், அம்மானைகளாடி (1376) எனவும் திருமணம் நிகழ்ந்த ஊரின் தெருக் காட்சி வருணனையில் பாடுவர்.

இப்படலத்தில் புலவர் பேசும் திருமணம் பற்றிய தமிழ் மரபுகளில் பல, ஆண்டகை போற்றிய சமய மரபையோ ஆண்டகை வாழ்ந்த நில மரபையோ சிறிதும் காட்டவில்லை என்பது கருதத்தக்கது. காப்பியங் கற்போர் வாழும் நில

வழக்குகளையும் இலக்கிய வழக்குகளையுமே அவை காட்டுவன வாகும்.

திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதும், மோதிரம் சூட்டிய தாகவும், முரசங்கள் அதிர்ந்ததாகவும் (1316), நிச்சயம் செய்யும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தோர்க்கெல்லாம் சந்தனம், பாகு, தாம்பூலம், பாளிதம் முதலாயின அளிக்கப் பட்டதாக வும் (1317), மாமன் வரிசைப் பொருள்களோடு பூரண கும்பம் ஏந்தி வரவேற்றதாகவும் (1328) பாடுவர். இச் செய்திகள் முழுமையும் தமிழ் நில மரபுகளே என்பது வெளிப்படை.

திருமணப் பந்தர்க்கால் நடுதற்கு நன்முகூர்த்தம் பார்த்த தாகவும் (1366): பந்தலில் தமிழ் நாட்டுப் பூக்களாகிய முல்லை, மல்லிகை, இருவாட்சி, கழுநீர்ப் பூ, செந்தாமரை, அல்லி, ஆகிய பூச்சரங்கள் அமைக்கப் பட்டதாகவும் (1367) பாடுவர். பந்தரின் வாயிலில் கதலி, கமுகு, செவ்விள நீர், பலா முதலிய வற்றின் நீள் குலைகள் ஒழுங்குபடத் தொகுக்கப்பட்டிருந்தன எனவும் அவற்றில் வண்டுகள் ஏழிசை இசைத்தன எனவும் பாடுவர் (1368). திருமண வாயில் முன் மேடை செய்து 'பூக வொண்பாளை' வைத்ததாகவும், பூரணக் கும்பம் வைத்த தாகவும் (1379) பாடுவர்.

திருமண ஊர்வலத்தில் ஒட்டகை மீதினில் பேரிகை முழங் கியதாகவும், உடுக்கை, தூரியங்கள், திண்டிமம், பம்பை முதலாகப் பல முரசங்கள் இயம்பியதாகவும் பாடுவர். (1448). ஊர்வலத்தில் பல்வேறு வாண வேடிக்கைகளின் ஓசை கடலோசையையும் வென்றது எனப் பாடி வாண வேடிக்கைக் காட்சியை வகுத்திட வல்லார் யார் எனப் பாடுவர். (1452—1453). இவ்வெல்லாச் செய்திகளுமே இஸ்லாமிய மரபோடு தொடர்பில்லாத் தமிழ் இலக்கிய மரபுகளே.

மணப் பந்தலில் மணமகன் குதிரையிலிருந்து இறங்கினான் எனப் பாடும் போது, 'குங்குமம் திகழ் புயத்தினன்' என்பார். இறங்கிய மணமகனை மங்கையர் பலர் ஆலத்தி ஏந்தியும் குரவையும் அதிர்ந்தும் வரவேற்றதாகப்படுவார். மணமகனின் தாமரைப் பாதங்களைப் பனி நீர் கொண்டு கழுவியதாகவும் பாடுவர். (1474). தமிழ்த் திருமண மரபுகள் பகுதாதுத் திருமணத்தில் ஏற்றிப் பேசப்படுகிறது.

**காமச் சுவையும் உலாக் காட்சிப் புனைவும் :**

இஸ்லாத்தில் முறையான குடும்ப அமைப்பில் நெறிப்பட்ட காமத்துய்ப்பிற்கு இடமுண்டு. ஆனால் காமவுணர்வு கிளர்ந் தெழச் செய்தற்குரிய எத்தகைய செய்தியையும் பேசுவதும்

எழுதுவதும் கேட்பதும் இஸ்லாத்தில் விலக்கப்பட்டுள்ளதை வண்ணக் களஞ்சியப் புலவர் அறியாதிருக்க முடியாது. இஸ்லாமிய மரபை நன்குணர்ந்த புலவர் காமச் சுவை கனியப் பாடுதற்கெனவே சில பகுதிகளைத் தெரிந்தெடுத்துப் பாடியுள்ளார். தனக்கு மணவாளனாகக் குறிக்கப் பெற்றவன்—வாணிபப் பொருட்டுக் கடலிற் சென்றவன் திரும்பாமையால் வேறு மணவாளனுக்குத் தன்னை மணமுடிக்கப் பெற்றோர் விரும்பியபோது, அதை வெறுத்த மங்கை நல்லாள், தனக்கு முற்குறித்த மணவாளனை எண்ணிக் காம வயப்பட்டுக் கவன்றதாகப் புலவர் பாடும் எட்டுப் பாடல்களும் (1344—1351) காமச் சுவை கனிந்து நிற்கக் காண்கிறோம்.

பொன்நெடு மலைகளெனத் திரண்டெழுந்து பொருந்தி, நூலிடைப் புகற்கரிதாய்த் துன்னவும் நெருங்கிக் கண்கறுத்துச் சுணங்குகள் படர்ந்து பூரித்து, மின்னிய வடங்கள் சுமந்து இரு தனங்கள் வேய்ந்த கச்சு அறுத்து இறுமாந்து இருந்ததாக அம்மதுர மென்மொழியாளின் தனங்களின் அழகு புலவரால் வருணிக்கப்படும். பிற பாடல்களிலும் மங்கை நல்லாள் காம உள்ளம் சுவைப்படப் பேசப்படுகிறது. உருமாறிவந்த படலத்தும் (1566-1577) பன்னிரு பாடல்களில் கேசாதிபாதமாக அமைந்த பெண் வருணனையில் காமச்சுவை விஞ்சி நிற்கப் புலவர் பாடுவர். இச்சுவையை மேலும் மிகுக்கும் வகையில் அப்பாடல்களின் ஓசை நயத்திலும் புலவர் மாய சக்தியை ஏற்றியுள்ளார்.

மார்க்க நெறிமுறை பிழைத்து செய்கு ஆண்டகையின் சினத்தால் உருமாறிப் பெண்ணானார். அத்தகு பொய்ப் பெண்ணைப் பாடும் களத்தைப் பயன் படுத்திக் கொண்டு புலவர் காமமேடை அமைத்து விடுகிறார். அப்பெண்ணைக் கண்டோர் நிலையும் 'மனங்கள் எவையும் மயங்கி உருகின' எனவும், 'புந்தியளவை அகன்றது' எனவும், உண்மையைப் புலவர் மறைக்காது குறிக்கின்றார். (1569),

மேற் குறித்த இரண்டு களங்களையும் தமக்குக் காமம் பாட வாய்த்த கவின்மிகு களங்களாகக் கருதிப் புலவர் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார். காமச்சுவை சொட்டச் சொட்டப் பாடுவதில் உமறுப்புலவர் வழி காட்டினார். [35]பதுறுத்தீன் புலவரும் இத்துறையில் சளைக்காது தம் வித்தகத் திறத்தை விறல்படக் காட்டினார். வண்ணக் களஞ்சியப் புலவரும் மேற்குறித்தாங்கு உமறுவைப் போற்றித் தமக்குப் பிந்திய பதுறுத்தீன் புலவரைப் போலவே காமஞ்

பாடுவதில் கரைகண்டு நிற்கின்றார். முன்னர் குறிப்பிட்டது போல, இங்ஙனம் பாடுவது இஸ்லாமிய நெறிக்கு முரணல்லவா எனப் புலவர் நினைத்திருக்க மாட்டாரா? என்பது சிந்தனைக் குரியது.

இஸ்லாமிய ஷரிஅத் கல்வியோடு, தரீகத் கல்வியிலும் தலை நின்று, காதரிய்யா தரீகாவில் இணைந்து புலவர் நின்ற திறத்திற்கு அவர் காப்பியமே சரி பின் இங்ஙனம் பாடக் காரணம் என்ன? தேவரும் சம்பரும் காப்பியத்துக் கவினுறப் புகுத்திய காமச் சுவையைத் தம் புராணத்திலும் பொலிவுடன் இடம் பெறச் செய்யவில்லையாயின், தம் காப்பியத் தகுதி குறைவுபடுமே எனப் புலவர் எண்ணியிருந்தால் வியப்பில்லை.

தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், தமிழ் உள்ளங்களைக் கவர்ந் திழுத்த இடைக்காலத் தமிழிலக்கிய வரலாறு புலவர் அறியாத செய்தியன்று. உலா நூல்கள் பல தோன்றி, மக்களின் உள்ளங் களில் உலா வந்து கொண்டிருந்ததையும் உள்ளபடி புலவர் உணர்வார். வீரம் பாடும் பரணி இலக்கியங் கூடக் கடைத் திறப்புப் போன்ற காமச் சுவை கனிந்த பகுதிகளைப் பாட வேண்டிய கட்டாயநிலை உருவாகி விட்ட காலத்தில் வாழ்ந்த வர் வண்ணக் களஞ்சியப் புலவர் என்பதை மறந்து விடக் கூடாது. இந்நோக்கில் நாம் இதுவரை ஆய்ந்த காப்பியத்தில் அமைந்த காமச்சுவையையும் இனி ஆய இருக்கின்ற உலாக் காட்சிப் புனைவையும் நோக்கினால் புலவர் உள்ளங் காண முடியும்.

புலவர் இஸ்லாமிய மரபை விடத் தமிழ் மரபுக்கு முதலிடம் தந்தார் என்ற அவசர முடிவுக்கு வருவதற்கு முன் மேலும் சில செய்திகளை இலக்கிய ஆர்வலர் முன்னே எடுத்து வைக்க விரும்புகின்றேன். வண்ணக் களஞ்சியப் புலவர் இஸ்லாமிய ஞான நூல் பாடவில்லை. இஸ்லாமிய ஞானக் கருத்துக்கள் அடங்கிய காவியம் பாடுகின்றார் என்பதை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும்.

காவியத்தில் வரலாற்றுக்குப் புறம்பான உயர்வு நவிற்சிகள் இல்பொருள் நவிற்சிகள், இயற்கை இறந்த நிகழ்ச்சி நவிற்சிகள் ஆகியன இருக்கும் என்பதைவிட இருக்க வேண்டும் என்பது மரபாகவே மலர்ந்து விட்டது, எழுத்துருப் பெறா இலக்கிய விதியாகவே மாறிவிட்டது என்பதைக் கருத வேண்டும். இத்தகு எண்ணப் போக்கை ஆதரிக்கும் நாஞ்சில் ஆ. ஆரிது அவர்கள், இச்சிந்தனை ''சமய விரோதப் போக்குமல்ல. இலக்கிய விரோதப் போக்குமல்ல'' என்பது கருதத்தக்க தாகும்.[86]

**உலாக் காட்சிப் புனைவும்**

**எழுவகைப் பருவ மகளிர் பேச்சும் :**

இறந்து வந்து மணஞ் செய்த படலம் என்ற பகுதியை வண்ணக் களஞ்சியப் புலவர் தமிழ் மரபு போற்றும் காப்பியத் தகுதியை மிகுத்துக் காட்ட முழுமையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். 229 பாக்கள் அப்படலத்தில் உள. பதுறுத்தீன் புலவர் விரிந்த காப்பியம் செய்தமையால் பல இடங்களிலும் தமிழ் மரபு போற்றுதற்கு அவருக்கு வாய்ப்பு இருந்தது. வண்ணக் களஞ்சியப்புலவரின் முகியித்தீன் புராணம் அவர் காப்பியத்தில் சரி பாதியினும் அளவில் குறைந்ததாகும். மேலும் நிகழ்ச்சிகளை விரிக்காது நறுக்கெனக் கூறும் போக்கு வண்ணக் களஞ்சியப் புலவரிடம் அமைந்துள்ளது.

கடைசிப் படலங்களில் ஒரு சில படலங்களில் மட்டும் தமிழ்க் காப்பிய மரபுகளைத் திறம்படப் போற்ற வேண்டும் என்ற நோக்கொடு சில பகுதிகள் விரித்துப் பாடப் படுவதைக் காப்பியங் கற்போர் உணரலாம். இப்பெரும் படலத்தில் திருமணச் சடங்குகள், ஊர்வலம் அனைத்தையும் பாடுவர். மணமகனின் மணவுலாவும் எழுவகைப் பருவ மகளிரின் எழுச்சியும் அவர்களின் பேச்சும் இப்படலத்தை ஒரு சிறு தனி உலா நூலாகவே ஆக்கி விடுகின்றன.

முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் நூலின் இடையே உலாப் பாடுவதன்றித் தனியே உலா நூல் பாடுவதில்லை. தலைவனின் உலாத் தோற்றம், அது கண்ட பருவ மகளிரும் பெண்களும் பேசும் பேச்சு, கொள்ளும் உணர்வு ஆகியவற்றின் வாயிலாகத் தலைவனின் உயர்வு காட்டுவது தமிழிலக்கிய மரபாகும். இஃது இஸ்லாமிய மரபுக்கு இயையாததொன்றாகும். கோஷா முறைக்கு நேர்மாறானதாகும். இருப்பினும் புலவர் உலாக் கண்ட பெண்களின் பிதற்றல் பேச்சுக்களையும் (1454—1465), எழுவகைப் பருவ மகளிரின் கோலங்களையும் கூற்றுக்களையும் (1466—1473) தமிழ் உலா மரபு போற்றி விரித்துப் பாடுகின்றார். இஸ்லாமிய இலக்கியத்தில் இக்காட்சிகளின் பொருத்தமின்மை வெளிப்படை. இம்முடிவைச் சொல்லிப் புலவர் போக்குத் தவறென்று தள்ளி விடுதற்கு முன், சில சிந்தனைகளைக் கற்போர் முன் வைத்தல் ஆய்வாளர் கடமையாகும்.

இஸ்லாமிய சூஃபி ஞானிகளும் இறையன்பை நாயக நாயகி பாவத்தில் பாடியுள்ளனர். மஸ்தான் சாகிபு இறைவனை மனோன்மணியாகக் கருதிப் பாடுவர்.[35] தமிழ்

இலக்கிய மரபும் இப்போக்கைப் பெரிதும் போற்றியுள்ளது. இறைவனிடம் ஈடுபட்ட அடியார்கள் தலைவனிடம் ஈடுபட்ட தலைவி பேசுவது போன்ற பரிமொழிகளில் பேசும் ஞான இலக்கியங்களை எப்பொருளில் உணர்கிறோமோ, அப் பொருளில் இப்பகுதிகளைக் காணலாகாதா? இங்கு மற்றொன்றும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உமறுப் புலவரையும் பின்னர் வந்த பதுறுத்தீன் புலவரையும் போலன்றி, வண்ணக் களஞ்சியப் புலவர் இத்தகு உலாக் காட்சியையும் பெண்களின் பேச்சையும் ஆண்டகையோடு இணைத்துப் பேசவில்லை. அவர்களோ நபிகள் நாயகம், முகியித்தீன் ஆண்டகை இருவரையுமே உலாத் தலைவர்களாக்கினர். வண்ணக் களஞ்சியப் புலவர் அங்ஙனம் செய்யவில்லை என்ற உண்மை உணரத் தக்கது. இருப்பினும் ஆண்டகை பற்றிய காப்பியத்தில் இக்காட்சிகள் இடம் பெறலாமா என்பதே இப்போதைய ஆய்வு.

தமிழிலக்கிய உலாக் காட்சிகளை உற்று நோக்கி ஆயும் பொழுது பரஞ்சோதி முனிவரின் உலாக் காட்சிப் படைப்பின் நுட்பமும், வை. மு. கோ. அவர்கள் இராமாயண உலாவியற் படலத்திற்குத் தரும் நுட்ப விளக்கமும் கருத்தில் கொள்ளத் தக்க அருமையும் பெருமையும் உடையனவாகும். மேலும் சிந்தாமணி உரைகாரர் இப்பெண்களைக் குடும்பப் பெண்களாகக் கருத முடியாது எனவும், விலை மாதர்களாகவே கருத வேண்டும் எனவும் தரும் கருத்தும் சிந்திக்கத் தக்கது.

பரஞ்சோதி முனிவர் உலாத் தலைவனை ஞானத் தலைவனாகவும், உலாக் கண்டு உருகும் மகளிரை மெய்யன்பர்களாகவும் படைத்துக் காட்டுவர். வை. மு. கோ. அவர்களும் இராமபிரானை எல்லாவுயிர்களுக்கும் தலைவனாக்கி உலாவியற் படலப் பெண்களின் காதலையும் புலம்பலையும் இறைக் காதலாக்கிக் காட்டுவர். இங்ஙனம் வண்ணக் களஞ்சியப் புலவரின் உலாக் காட்சிப் புனைவையும் பெண்களின் புலம்பலையும் பொருள் கொண்டு விட்டால் இடர்ப்பாடு நீங்கிவிடும். (38) தம் ஞானக் காப்பியத்தைக் கற்போர்க்கு இத்தகைய பக்குவ உள்ளம் வாய்த்திருக்கும் எனக் கருதும் உரிமை புலவர்க்கு இல்லையா?

இயல் ஏழு

# புலமைத் திறன்

**முந்துநூற் புலமை**

வண்ணக் களஞ்சியப் புலவரின் புலமைத் திறம் இவ்வொரு காப்பியங் கொண்டு ஆயப் புகினும் பல நூறு பக்கங்கள் விரியும் பெருமையுடையதாகும். புலவர் புலமைத் திறங்காணு தற்குரிய பல்வேறு வகைகளை வகுத்துக் காட்டுவதும், ஒவ் வொரு வகைக்கும் சில சான்றுகள் தந்து, காப்பியங் கற்போர் பார்வைக்குப் பாதை காட்டுவதே பரந்து பட்ட இப்பெரும் பொருளுக்குச் சில பக்கங்கள் எழுதுவதன் நோக்கமாகும்.

புலவர் புலமை காட்டும் காப்பியப் போக்குகளுள் தலை யாயது புலவரின் முந்துநூற் புலமையேயாகும். திருவள்ளுவர் முதலாக வாழையடி வாழையாக வந்த தமிழ்ப் புலவர் நூல் களில் பயின்று, அவர் தம் சொற்களையும் கருத்துக்களையும் பொருத்தமான இடங்களில் தம்காப்பியத்தில் புலவர் அமைத்து வைத்துள்ளார். மேலும் காப்பியக் கவிஞர்கள் தம் காப்பியப் படைப்பாற்றல்களையும் கண்டு தெளிந்து தம் காப்பியத்தில் அவ்வுத்திகளைப் பொருத்தமுறப் போற்றிக் கொண்டுள்ளார். கம்பர், உமறுப் புலவர் போன்ற பெரும் புலவர்தம் நடை நலங் களையும் எடுத்தாண்டுள்ளார்.

**குறளாட்சி:**

வண்ணக் களஞ்சியப் புலவர் இறைத் தன்மைகளை எடுத்து விளக்கும்போது 'வேண்டல் வேண்டாமை யில்லவனை' (காப்பு—2) என 'வேண்டுதல் வேண்டாமை இலான்' (குறள்—4) என்ற குறட்டொடர்களைக் கடவுள் வாழ்த்துப் படலத்திலேயே ஆள்வர். மேலும், உவமை ஓதுதற்கரியவன் (1593) இதயமென்னும் மலர் (15) என்ற இறைத் தன்மை பேசும் தொடர்களில் தனக்குவமை இல்லாதான் (குறள்—7), 'மலர் மிசை யேகினான்' (குறள்—3) என்ற வள்ளுவரின் கடவுள் தன்மை காட்டும் தொடர்களின் கருத்தைப் புலவர் போற்றுவர்.

"அமுதொடு விடமும் பிறந்திடு கடல்போல்
ஆயிரு நோக்கமும் அமைந்து" (1345)

என்ற புலவர் கூற்று, 'இரு நோக்கு இவளுண்கண் உள்ளது' (குறள்-1091) என்ற திருவள்ளுவர் கருத்தையும் சொற்களையும் கருத்திற் கொண்டு அமைந்ததாகும். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு (குறள்-72) என்பது வள்ளுவம். முகியித்தீன் ஆண்டகை இடத்துப் பேரன்பு கொண்டிருந்த அன்பர் அறபியை 'என்புகூர் அன்புயாவும் உருக் கொண்டார்'' (1015) எனப் புலவர் இனங் காட்டுவர்.

மேலும் அறபியின் கூற்றாகவே 'விதிப் படிக்கு உறும் புத்தி என்றிடுதல்' (993) மெய்யாயிற்று எனப் பேசுவர். ஆகூழா அல் தோன்றும் அசைவின்மை (371) என்ற குறட் கருத்தையே 'விதிப்படிக்கு உறும்புத்தி' என்ற நடையில் புலவர் வைப்பர். அன்றியும் 'என்றிடுதல்' என்ற சொற்களில் 'எனக் குறள் கூறுவது போல' என்ற தொனிப் பொருளையும் உய்த்துணர வைப்பார். கலையருட் படலத்தில் மன்னனும் அமைச்சனும் ஆராயாது செயல் பட்டமையை ஊர் மக்கள் விமரிசிக்கும் சொற்களில் மன்னனையும் அமைச்சனையும் பற்றிய குறள்களுக்கு விரிவுரை செய்வார் போலப் புலவர் பாடுவர்.

'' இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்'' (குறள்—448)

என்ற குறளின் விரிவுரையாக இடித்துரைக்கும் அமைச்சரை உயிர் போல் பேணி ஒழுகிடா மன்னர் தம் செல்வமும் அரசும் வேரொடும் கெடும் என்பர். அமைச்சனையும் வருமுனந் தடுத்துக் காக்கவில்லை எனவும், மனப்படி செய்பவன் எனவும் புலவர் குற்றஞ் சாற்றுவர் (1684). ஊறு வருமுனம் தடுத்துக் காப்பதும், மனப்படிச் செய்யாது அறிஞர்களைக் கலந்து அறிய வேண்டுவதும் அமைச்சருக்குரிய இலக்கணங்களாக வள்ளுவர் வகுத்துரைத்தனவாகும். (குறள்-442, 634). இவ்விரண்டும் இல்லா அமைச்சனை இங்கு புலவர் இடித்துரைப்பர்.

பிள்ளைப் பேற்றின் பெருமையை, அப்பேற்றைப் பெறா அறபியின் வாய் மொழிகளில் அழகுறப் பேசுவர் புலவர். (997—1002). இப் பேச்சில் வள்ளுவர் தம்,

'' அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்'' (குறள்—74)

என்ற குறளின் சொல்லையும் பொருளையும் எடுத்தாண்டு ''மைந்தர் கையுழப்பு கூழ் அமிழ்தின் மேன்மையென்பார்' (1000) எனப் பாடுவார். மேலும் மக்கட் பேற்றின் பெருமை பேசும் இப்பகுதியில் வள்ளுவரின் மக்கட்பேறு என்ற அதிகாரத் தலைப்புத் தொடரையே எடுத்தாண்டு,

'' பேறெலா மக்கட் பேறன்றி வேறுண்டோ'' (1001) என்பார்.

மழைத் துளிகள் கூடிப் பெருகி வெள்ளமாகப் பரந்ததற்கு அழகிய உவமையொன்றைப் பெய்வார் புலவர்.

'' அறிவுயர் பெரியோர் பாலி னழுக்ககன் றன்பி னோடுஞ்
சிறிதருள் கொடைமிக் காகச் சிறந்தெழுந் தோங்க
லொப்பாய்'' (45)

என்பது புலவரின் உவமையாகும். பெரியோர்க்குச் சிறிதாகக் கொடுத்த கொடையும் பெரிதாக வளர்ந்தெழுந்து ஓங்கும் என்ற கருத்தில்,

'' தினைத்துணை நன்றி செயினும பனைத் துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்'' (குறள்-104)

என்ற குறட் கருத்தைப் போற்றியுள்ளமை காணத் தகும். 'சென்ற விடத்தால் செலவிடாதது' அறிவு என இலக்கணஞ் சொன்ன குறளை (குறள்-422) நினைவுறுத்துவார் போல, வண்ணக் களஞ்சியப் புலவர், 'புலன்கள் போமியல் வழியே புகுத்திடாதது'' (89) என மெய்ஞ்ஞானத்துக்கு இலக்கணம் சொல்வர். கதிரவன் மறையும் மாலைப் பொழுதின் இயல்பு களைப் பேசத் தொடங்கும் புலவர், பறவைகள் கூடுகளில் வந்து சேர்ந்ததைக் குறிப்பிடுகின்றார். 'குடம்பையுட் பறவை சேர்தர'' (1020) என்ற புலவர் சொற்களில்,

'குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே' (குறள்-338) என்ற குறளின் சொற்களை ஆள்வர்.

'உடுக்கை இழந்தவன் கைபோல' (குறள் 798) என்ற நட்பு பற்றிய குறள் கருத்தைப் புலவர் விளக்குவர் (974).

**இளங்கோ**

ஆண்டகையின் தோழர் அறபியின் துணைவியாரை 'மாங்குயிலியர் தொழும் மனைவி' (1035) எனப் பாராட்டுவர். கண்ணகியைப் பாராட்ட இளங்கோவடிகள் பயன்படுத்திய உத்தி, சொல், பொருள் அனைத்தையும் புலவர் போற்றக் காண்கிறோம். 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்துக் காதலாள்' என்ற பாராட்டில் கண்ணகியைப் பெண்களே தொழுது போற்றியதாகப் பாடியது சிறப்பு.[39] பெண்ணின் சிறப்பை ஆண்களும் பாராட்டியதாகப் பாடுவதில் பொருத்தமும் பெருமையும் இல்லை. ஆகவே 'மாதரார் தொழுதேத்த' என்றார்.

கற்புடை நங்கையைப் பெண்கள் பாராட்டுவதே பெருமை தரும் என்பது குறிப்பு. இஸ்லாமியக் கொள்கை நலம் பொலியும் இளங்கோவின் தொடர்களைக் கொண்டு வண்ணக் களஞ்சியப் புலவர் அறபியின் மனைவியைப் பாராட்டுகிறார்; இளங்கோவைக் கருத்தால் மட்டுமின்றிச் சொல்லாலும் எடுத்தாளும் தம் இயல்பு காட்டித் 'தொழும்' என்ற சொல்லைப் புலவர் பெய்தனர்.

**கோழியூர் கிழாரும் காப்பியப் புலவர்களும்**

நாடு பெற்றுள்ள நலன்களையும் பெறக் கூடாத கேடுகளையும் நாட்டு வளம் பாடும் போது புலவர் பெரு மக்கள் புலமைத் திறந் தோன்றப் பாடுவது மரபு. சோறு சமைக்கும் நெருப்பும், ஞாயிற்று வெம்மையும் அல்லது வேறு வெம்மை இல்லை எனவும், கருவுற்ற மகளிர் விரும்பி உண்பதல்லது அந்நாட்டு மண்ணைப் பகைவர் உண்ணுவதில்லை எனவும் குறுங் கோழியூர் கிழார் என்ற சங்கப் புலவர் பாடுவர்.[40] கோழியூர் கிழார் போற்றிக் கொண்ட கருத்து உத்தியையும் நடை நலத்தையும் காப்பியப் புலவர்களும் போற்றிக் கொண்டனர்.[41]

சேகுனாப் புலவரும் நாட்டு வளம் பாடும்போது புலவிப் பொய்யன்றி வேறு பொய்யில்லை; கொங்கையின் கொடுமையன்றி வேறு கொடியன இல்லை எனக் காப்பியப் புலவர் மரபு போற்றிப் பாடுவர். (சேகுனா-பாக். 170-173) வண்ணக் களஞ்சியப்புலவரும் ஆண்டகை பிறந்த நகரத்தில் நவமணிகளும் கனகமும் கிடந்து நகர வீதியில் இடருவது அன்றி, மக்கள் வாழ்க்கையில் இடர் என்பது இல்லை என இடரிலா நகரின் நலம் பாடுவர். (100). மேலும் அந்நகர மக்களின் பண்பு நலம் பாடும்போது மருகுதொறும் மணிகள் கிடந்து ஒளிருதல் போல மக்கள் உள்ளங்களில் அறிவெனும் மணி ஒளிர்த்தது எனவும் அந்நகர் உறைவோர் உள்ளும் புறமும் என்றுமே இருள் இல்லை எனவும் பாடுவர் (96).

**கம்பர்**

கம்பரிடம் வண்ணக் களஞ்சியப் புலவர் கொண்ட ஈடுபாடு மிகப் பல பாக்களில் வெளிப்படுகிறது. வடிவம் ஓசை சொல் என்ற அடிப்படைகளில் புலவர் கம்பனைப் போற்றுவர். இராவணன் ஒன்றையும் நோக்காது நிலத்தையே நோக்கிச் சென்ற நிலையைப் பாடக் கம்பர் காட்டிய கவித்திறத்தில்[42] ஈடுபட்ட புலவர், கம்பர் பயன்படுத்திய 'நோக்கான்' என்ற

சொல்லுக்குப் பதிலாகக் 'கண்டனன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி ஒரு அருமையான பாடலைப் பாடுவர்.

'' நீட்டை கண்டள வாமாயை நிலையைக் கண்டகன் றானந்த
வீட்டைக் கண்டருள் வோர்காணும் விகசித மலர்த்தாள்
வேந்தே
காட்டைக் கண்டன னீரேவுங் கட்டளைப் படியே மேய்த்த
வாட்டைக் கண்டன னல்லாலோ ரறிவைக் கண்டிலன்
யானய்யா'' (893)

ஆண்டகையின் ஆடு மேய்த்த ஆயன்; அப்பணி ஒன்றையன்றி— ஆண்டகையின் ஆணை ஒன்றேயன்றி—வேறு எதனையும் கண்டிலன் என்ற கருத்தைக் 'காட்டைக் கண்டேன், கட்டளைப்படி மேய்த்த ஆட்டைக் கண்டேன், வேறு அறிவொன்றையும் கண்டேனல்லன்' என ஆயன் கூறியதாகப் புலவர் பாடுவர். உமறுப் புலவரும் வடிவம், சொல், ஓசை ஆகியவற்றில் கம்பர் பாட்டின் அருமை கருதிப் போற்றிக் கொண்டு நம்புலவர்க்கும் வழி காட்டினர்[43] மேலும் அனுமன் சொற்களாகக் கம்பன் பாடிய 'கண்டனன் கற்பினுக் கணியை.[44] என்ற அருமையான பாடலும் இங்கு புலவரால் நினைவு படுத்தப் படுவது காணலாம்.

முகியித்தீன் இப்னு அறபி உதித்தோங்கு படலத்தில் இருபது பாடல்களைத் தொடர்ந்து (1047—1066) கம்பனின் கலிவிருத்த ஓசை யின்பம் தரும் பாடல்களைப் பாடுவர். கம்பனின் குறிப் பிட்ட இக் கலிவிருத்த ஓசை இன்பம் உவமை யிலா தினிக்கக் கண்டு உமறு, சேகுனா, நம் புலவருக்குப் பிந்திய பதுறுத்தீன் ஆகிய முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் உரிய வகையில் போற்றியுள்ளனர்.

மருதம் வீற்றிருந்த மாண்பினைத் 'தண்டலை மயில் களாட' எனத் தொடங்கிக் கம்பர் பாடிய பாடல் காவியப் புலவர் உளத்திலெல்லாம் கம்பரை வீற்றிருக்கச் செய்தது.[45] வண்ணக் களஞ்சியப் புலவர் இப்பாடலில் உளம் பறி கொடுத்து நின்றது நாட்டுப் படலத்தில் இரண்டு பாடல்களில் (48, 76) இப்பாடலின் சொல்லையும் பொருளையும் போற்றிக் கொண்டமையால் காணக் கிடக்கின்றது.

''இருபுறத் தினுமண் டூக வொலிமுர சியம்பத் துச்சிச்
சுரிமுக வளைக ளார்ப்பக் கரையரு காகச் சோதி
விரிமணித் தீப மேந்த நாணற்பூங் கவரி வீசப்
பொருள் பல நதிகொண் டாழி காண்குறப் போதல்
போன்ற[46]

சோலைவாய் மலர்த்தேன் பருகியுட் களித்துச்
சுரும்பினம் விரும்பிசை பாடச்
சேலைநேர் விழியார் குழன்முகி லெனவே
சிகண்டிகைச் சிறைவிரித் தாடக்

கோலவார் முரசம் பறவைகண் முழங்கக்
குவளைகள் விழித்துநோக் கிடவே
மாலைகா லையுமாய் மணிகளால் வயங்கி
மகிழ்செயி லானிசூழ் நாடே!'' (76)

முதற் பாடலில் மருத நிலக் காட்சி ஆகிய நதி பரிசல் கொண்டு கடலைக் காணப் போவதாகப் புலவர் பாடுவர். இக்கற்பனையிலும் கம்பன் கருத்தைப் புலவர் போற்றி யுள்ளார். (கம்பன், நாட்டுப் படலம்) காட்சியின் ஒவ் வொரு கட்டத்திலும் கம்பன் படைத்த நாடகக் காட்சி தோன்றினும், அத்தோற்றத்திற்குக் காரணமான பொருள் களை மாற்றிப் புலவர் தனித் திறங்காட்டியுள்ளார். ஓசையும் ஒத்தே அமைந்துள்ளது.

இரண்டாவது பாடலில் 'குவளைகள் விழித்து நோக் கிடவே' எனக் கம்பனின் தொடர்களை முழுமையும் ஆண்டு மூலத்தை இனங் காட்டிய புலவர், இப்பாடலின் அமைப்பை யும் ஓசையையும் மாற்றிச் சிறக்கச் செய்துள்ளார். காட்சி அமைப்பும் கருத்தும் சொற்களும் ஒத்திருப்பினும், வண்ணக் களஞ்சியப் புலவரின் இப்பாடல் சொல்தொறும் சுவை சேர்த்து அடிதோறும் படி தேனை அள்ளித் தருகின்றது. சோலைவாய் மலர்த்தேன் பருகியுட் களித்து சுரும்பினம் விரும்பிசை பாட என வரும் முதலடியின் சொற்கோவையும் சொல்லோடு சொல் ஒத்திசை பயின்று நடக்கும் நடையும் வண்டுகள் கள்ளுண்டு களித்த மகிழ்ச்சியில் தமை மறந்து இசைபாடி இன்புறுகின்ற காட்சியும் உள்ளங் கொள்ளை கொள்வனவாம்.

கம்பர் பாட்டின் தொடக்கத்தில் மயில்கள் ஆட எனச் செய்தியை மட்டும் குறிப்பர். வண்ணக் களஞ்சியப் புலவர் அச் செய்தியை எழுசீர்கள் கொண்ட ஒரு முழு அடியில் உவமை, கற்பனை, விளக்கம் மூன்றும் சேர்த்துச் சிறப்புறப் பாடுவர். பெண்ணின் விரிந்த கூந்தலுக்கு மயில் சிறை விரித்தாடியதை உவமையாக்குவார். அன்றியும் பெண்ணைச் சேலை நேர் விழி யார் என்ற தொடர்களால் குறித்து உவமையால் சிறப்புறுத்து வர். பறவைகள் சிறை விரித்துப் படபடவெனப் பறப்பதை முரசம் முழங்குவதாகப் புலவர் பாடுவது புதிய கற்பனை.

கடலிற் போன மகன் வாராமை கண்டு தாய் புலம்பியதாக அமையும் இருபது பாக்களும் (1383—1402) புலவர் தம் நிகரிலாப் புலமைத்திறங்காட்டும் பொலிவுடையனவாகும் ஓசை இன்பத்திலும் அவல உணர்விலும் அரிய சொல்லாட்சியிலும் உவமையிலும் கற்பனைத் திறத்திலும் இப்பாக்கள் வீறுபெற்று விளங்கக் காண்கிறோம். தானும் தன் மகனும் குறித்த மணமகளையே மணக்க உறுதி பூண்டிருந்தும் பெண் வீட்டார் வேறு மாப்பிள்ளை தேடி விட்ட வருத்தத்தில் அவர்தம் முடிவைச் சாடும் தாயின் சொற்களாகக் 'கூனி கலைப்பில் இந்தக் கோலந் துணிந்தாரே' (1387) எனப் பாடுவர்.

கம்பன் காவியத்தில் கூனி கலைப்பால் கொடுந்துயரம் விளைந்த வரலாற்றை உட்கொண்டு இங்கும் கேடு விளைவித்த வர்களைக் கூனியாகக் காண்கிறது புலவர் உள்ளம். மந்தரை சூழ்ச்சியையே புலவர் 'கூனி கலைப்பு' என்பர். மேலும் பகுதாது நகரத் தாய் ஒருத்தியின் புலம்பலில், கூனி கலைப்புப் புலவரால் பேசப் படுகிறது என்பதை மறந்து விடக் கூடாது.

தாள் கண்டார் தாளே கண்டார் என்ற கம்பனின் அனைவரும் அறிந்த அடி புலவர் உளத்தில் நிறைந்து இருந்த மையானும் தம் காப்பியத்தும் ஆண்டகையின் அடி மலர் களைப் போற்றிய சீடர்களின் பெருமை பாடப் பெரு வாய்ப் பிருந்தமையானும் ஆண்டகையின் தாள் போற்றி மிகப் பல பாடல்களைப் புலவர் பாடியுள்ளார். றாபியா தோழிகளோடு வந்து 'முகியித்தீன் அரசு தாள் கண்டார்' (697) எனப் பாடு வர். புலவர் ஆண்டகையின் தாள்களை மலர்த்தாள் (880, 1407), மருமலர்ப்பதம் (862), சிவந்த பொற்பதம் (859), பாத மலர்கள் (878), பொன்னடி மலர் (882), விரைமலர்ப்பதம் (901), பாதத் தாள் மலர் (969) எனவெல்லாம் போற்றுவர்.

ஆண்டகையின் தோழர்கள் மலர்த்தாள் வேந்தின் (893) தாள் கண்டு போற்றிய தகைமையை மேற்கண்டாங்கு புகழ்ந்து பேசுவர் புலவர். கம்பன் இராமன் திருவடிகளில் ஈடு பட்டுப் பாடியது போல் புலவர் ஆண்டகையின் மலர்ப்பாதங் களில் மனம் போக்கிப் பாடிய மகிமை ஒப்பு நோக்கி உணரத் தக்க அருமையுடையதாகும்.

> "முலைகுடி சந்ததி முலையை விட்டிடுங்
> கலைபுலி மான்களுங் கலந்து கேட்பதாந்
> தலைபொடு மிருந்துளத் தருத்த ழைப்பதா
> மலைகளு மண்களு முருகும் வாய்மைக்கே" (517)

ஆண்டகையின் அவை அருமை பேசும் இவ்வருமையான பாடலில் ஆண்டகையின் ஞானப் பொழிவுகளால் மனிதரும் விலங்கும் தாவரமும் நிலமும் மலையும் ஆகிய அனைத்துப் பொருள்களும் அசைவற்று நின்ற அருமையை முறையே ஒவ்வொரு அடியிலும் வரிசைப் படுத்திப் பாடுவர். இப் பாட்டில் இளங்கோவின் சாயலும் பரஞ்சோதி முனிவரின் பாட்டமைப்பும் அமையப் பெறும் அருமையும் காணத் தக்க தாகும்.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் புலவர் ஈடுபட்டுள்ள திறம் காப்பியத்தில் காணக் கிடக்கின்றது. ஆண்டகைக்கு அடிமை பூண்ட ஆடை நெய்வோன், தன்னை ஆண்டகை அழைக்க, அவர்களை வந்து கண்டு உளம் பூரித்து, மண்ணரசாளும் மன்னன்பால் செல்ல இருந்த தன்னை, 'தடுத்தாட் கொள்ள'க் (1656) காட்சி கொடுத்ததாகப் பேசுவான். சேக்கிழாரின் தடுத்தாட் கொள்ளல் என்னும் சிந்தையள்ளும் செந்தமிழ்த் தொடர்களைப் புலவர் போற்றுவர்.

மேலும் ஆடை நெய்வோன் ஆண்டகையின் சரணந் தாழ்ந்து நின்ற செய்தியை 'அடிமைகட் கடிமையானோன்' (1644) எனப் பாடுவர். ஆண்டகை வழியில் உள்ளோர் 'அடிமைகட் கடிமையானேன்' (26) எனப் புலவர் தம்மைக் குறிப்பர். மேலும் றாபியத்துல் அதவிய்யாவை 'தேசுருப் பெறு பூங்கோதை' (780) என்ற சேக்கிழாரின் அழகுத் தொடரில் புகழ்வர்.

**புலவர் நடை நலம் :**

புலவர் தம் கருத்தைப் புலப்படுத்தச் சொற்களை ஆளுந் திறத்தில் காட்டும் பல்வேறு நுட்பங்களைத் திறனாளர்கள் கண்டு காட்டுவது காப்பியங் கற்போருக்குப் பெருந் துணையாகும். இங்ஙனம் கண்டு காட்டப்படுவது புலவரின் தனி நடையெனவும் சொல்லாட்சித் திறம் எனவும் கூறப்படும். கற்போர் உளங்கொளும் வகையில் கருத்துக்களைச் சொல்லப் புலவர் பயன்படுத்தும் சொற் சிலம்பங்களும் இப்பகுதியில் அடங்கும். அவதாரப் படலத்தில் ஐந்து பாடல்கள் 'அப்துல் காதிர் முகியித்தீன் நிதி உதித்தனரே' என முடிவுறும் வகையில் பாடுவர் (128—132).

இவ்வைந்து பாடல்களிலும் இறுதி அடி ஒரே மாதிரியாக முடியும்படி பாடுவது ஐந்து பாடல்களிலும் ஒரே செய்தி பேசப்படுகிறது; அச் செய்தி பல்வேறு நோக்கங்களில் பேசப் படுகிறது என்ற உணர்ச்சியைப் படிப்பவர்க்கு உண்டாக்கி

ஒருமைப்பாடு உருவாக்கப் படுகிறது. ஒவ்வொரு அடியின் இறுதியிலும் அப்துல் காதிர் உதித்தனர் என்ற ஒரே கருத்து பேசப் பட்டாலும் முதல் பாடலில் கருணைக் கடலாகிய அப்துல் காதிர் என்பதும், இரண்டாம் பாடலில் 'கவுத'ாக உயர் அப்துல் காதிர் எனவும், மூன்றாம் பாடலில் கமலப் பத அப்துல் காதிர் எனவும், நான்காம் பாடலில் எவ்வுலகும் துலங்கும் அப்துல் காதிர் எனவும், ஐந்தாம் பாடலில் முடிபுனை அரசர் தொழும் அப்துல் காதிர் எனவும் புலவர் பாடுவர்.

ஒரே பொருளை ஐந்து சிறப்பு நோக்கங்களில் பாடி ஆண்டகை பிறந்தார் என்ற அருமைச் செய்தியைப் படிப்போர் உள்ளத்தில் நிலைக்கச் செய்யப் புலவரின் நடைபற்றிய இப்பார்வை பெரிதும் உதவும். மேலும் புலவர் நடைபற்றிய இக்கருத்து புலவர் உள்ளங் காணவும் பேருதவி புரியும். ஆண்டகையை ஐந்து அடிப்படையான நோக்கங் களில் புலவர் புகழ்ந்திருப்பதை உற்று நோக்கினால் ஆண்ட கையின் அரிய பெருமைக்கு உரிய ஐந்து காரணங்களும் பளிச் செனப் புலனாகும். இன்னும் பல்வேறு நோக்கங்களில் ஒருமைப்பாடு மிக்க இவ்வைந்து பாடல்களையும் ஆயலாம். இங்கு விரிவஞ்சி விடுக்கப்படுகிறது, எனினும் புலவர் நடைப் போக்குத் தெளிவாகப் புலப்படும் இடம் இது.

மேலும் மூன்று, நான்கு, ஐந்தாம் பாடல்களில் முதல் மூன்று அடிகளிலும் மும் மூன்று முறை முறையே தழைக்க, உதிக்க, பெருக என்ற மங்கலச் சொற்களைப் பெய்து ஆண்ட கைக் குழந்தை வளர்ந்த பல்வேறு பருவங்களிலும் பல்வேறு பெருமைகள் தழைக்கவும், உதிக்கவும், பெருகவும் குழந்தை வளர்ந்த அருமை அற்புதமாகப் புலவரால் பேசப் படுகிறது.

மேலும் தழைக்க முதலான சொற்கள் பலமுறை திரும்பத் திரும்ப வருவதால் படிப்போர் தம் உணர்ச்சி ஒழுங்கையும் உணர்ச்சி ஒருமையையும் புலவர் தம் எழுதுகோலில் வைத்து இயக்கக் காண்கிறோம். இங்ஙனம் பாடல் தோறும் அல்லது ஒரு பொருள் பற்றிய பாடல்கள் தோறும் நுழைந்து நோக்கி னால் புலவர் தம் பல்வேறு நடை நுட்பங்களைக் கண்டு களிக்க முடியும்.

**அடுக்குத் தொடர்களின் அழகு**

இதே நுட்பத்தைப் புலவர் சில சொற்களை அடுக்குத் தொடர்களாக்கி ஆண்டு, அச்சொற்களுக்கு மாய சக்தியை

ஏற்றி விடுவதிலும் பார்க்கிறோம். வளர்ந்த ஆண்டகைக் குழந்தை நடை பயில்வதைப் பாடுகிறபோது புலவர் நடை நாம் பயின்று மகிழ நடக்கின்றது. விண்ணும் மண்ணும் 'மகிழ்ந்து இருந்திட இருந்து', கவின் முழுதுவதும் 'தவழ்ந் திடத் தவழ்ந்து', தவநிலை 'நின்றிட நின்று', உலகெலாம் புதுமை 'நடந்திட நடந்து' நாயகர் விளங்கினர் என முடிப்பர் (139). குழந்தையின் பல்வேறு நிலைகளாகிய இருத்தல், தவழ்தல், நிற்றல், நடத்தல் ஆகிய நான்கையும் முறைப்படி வரிசைப் படுத்திக் குழந்தையின் வளர்ச்சி காட்டிய புலவர், அந்நான்கு சொற்களுள் ஒவ்வொன்றையும் இரண்டு முறை அடுக்கி விடும் நடைத் திறத்தால் விளைந்துள்ள பொருட் சிறப்புக்கு அளவும் உண்டோ? நான்கு அடுக்குத் தொடர்கள் இப்பாட்டில் விளைத்திருக்கும் மாயத்தைத் தனியே இருந்து பாடலைப் படித்துச் சுவைப்போர்களே உணர முடியும். அடுத்த பாடலிலும் (140) விளங்க என்ற சொல்லைத் திருப்பித் திருப்பிப் பெய்து, ஆண்டகை சொல் விளங்கிய சிறப்பைப் பாடுவர்.

புலவரின் அடுக்குத் தொடர்கள் காப்பியம் முழுதும் அடுக்கி வந்து அளவிலா இன்பம் பயக்கின்றன. கடவுள் வாழ்த்துப் படலத்தின் நிறைவில் முகியித்தீன் திருப்பெயர் கூறும் பேற்றால் இக்காப்பியத்துப் பிழை நிகழாது என்ற கருத்தைச் சொல்ல வந்தவர் 'பிழை இல்லை இல்லையே' (40) எனப்படலத்தை நிறைவு செய்வார். இல்லை என்ற சொல்லை அடுக்குத் தொடராக்கி அக் கருத்தை அழுத்தம் பெற உறுதி பெற உரைத்து விடுவர் புலவர். புலவரின் இந்நடைப் போக்கு அக்கருத்தில் புலவர்க்குள்ள உறுதிப்பாட்டை உரைப்பதாக அமையும். இங்ஙனம் மிகப் பல விடங்களில் புலவரின் அடுக்குத் தொடர் நடை அமைவதைப் பார்க்கிறோம்.

மறுகுகள் தோறுந்தோறும் (155),
அஞ்சேல் அஞ்சலென்று அறைந்திட்டானே (180),
தாழ்ந்தோர் உயர்ந்து வந்தெய்தியெய்தி (186),
முறை முறை துதித்து வாழ்த்தி (245),

குபிரை மாற்றும் முகியித்தீன் முகியித்தீனே (258),
அடவரும் பாலையென்றஞ்சி அஞ்சியே (266),
உரைத்தனன் உய்மின் உய்மினென்று (287),
இனிதொடும் ஊட்ட ஊட்ட எழில் வயிறார உண்டார் (339),

வீற்றிருந்திட வேண்டுமே வேண்டும் (713),
நாட்கு நாளு மேலிட வேண்டும் வேண்டும் (1102)

என வரும் அடுக்குத் தொடர்கள் மிகப் பல அங்கங்கே புலவர் கருத்தையும், பல்வேறு பாத்திரங்களின் கருத்தையும் அழுத்தம் பெறக் காட்டி அழகு செய்கின்றன.

**ஒத்த ஓசையுடைய சொற்களை ஆளல்**

அடுக்குத் தொடர்களைப் போலவே பல ஒத்த ஓசை ஒழுங்குடைய பிற சொற்களை இணைத்துச் சொற்களுக்கு ஓசை நயமூட்டுவதோடு கருத்தின்பமும் தருவர் புலவர். 'எதிர் உறைந்து உரைக்கச் சென்றார்' (207) எனப் பாடுவர். 'சொரி கதிர்த் தாளந் தோன்றத் தோன்றல் புன்முறுவல் செய்தார்' (157) என்ற இடத்தில் தாளந் தோன்றுமாறு தோன்றலாகிய அண்டகை புன்முறுவல் பூத்தார்கள் எனப்பாடித் 'தோன்றத் தோன்றல்' என்ற ஒத்த ஓசை இன்பத்தில் ஆழ்த்துவர்.

மேலும் அண்டகை புன்முறுவல் பூக்கப்போது பற்களின் ஒரு பகுதி தோன்றுவது கதிர் சொரியும் முத்துக்கள் தோன்றுவது போல் தோன்றின எனப் பொருவா-பொருள் நயமும் காண்கின்றோம். மணமகன் ஊர்வலம் வரும்போது விட்ட 'வாணக்கோடும் என்னுயிரும் வானக்கோடாகுமோ' (1303) என்ற அடியில் 'வாணவேடிக்கைகள் வானத்தில் வெடிக்கின்றன; அது கண்டு உளையும் என்னுயிரும் வானத்து ஓடி விடாது நிலைக்குமோ' என்ற சாராவின் புலம்பலில் 'வாணக் கோடு' 'வானக்கோடு' என்ற இரண்டு ஒத்த ஓசைச் சொற்களைப் பொருத்தமாகப் பெய்வர்.

ஒத்த ஓசைச் சொற்களைத் தொடர்ந்து பன்னிரு பாடல்களில் பெய்து (1157—1168) ஓசை இன்பம் தருவதோடு செய்குதனா தரீசா ஆகிய இருவரின் பல்வேறு உள்ளக் குமைப்பங்களையும் குமுறல்களையும் உணர்த்திக் காட்டுவர். செய்குதனா விலாயத்தெல்லாம் பறிபட்டார் வெறிபட்டாரே(1157), தயங்கினார் மயங்கினாரே (1158), பசி விட்டார் மதி விட்டாரே (1159), அருகுற்றார் உருகுற்றாரே (1160), அயல் கண்டார் மயல் கொண்டாரே (1162), மறுகினார் குறுகினாரே (1163), சித்தம் ஏதென்றார் ஓதென்றாரே (1164) எனவாங்கு ஒத்த ஓசைச் சொற்களைப் பொருட் பொருத்தத்தோடு ஆளும் புலவர் புலமைத் திறம் கண்டு போற்றத் தக்கதாகும்.

**ஒலிக் குறிப்புச் சொற்கள் :**

ஒத்த ஓசைச் சொற்களைப் பெய்தது போலவே புலவர் ஒலிக் குறிப்புச் சொற்களையும் பெய்து ஓசை நயத்தை உள்ளத்

தில் எழுப்பிக் காட்டுவர். 'கதுமென எழுந்து போந்து' (160) என்ற இடத்தில் எழுந்த வேகத்தின் ஓசையையும் எழுந்து சென்று செய்த செயலின் அருமையையும் உடன் உணர்த்திக் காட்டும் இடம் அற்புதமானது. அது போலவே,

'' இரு விழி கனற் பொறி கதுவ வெட்டி வந்து
உருமெனக் குரல் அதிர்த்து ஓதி நின்றதே'' (287)

எனப் பாடி 'உருமென' என்ற ஒலிக் குறிப்புச் சொல்லை அதே ஓசை தொடர்ந்து வரும் சொற்களால் பாடுவர். இங்கு சினக் குறிப்பும் சின உணர்ச்சிக்குரிய வல்லொலிகளால் குறிக்கப் படுவது சிறப்பாகும். மேலும்,

'' தொந்தோ மெனவிங் கோடி நெடுந்தூர மிருந்தே
வந்தோ மிதுகண் டோம்''...(1050)

என்ற ஓசை நயமிக்க பாட்டில் 'தொந்தோம் என' என்ற ஒலிக் குறிப்புச் சொற்களையும் அடுத்த அடியில் வரும் 'வந்தோ மிது கண்டோம்' எனத் தொடங்கும் ஓசை நயத்தை யும் பாடிக் களிக்க வேண்டும்.

**முரண் நயம் மிக்க சொற்கள்:**

ஓசை இன்பந்தரும் சொற்களைப் போலவே பொருளின்பம் தரும் சொல்லாட்சியிலும் புலவர் நடை சிறந்து நிற்கின்றது. சைத்தானின் சொற்களைப் 'பொய்மையோன் மெய்மை சொன்னான்' (374) எனவும், காந்து கண்ணினர் செவிகளிற் கேட்டனர் (711) எனவும், மெய்மைதானோ பொய்மையோ விளம்பு மென்றான் (225), திண்டோள் வேந்தர்கள் இறைஞ்சும் பொற்றாள் (165) எனவும் முரண் நய மிக்க தொடர்களை அமைத்துக் காப்பியத்திற்கு அழகு சேர்ப்பர்.

**புதுச் சொல்லாட்சி**

வண்ணக் களஞ்சியப் புலவர் இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் இடம் பெறாத ஒரு புதிய சொல்லைத் தம் மூன்று காப்பியங்களிலுமே ஆளுகின்றார். மனைவியைக் குறிக்கக் கணவி என்ற சொல் ஆளப் படுகின்றது. இச் சொல்லைக் குத்பு நாயகக் காப்பியத்தில் பல இடங்களிலும் (1510, 1614, 1630), இராஜ நாயகத்தில் பதினோரு இடங்களுக்கு மேலாக வும் (கனவு கண்டு மணஞ் செய்த படலம்—53), தீன் விளக்கத் திலும் (பத்தாம் நாட்போர்புரி படலம்-94) இச் சொல்லைப் புலவர் ஆள்கின்றார். தம் அனைத்துக் காப்பியங்களிலுமே புலவர் இச் சொல்லை ஆள்வதால், இச் சொல்லாட்சி பொருத்த

முடையது என்பதும் பெரு வழக்குப் பெற வேண்டும் என்பதும் புலவர் கருத்தாகக் கருதலாம்.

டாக்டர் எம். எம். உவைஸ் அவர்கள் இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் பற்றிய தம் ஆய்வேட்டின் இறுதியில் இச் சொல்லாட்சி பற்றி விரிவாக ஆய்ந்துள்ளனர் (பக். 406—409). மொழி நூலார் இச்சொல்லாட்சியின் பொருத்தத்தை மேலும் ஆய வேண்டும் என முடிக்கின்றார்.

இறைவன்—இறைவி, அரசன்—அரசி, தலைவன்—தலைவி, தோழன்—தோழி, பாங்கன்—பாங்கி என ஒத்த ஆண்—பெண்பாற் சொற்கள் இருவழக்கிலும் உள்ளன. இவற்றிற் கொத்த கணவன் கணவி ஆகிய சொற்கள் வழக்கில் இல்லை. கணவன்—மனைவி என்ற வழக்கேயுள்ளது. புலவர் புதிதாக உருவாக்கிய வழக்கின் பொருத்தமே நம் ஆய்வுக் குரியதாகும். டாக்டர் எம். எம். உவைஸ் அவர்கள் இச்சொல்லாட்சி சிற்றிலக்கியங்களில் இடம் பெற்றுள்ளதாகக் கூறுவர்.[46]

டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் நெல்லிக்கனி என்ற தம் நாடக நூலில் கணவி என்ற பெண்பாற் சொல்லை ஆண்டமை புலவரின் சொல்லாட்சிப் பொருத்தத்திற்குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது.

புதிய சொல்லாட்சி என்றாலே அதில் பொருத்தமின்மை காண முந்துவது மொழிப்பற்றுடையார் கடமையாகும் எனச் சிலர் கருதுகின்றனர். ஒரு மொழி வளரும் நிலையில் இருக்கும் போது எழுதுவோரிடம் இப்போக்குக் காணப்படுமாயின் அம்மொழியின் நிலை என்னாகும் என்பதைச் சற்றுச் சிந்தித்தால் தெளிவு பிறக்கும். தமிழ் போன்ற வளர்ந்த மொழிகளிலும் இப்போக்கைக் காண்கிறோம் முன்னர் நாம் காட்டிய பல ஆண்—பெண்பாற் சொற்களின் ஆட்சிக்கு ஒத்ததாகக் கணவன்—கணவி எனக் கூறுவதில் பொருட் குழப்பமோ கருத்துத் தெளிவின்மையோ ஏற்படாத போது மொழி வளர்ச்சி கருதிப் புதுச் சொல்லாக்கங்களை உருவாக்குவது இன்றியமையாத் தேவையாகும். அக்கடமையையே மேற் குறித்த இரு பெரும் புலவர்களும் செய்துள்ளனர்.

இல்லாள் என்ற பெண்பாற் சொல்லுக்கு 'இல்லான்' என ஆண்பாற் சொல்லை வழங்குவதில்லை. திருவள்ளுவர் 'இல்', 'இல்லாள்' என்ற சொற்களால் குடும்பத் தலைவியைக்குறிப்பர். குடும்பத் தலைவனை 'இல்லான்' எனக் குறிக்கவில்லை. அங்ஙனம் குறிக்கப்படுமாயின் 'இல்லாதவன்' என்ற பொருளைத் தந்து பொருட் குழப்பம் விளையும். அது

போலவே கணவனைக் குறிக்கும் 'கேள்வன்' என்ற ஆண்பாற் சொல்லுக்குரிய பெண்பாற் சொல்லாகக் 'கேள்வி' என்று குறிப்பதில்லை. பொருட் குழப்பம் இங்கு வெளிப்படை.

ஆனால் கணவன்—கணவியில் இத்தகைய பொருட் குழப்பம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. கணவன்—மனைவி என்று கூறுவதைவிடக் கணவன்—கணவி எனக் குறிப்பது எளிதாகவும், இயல்பாகவும் இருக்கிறது. இங்ஙனம் குறிப்பது மொழி நூலாய்வுப்படி பொருத்தமாக இல்லை எனக் கூறுவோர்க்கு நாம் ஒன்று கூறக் கடமைப் பட்டிருக்கிறோம். கணவன் என்ற தொடரே, அங்ஙனம் ஆய்ந்தால் பொருந்தவில்லை. 'கண்' வேர்ச் சொல்லாயின் கண்ணன் என்றோ கண்ணவன் என்றோதான் வர வேண்டும். இதில் குழப்பம் இருப்பதாலேயே கணவன் என்று கூறினர். பின்னர் கணவி என்பது மட்டும் பொருந்தாது என்று கூறுவது எங்ஙனம்?

செல்வன், கேள்வன் என்ற தொடர்களில் செல், கேள் வேர்ச் சொற்கள் ஆயின் செல்லன், கேளன் என்றே வர வேண்டும். செல்வன், கேள்வன் என்ற கூறுவது போலவே கணவன் என்றும் கூறுவது வழக்காயிற்று. செல்வன்—செல்வி போன்றதே கணவன்-மனைவி என அறியலாம். இது போலவே மன்னன்—மன்னி என்றும் கூற வேண்டும் என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்

டாக்டர் உவைஸ் அவர்கள் வேர்ச் சொல்லாகக் 'கண' என்பதைக் கொள்வர். கண என்ற வட மொழிச் சொல் குழு, கூட்டம் எனப் பொருள் தரும். கண + அன் உடன் படுமெய் பெற்றுக் கணவன் என்பதாயிற்று என்பர். அது போலவே, கண + வ் + இ— கணவி என்று ஆயிற்று என்பர். இக்கருத்து இருவகையிலும் பொருத்தமாகத் தெரியவில்லை. கணவன் என்ற பழந்தமிழ்ச் சொல்லுக்குக் கண என்ற வடமொழி வேர்ச் சொல்லைக் கொள்வது பொருந்தாது. மற்றொன்று கணவனுக்கு அது பொருந்துமே தவிரக் கணவிக்குப் பொருந்தாது. ஏனென்றால், கூட்டத்தின் தலைவனாகக் கணவனைக் கருதுவது தமிழ் மரபு; குடும்பத்தின் தலைவியாகவோ கூட்டத்தின் தலைவியாகவோ மனைவியைக் கருதுவதில்லை. ஆகவே கண என்பதை வேர்ச் சொல்லாகக் கொள்ளும் ஆய்வு பொருத்தமாகப் படவில்லை.

ஆகவே செல்வன், கேள்வன், கணவன் என்பன தமிழ்ச் சொற்கள். இச்சொற்களில், வேர்ச் சொல் பற்றிய ஆய்வு முழுமை பெறவில்லை, செல்வன்—செல்வி போல, கணவன்—

கணவி இயல்பும் பொருத்தமும் உடையதாகும். மொழிநூலார் உடன்படாவிட்டாலும் மன்னன்—மன்னி போலக் கணவன்—கணவி வழக்குக்கு வந்தே தீரும். கேள்வன்—கேள்வி, இல்லான் – இல்லாள், மனைவன்—மனைவி, புலவன்—புலவி போன்றவை பொருட் குழப்பம் தருமாதலின் ஆளுதற்கில்லை.

**அந்தாதி அமைப்பு :**

தமிழ் மக்கள் போற்றிக் கற்க வேண்டும் என்ற நோக்கில் காப்பியஞ் செய்த புலவர். ஆண்டகை அவையில் பேசிய தத்துவக் கருத்துக்களை விடுத்து, அற்புத நிகழ்ச்சிகளையே பெரிதும் பேசியமைக்குக் காரணம் காப்பியத்தில் சுவையான கதைப் போக்கு அமைய வேண்டும் என்பதேயாகும். நீண்ட தத்துவ விளக்கங்கள் காப்பியச் சுவைப் போக்குக்கும் விரைந்த ஓட்டத்துக்கும் தடையாகும் என்பது திறனாளர் கருத்தாகும். காப்பியத்தில் கதைப்போக்கு சிறக்க வேண்டுமெனக் கருதிய புலவர், சொல் அந்தாதி, பொருள் அந்தாதி அமைப்பில் பாடல்களை யாப்பர்.

அறைந்திட்டாரே (124) என முதற் பாடலை முடித்து, அடுத்த பாடலில் அறையும் அக்கனவை (125) என அடுத்த பாடலைத் தொடங்குவர். பருதி என்றிசைத்திட்டாளே (148) என முதற் பாடலை முடித்து பருதி என்றுரைத்தலோடும் (149) என அடுத்த பாடலைத் தொடங்குவர். இங்ஙனம் பாடலுக்குப் பாடல் தொடர்பூட்டிக் கதையமைப்புச் சிறக்கப் பாடிச் செல்லும் முறை காப்பியம் முழுதும் காணக் கிடக்கின்றது (149—150, 155—156, 156—157, 180—181, 212—213, 215—216, 217—218, 500—501). பொருள் அந்தாதியாகவும் பல இடங்களில் பாடுவர். 'இயம்ப வேண்டும், (760)என முதற் பாடலை முடித்து 'ஓதல் இன்றெனில்' (761) என அடுத்த பாடலைத் தொடங்குவர். சொன்மின் என்றார் (765) என முதற் பாடலை முடித்து, அடுத்த பாடலில் 'உரைதர எழுந்து' (766) எனப்பாடுவர் (773-774, 774-775, 822-823).

**ஒரு பொருட் பன்மொழி :**

புலவர் நடைப் போக்கில் புலவர் தம் சொற்றொகுதி தோன்றும் வகையில் ஒரு பொருள் குறிக்கும் பன்மொழிகளைப் பல இடங்களில் ஆள்வர் **ஞாயிற்றைக்** கதிரோன், பருதி, வெய்யோன் (158), அருணன், கனலி (160), பானு (161), சோதி (162), சுடரோன் (164), செங்கதிர் (169) எனப் பல சொற்களில் தொடர்ந்து வரும் பல பாடல்களில் குறிப்பர். **வெள்ளத்தைக்** குறிக்கப் புனல், தாரை (43), மழை, வெள்ளம்

(45), நாரம் (46), வாரி (47), நதி (48), நீத்தம் (49), ஆறு (52), உந்தி (53) ஆகிய பல்வேறு சொற்களால் குறிப்பர். கலை (1642), நாகம் தூசு (1643) ஆடை (1646) கோடிகம் (1676) ஆகிய பல சொற்களால் **ஆடையைக்** குறிப்பர். பூமான் (177), தரை (179), பூமி (179, நிலம் (181) ஆகிய சொற்களால் **நிலத்தைக்** குறிப்பர். கோ, கபிலை (209), மாடு (210), பசு (213) ஆகிய சொற்களால் மாட்டைக் குறிப்பர்.

**புலவர் நடையில் சில தனித்தன்மைகள் :**

'மவுல' என்ற சொல்லைச் (1026) 'சொல்ல' என்ற பொருளில் புலவர் ஆளுவர். சொன்னார் என்பதற்கு மவுன்றார். மவின்றார் எனவும், சொல்லுதல் என்பதற்கு மவுலுதல் எனவும் மிகப் பல இடங்களில் குறித்துச் செல்கின் றார். இந்நடைப் போக்கால் சொல்ல, செப்ப, சொன்னார், நவின்றார் என வரும் பல தமிழ்ச் சொற்கள் காப்பியத்தில் மிகக் குறைவாகவே இடம் பெறும். இச் சொல்லின் மூலம் வல்லார் பலரைக் கேட்டும் விளங்க வில்லை. அறபு அல்லது பாரசீகச் சொல்லின் திரிபாக இருக்க வேண்டும். மௌலிது என்ற அறபு மொழிச் சொல்லின் திரிபாகவே மௌலுதல் என்ற சொல் தோன்றியிருக்க வேண்டும் எனத் துணியலாம். உமறுப் புலவர் முதலான இஸ்லாமியத் தமிழ்க் காப்பியப் புலவர் பலரும் இச் சொல்லை ஆள்வர்.

'உபய' என்ற சொல்லைப் புலவர் விரும்பி ஆள்வர். உபய செங்கை அரசு (25), உபய கண்ணீர் (227), உபய கன்னம் (337), உபயமா நிதி (87), உபய காலம் (1161) என உபயச் சொல்லாட்சி நிறைந்து கிடக்கின்றது.

வட்டார வழக்குச் சொற்களைப் புலவர் தயங்காது ஆளப் பார்க்கிறோம், பறவை என்ற சொல்லைப் பட்சி எனவும், பக்கி எனவும் பாமரர் வழங்குவர். புலவரும் 'பக்கி' (619) என்பர். இரகசியம் என்பதனை இராசியம் (711; 712) எனவும், காட்சி என்ற சொல்லைக் காச்சி (1405) எனவும், பரியாசித்த மொழி (224), கொல்லை (115) எனவும், பட்டினி என்றசொல்லைப் பட்டினை (949) என்றும், அருவருப்பு (1292), குறுஞ்சி (1106) எனவும் ஆள்வர். ஈந்தனர் என்பதனை ஈய்ந்தனர் (1035) எனவும், ஈகுவம் என்பதனை ஈய்குவம் (996) எனவும் கூறுவர். தீமை என்பனைத் தீய்மை (1005) என்பர் மாற்று உயர்ந்த என்பதனை 'மாத்து உயர்ந்த (91) என்பர். ஒருமை பன்மை மயக்கந் தோன்றும் சொல்லாட்சி யைப் பல இடங்களில் பார்க்கிறோம். கருவுறத் தரித்தன, கருப்பமாயின (1022), வளர்ந்தன காளையாய் (1038), இடை

பருக்தன (1289), தோற்றின கருப்பமும் (1309), கண் சொருகின (1290) என வெல்லாம் ஒருமை பன்மை மயங்கப் பேசுவர். பலவும் என்பதற்குப் பலதும் (86) என்பார்.

ரகரத்தை றகரமாகப் பல சொற்களில் ஆளுவர். சொற்கம் என்பர்; அப்துல் காதிர் என்பதினைக் காதிறு எனவும் கூறுவர்.

**உணர்ச்சி**

உணர்ச்சி வெளிப்பாடே கவிதை என்பர். ஒரு புலவனின் படைப்பாற்றல் திறம் அவன் படைத்த இலக்கியத்தின் வடிவத்திலும் உணர்ச்சியிலும் உணர்த்தும் ஆற்றலிலுமே ஓங்கி நிற்கக் காணலாம். கவிதையில் உணர்த்தப்பட்ட உணர்ச்சி அக்கவிதையின் உயிர் எனக் கூறலாம். உணர்ச்சியைப் புலவன் எவ்வளவு திறமையோடு புலப்படுத்துகிறானோ—உணர்த்தும் ஆற்றல் புலவனிடம் எந்த அளவிற்கு ஓங்கி நிற்கின்றதோ—அந்த அளவுக்குப் புலவனின் புலமைத் திறம் உயர்வாக மதிப்பிடப் படும்.

புலவரின் நடை பற்றி நாம் ஆய்ந்தவெல்லாம் கவிதையின் வடிவும் பற்றியதாகும். கவிதையின் உணர்ச்சி என்பது, கவிதையின் பொருளா என்றால் இல்லை எனலாம். கவிஞன் உணர்த்த நினைக்கும் பொருளைப் படிப்போர் உள்ளங் கொள்ளுமாறு உணர்த்தும் திறனும், புலவன் உணர்த்தக் கருதிய பொருளைக் கற்போரும் புலவன் உணர்ந்தாங்கு உணரச் செய்யும் திறனும் உணர்ச்சி எனப்படும். கவிதையில் உணர்ச்சி பற்றி நாம் பேசுவது கவிஞனின் உணர்த்தும் ஆற்றலின் அளவையும் அவன் உணர்த்துவதற்குக் கையாளும் முறைகளையும் விளங்கிக் கொள்ளவேயாகும். கவிஞனின் உணர்த்தும் ஆற்றல் அவன் கையாளும் உவமைகளிலும் அவன் காட்டும் கற்பனைத் திறத்திலும் பல்வேறு சுவைகளை உரிய வகையில் வெளிப்படுத்துவதிலும் ஓவியம் போல—நிகழ்ச்சி களைக் காண்பது போல—க் காட்சிகளை வருணிக்கும் திறத்திலும் விளங்கக் காணலாம்.

**உவமை**

வண்ணக் களஞ்சியப் புலவரின் காப்பியத்தில் தோன்றும் கவின்மிகு உவமைகள் புலவரை உவமைக் கவிஞராகவே உயர்த்தி விடக் காண்கிறோம். புலவர் தம் உவமைத் திறம் அவர்தம் கற்பனைத் திறத்தையும் வருணனைத் திறத்தையும் உடன் காட்டும் வல்லமை பெற்றதாகும். புலவர் இத்திறங் களைக் காட்ட வாய்ப்புத் தரும் முதற் படலமாகிய நாட்டுப்

படலத்திலேயே உவமை வாயிலாக உயர் பொருள்களை உணர்த்திக் காட்டும் நயமிக்க நான்கு பாடல்களைக் காண்கிறோம் (45, 55, 56, 67). 'துளி மழைப் புனல்கள் கூடிப் பெரு வெள்ளமாகப் பரந்தமைக்குச் 'சிறிதருள் கொடை பெரிதாகப் பரந்தெழுந்தோங்கல் ஒப்பாய்' (45) என உவமை காட்டுவர். புலவர் உள்ளங் கவர்ந்த இக்கருத்தை மருத நிலத்திற் பரந்த வெள்ளம் வயல்களில் பலவிடத்தும் பரந்து பெருகியமைக்கும், 'கொடுத்தவர் தமக்குச் செல்வம்குறைவின்றி அளவில்லாது நிறைதல் போல்' (55) என உவமை செய்வார். மள்ளர்கள் வயல்கட்குக் கரைகள் அமைத்தமைக்கு உவமை யாக, அறிவிலாத மூடர்பால் கல்வி நுட்பம் வீணுறச் செலுத் திடாது விவேகமாங் கரையிட்டென்ன' (56) என உவமிப்பர். நெல் நாற்றுத் தழைத்து வளர்ந்ததற்கு உவமையாகத் தரும சிந்தையுடையோர் குலம் தழைப்பதையும், நாற்றுச் சூல் முதிர்ந்து நெல் மணிகளின் சுமையால் சாய்ந்து கிடப்பதைப் புலனயல் புகுத்தா மடந்தையர்தம் நிலம் நோக்கிய பார்வைக்கும், முற்றிய நெற்கதிர்கள் படிந்து கிடந்தமைக்கு அறிவுயர்ந்த நிலையினர் அடங்கி நிற்பதையும் உவமை செய்வர் (67). மேற்குறித்த நான்கு பாடல்களிலும் உயர் அறங்கள் ஆறினைச் செறித்துத் தரும் புலவர் போக்கு, இயற்கை வருணனைகள் வெற்று வருணனைகளாக அமை யாமல் உயர் பொருள்களை உணர்த்திக் காட்டும் வளமிக்கன வாக அமைய வேண்டுமென்ற கருத்துக் காட்டுவதாகும்.

முதற் படலமாகிய கடவுள் வாழ்த்துப் படலத்துங்கூட அவையடக்கம் பாடக் கிடைத்த வாய்ப்பைப் பயன் கொண்டு அப்பகுதியை உவமைகள் அடங்கப் பாடுவர். தம் கவியைத் தமிழ்ப் புலவோர் கவியொடு சேர்ப்பது 'ஈப்புலிக்கும் தாய்ப் புலிக்கும் சரி சொல்வதொக்கு மென்பார்' (34). விண்ணில் உற்று விளங்கும் மணிக்கும் மண்ணில் உற்று உடைகின்ற மண் மணிக்கும் உவமை செய்வார். (35). மேலும் வழி நடத்து வயப்பரி வீரர்கட்கும் கழி நடத்து சிறுவர்கட்கும் உவமை செய்வர் (36).

''ஆள வாய்க்குரங் காட்டிய கூத்துக்குத்
தாள பேதமு ணர்வது தானுண்டோ
நீள வாய்ந்த புலவர் நினைப்பரோ
கோள தாய்ந்தென் கவியினுங் குற்றமே'' (37)

என்ற அருமையான பாடல் புலவர் கற்பனைத் திறத்திற்கும் கவித் திறத்திற்கும் உவமைத் திறத்திற்கும் ஒரு பெருஞ் சான்றாக விளங்கும். 'குரங்கு ஆடிய கூத்தில் யாரும் தாள

பேதம் பற்றிக் குறை காண்பதில்லை; அது போலவே நீள்புகழ்ப் புலவர் என் கவிக் கோளிற் குறை காண்பதில்லை என்பர்.

ஆண்டகையோடு வாதிட வந்த அதபு என்னும் நகரத்தார் தோற்றுப் போய் ஒருவர்க்கொருவர் உரைக்காமல் தனித் தனிச் சிதறியோடியதைப் பாடும்போது இரண்டு சிறிய இனிய பொருத்தமான உவமைகளைப் பெய்வர். அவர் உள்ளம் பதைபதைத்தமைக்குப் பாந்தள் பற்றிய தேரையையும், மீண்டு தம்பதி புகுந்தமைக்கு ஆந்தை பொந்தில் புகுந்ததையும் உவமிப்பர் (678).

ஆண்டகை வேண்டுதலால் மகப்பேறு பெற்ற தோழர் அறபி குழந்தையை எடுத்து வந்து ஆண்டகையிடம் தந்தனர். குழந்தையை வாழ்த்தித் துஆச் செய்த ஆண்டகை அறபி கையில் குழந்தையைக் கொடுத்தனர்.

'தினகரன் புதுக்கதிர் திரட்டி ஈதல்போல்
வினவிய அறபிகை மீதில் ஈந்தனர்' (1034)

என வரும் சிறிய உவமை ஒவ்வொரு நோக்கிலும் உயர்ந்து விளங்குகிறது. ஆண்டகைக்கு ஞாயிறும், ஞாயிறு தந்த ஒளி குழந்தைக்கும் உவமை செய்யப் படுகிறது. ஞாயிறு ஒளியைத் திரட்டித் தந்ததுபோல ஆண்டகைக் குழந்தையை அறபி கையில் எடுத்துத் தந்தனர் என எல்லா நோக்கிலும் பொருத்த மான உவமையைப் புலவர் பெய்வர்.

பிள்ளைப் பேறற்றவர் பெரு வருத்தங் காட்டும் அருங் களம் ஒன்றைப் படைத்துப் புலவர் உவமைகளை நிறைத்து வைக்கின்றார். பிள்ளையற்றோர் பெற்ற பெருஞ்செல்வம் கொள்ளையுற்றாலுங் குறையொன்றில்லை எனக் கூறுவர். பிள்ளையில்லாதிருப்பது கண்ணின் மணியில் ஓர் வெள்ளை யுற்றது போன்றது என்கின்றார். (997) பிள்ளை இல்லார் பெற்ற பெருஞ் செல்வம் மணமற்ற மலர் போன்றதென் கின்றார். (998)

''வெள்ளி பூத்தொளிர் விண்மதி வெண்கதிர்
கிள்ளி பூத்த செறிவனம் வீசலுங்
கள்ளி பூத்தலுங் கான்முளை யற்றவர்
தெள்ளி தாய்ப் பெறுஞ் செல்வமு மொக்குமே,'' (999)

விண்ணகத்துப் பூத்து ஒளிமழை பெய்யும் வெண்ணிலா மனிதர் வழங்கா வறிய வனத்தில் பொழிதல் போன்று பயனற்றது பிள்ளையில்லார்பெற்ற பெருஞ்செல்வம் என்பார்

கான்முளையற்றவர் பெற்ற செல்வம் கள்ளி பூத்தல் போல் பயனற்றது என்பார். (999) இன்னும் ஒரு படிமேலே சென்று, மலடானோர் உண்ணும் உணவு வேம்பையும், கிரிமியையும் ஒத்ததென்பார். (1000). புலவர் செய்யும் உவமை, புலவர் உரைக்க வந்த கருத்தை விளக்குவதாக அமையும். உவமைமேல் உவமையாகப் பல உவமைகளைப் பெய்து ஒரு கருத்தை விளக்கம் பெற உரைப்பது வண்ணக்களஞ்சியப்புலவர் தம் உத்தியாகக் காண்கிறோம். நான்கு பாடல்களில் எட்டு நோக்கில் பல்வேறு உவமைகளைக் கொண்டு பிள்ளை இல்லாதார் பேரவலத்தைப் புலவர் விரித்துப் பேசுவர்.

வயிற்றுவலியால் உருண்டு புரண்டு வருந்திய நிலையைப் பொருத்தமாக வருணித்து நிறைவாக 'நெருப்பினில் கிருமி போல் துடித்தார்' என முடிப்பர். (1241), இங்ஙனம் சிறிய உவமைகளை நிறைந்த பொருத்தத்தோடு ஆள்வதில் நிகரற்ற புலமை யுடைய வண்ணக் களஞ்சியப் புலவர்,

'இதயம் அழல்வாய் மெழுகு ஆயினர்' (1061),

'குழந்தை நாள் தோறும் 'கலையினம் பிறையெனக்' கவினொடு வளர்ந்தது. (1 37), 'மான் புகு புலியெனப் பதறி' வாயற்றான் (1052), 'கன்னலஞ் சுவையென' நூலின் சுவை தேர்ந்தனர் (1093), 'மாரிபோன்றிடு கரத்தை யுடைய அறபி (1094) 'தெரித்தசீர் மரப்பாவைகள் கிடக்குஞ் சித்திரம் போல்' சாய்ந்தார். (1133)) 'காந்தக் குன்றதன் அருகதாக உற்றிடும் இரும்பு போலத்' (1163) விரகம் மீறிய செய்கு தனா எழுந்து சென்று தரீசாவைக் குறுகினார், அணில்வால் போன்ற தினைக் கதிர் (1106), மரைமலர் கரையின் எய்தி நடந்து செல் வண்ணம் ஒப்பாய் (337) முகியித்தீன் நடந்தார் என வெல்லாம் கருத்தை நறுக்கென விளக்கும் சிறுசிறு அழகிய உவமைகள் வானத்து மீன் எனக் காப்பியம் முழுதும் நிறைந்து கிடக்கின்றன.

நபிகள் நாயகம் அடக்கத்தலத்திலிருந்து அவர்களின் இரண்டு கைகளும் வெளியே தோன்றியதை, இரண்டு பொற்றாமரை உதித்த பாங்கெனத் திருமலர்க் கரம் 'வெளியில் தோன்றியது (433) எனவும், தோன்றிய கரங்களொடு ஆண்டகையின் கரங்கள் இணைந்து பொருந்தியதைத் தாமரை இரண்டொடும் இரண்டதாய் உதித்த சிவந்த தாமரை (434) எனவும் உவமை செய்வார். ஆண்டகையால் மனமாசு நீங்கப் பெற்ற அவையோர் உவமையாக மாணுதல் புரியுஞ் சாணை மணிகள்போலாயினாரே (778) என்பார். மணிப் புயம்

(810), மதிவதனம், வேற்கண் (828) எனவெல்லாம் உவமைத் தொகைகளாகவும் புலவர் ஆள்வர்.

**வருணனை**

புலவர்தம் புலமைத்திறங் காட்டிக் காப்பியச் சுவை கூட்டும் வருணனைத் திறமும் காப்பியத்துக் கவினுற அமைந்து களிப்புத் தருகின்றது. முன்னர் ஆய்ந்த உவமைத் திறத்திலும் வருணனைத் திறம் கலந்து கிடப்பினும் விளக்கத்திற்குச் சில தனித்துக் காண்போம்.

தமிழ்க் காப்பியங்களில் நகரப் படலத்தில் இடம் பெறுவது அல்லாது காப்பியத்தின் உள்ளேயும் சில பெரு நகரங்களின் பகுதிகள் தமிழ்க் காப்பியப் புலவர்களால் வருணிக்கப் படும். இத்தகு நகர வருணனைக்கு நசாறாக்கள் வாழ்ந்த நகரத்திற்கு ஆண்டகை சென்ற காப்பியக் களத்தைப் புலவர் பயன்படுத்திக் கொள்வர் (படலம்-32) (1108-1113). நகரத்துப் பல்வேறு வீதிகளின் செல்வச் செருக்கைப் புலவர் சிறப்புறப் பாடுவர். தேவரும் கம்பரும் செல்வச் செருக்கு மிக்க இத்தகு நகர வீதி களில் காமச்சுவை தோன்றப் பாடுவதைப் புலவர் கருத்தில் கொண்டு இப்பகுதி வருணனையில் அத்தகு பாடல் ஒன்றையும் (1112) புலவர் பாடுவர்.

நகரக் கொடிகள் அசைவதையும் நகரின் செல்வ வளத்தை யும் தற்குறிப்பேற்ற அணி தோன்றப் பாடுவதும் தமிழ்க் காப்பிய மரபாகும். இதனைக் கருத்தில் கொண்டு புலவர், நகரக் கொடி அசைவைப் பாடும்போது ஆண்டகை இந்நகரின் உற்ற அற்புதங் காணப் பல திசையோரும் வம்மின் என வரவேற்பது போல அமைந்தது என்பர் (1108). மணியும் பொன்னும் முத்தும் நிறைந்த நகரச் செல்வ வளம் நோக்கித் தானோ வானவர் இமையா நாட்டம் படைத்தனர் (1110) என்பர். இவ்விரு இடங்களிலும் அமைந்துள்ள தற்குறிப்பேற்ற அணி நயம் அறியத் தக்கதாகும்.

புலவரின் நானில வருணனைத் திறம் முன்னர் காட்டப் பட்டது. காட்சியைக் கண் முன் கொணர்ந்து காட்டும் சிறப்பும், நாடகப் பாங்கும் புலவர் வருணனைத் திறத்தில் இணைந்து கிடக்கக் காண்கிறோம்.

அபாபக்கரில் கம்மாமியின் தாய் தன் மகனைக் காண விரும்பி ஆண்டகையிடம் வந்த காட்சியை வருணிக்கும் புலவர் பாக்களில் (447-450) வயது முதிர்ந்த தாயின் தோற்றம் அற்புத மாக வருணிக்கப் படுகின்றது. வருணனையில் தாயின் முதுமை யும் துயரமும் பல நோக்கில் காட்டப் படுகின்றன. 'விழி ஒளி

மழுங்கி, நாணல் போல் கூந்தல் நரைத்து, நரம்பு தெரிதர, கூனித் தள்ளாடி நடந்து ஆண்டகை முன் வந்தார் எனவும் (447), இருமி, அடிக்கடி இளைப்பொடு களைத்துப் பெருமூச்சு விட்டேங்கினர் எனவும் (448), வயதினும் துயரினும் இளைத்தவர் எனவும் (450) புலவர் பாடுவர்.

கடலில் மகனை இழந்த முதிய தாயின் வருணனையிலும்

''தொடுகரத் தடி முன்னேக தொடர்ந்து கால்நடை பின்னேக
தடியிடு குழியில் கண்ணீர் தங்கிவற் றிடத்தன் சென்னி
உடல்நடு நடுங்க ஓர்நா லடிக்கொரு தரநின் றாறி
கடுகி மென்மெலத்''

தம் மாடத்தின் வாயிலுக்கு வந்ததாகப் பாடுவர் (1413). தடி முன் நடக்கத் தாயார் பின் நடந்ததாகவும் தடியால் நிலத்தில் உண்டாகிய குழியில் சிந்திய கண்ணீர் சற்றுத் தங்கி வற்றியது எனவும், தலையும் உடலும் நடுநடுங்க நடந்ததையும், நாலடிக்கொரு தரம் நின்று இளைப்பாறிப் புறப்பட்டதையும் பாடி இறுதி அடியில் 'கடுகி மென்மெல' என எதிர்ப் பொருள் தரும் இரு சொற்களைப் பெய்வர். 'கடுகி' என்றது தாயின் மன வேகத்தையும் மென்மெல என்றது மனவேகத்துக்குத் தக உடல் ஈடு கொடுக்க முடியாமல் மெல்ல மெல்ல நடந்ததையும் குறிக்கும்.

உருமாறி வந்த படலத்தில் பெண்ணின் கேசாதி பாத வருணனையையும் (1566—1574), பெண்ணின் தோற்றப் பொலிவையும் அழகிய பெண்ணைக் கண்டு வந்து குழுமியோரின் காம வருத்தத்தையும் (1575—1578) காட்டும் புலவர் வருணனைத் திறம் வியக்கத் தக்கது. பெண்ணின் முதுமை வருணனையும் இளமை வருணனையும் ஒப்பிட்டு இன்புறத் தக்கனவாம்.

ஆண்டகையால் அழைக்கப் பெற்று நேரில் வந்து தரிசனம் பெற்ற ஆடை நெய்யும் சேடனின் பக்திப் பரவச நிலையினைப் புலவர் பக்திச் சுவை சொட்ட வருணிப்பர் (1655)

''உடலெல்லாம் புளகம் பூத்தா னுரோமங்கள் பொடிப்ப தானான்
படர்பர வசமே யுற்றான் பகரள வர்தா னந்தக்
கடலிடை மிதந்தா னன்புங் காட்சியுங் கலந்தான் பின்னர்
மடலவிழ் வனசப் பாதம் வாழ்த்துதற் குணர்வு கொண்டான்.'' (1655)

குன்ம நோயாளன் வயிற்று வலியால் துடித்த காட்சியை வருணிக்கும் புலவர் திறம் போற்றத் தக்கதாகும். (1240-1244) நோயுற்றார் துடித்த துடிப்புக் காட்டும் மெய்ப்பாடுகளும் உள்ள வருத்தங் காட்டும் உணர்வுகளும் புலம்பிய சொற்களும்

ஐந்து பாடல்களில் வருணிக்கப் படுகின்றன. வடவையின் கொழுந்து பற்றுதல் போல் ஈரல் பற்றி எரிந்தது எனவும், மேலும் நோயின் கொடுமை சிறிதுசிறிதாக வளர்ந்தது எனவும், அந்நோயால் வயிற்றைப் பற்றினர், வீழ்ந்து உருண்டனர், புரண்டனர், எழுந்தனர், விம்மினர், கண்ணீர் சொரிந்தனர், அலறினர், திகைத்தனர், பின்னர் சோர்ந்து வீழ்ந்து நெருப்பினில் கிருமி போல் துடித்தனர் என முடிப்பர். பின்னரும் உடை மறந்தனர், சூழ்பவர் பற்றிய நாண உணர்வு இழந்தனர், தாம் இருப்பது இறைவனைத் தொழும் பள்ளி என்பதனையும் மறந்தனர் எனவும் பாடித் துன்பம் பொறுக்காது, ''ஐயகோ! இக்கணமே உயிர் பறிக்கும் வானவர் தோன்றி என் ஆவியைப் பறித்திடில் சுகம் அடைவேன்'' எனப் புலம்பினர் எனவும் பாடுவர். இக்காட்சி ஓரங்க நாடக மேடையில் ஒருவர் தோன்றி வயிற்று வலியால் துடிக்கும் காட்சியைக் காண்பது போல் படைக்கப் பட்டுள்ளது.

ஆண்டகைபால் உதவி வேண்டி வந்த ஒரு துறவியின் தோற்றத்தை, அவர் உடலொடு ஒட்டிக் கொண்டிருந்த அவரது உடைமைகளோடு சேர்த்துப் புலவர் பாடும் பாட்டும் வருணனைத் திறங் காட்டுவதாகும் (805).

கருப்பமுற்ற பெண்ணின் உடல் மாறுபாடு, உள்ளப் போக்கு, பிள்ளை பெறும் நேரத்து வேதனை, இவற்றோடு உடலில் தோன்றிய மெய்ப் பாடுகளையும் நுணுக்கம் தோன்றப் புலவர் பாடுவர் (1289—1297).

திருடன் தன் தொழிலில் ஈடுபட்டிருக்கும் செயல் திறத்தையும் உள்ள நிலையையும் மெய்ப்பாடுகளையும் உள்ளது உள்ளபடி புலவர் வருணிப்பர் (956-959). மெத்தென எழுந்து, மெல மெல நடந்து, சத்தமற்று, கதவினில் கரமும் கட்டிலில் விழியும் கருத்து இரு புறத்தினுமாக மூச்சையும் அடக்கித் திருடன் தன் தொழிலில் ஈடுபட்டதாகப் பாடுவர்.

கடலில் கலம் புறப்பட்டுச் செல்லும் காட்சி, (1332-1335) திரும்பி வரும் காட்சி (1350), செய்குதனா இடையராகப் பன்றிக் குட்டிகளை மேய்த்த வருணனை (1169), பூதத்தின் வருணனை (116, 117), வேங்கையின் வருணனை (118, 119), கள்வர்களின் வருணனை (220, 221) ஆகியவற்றில் காட்சிகளை ஓவியமாக்கிக் கற்போர் கருத்துக்குக் கற்பனை விருந்து படைப்பர்.

**மெய்ப்பாடு :**

மனித உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை மிக நுட்ப மாக ஆய்ந்து, அவற்றை எட்டெனெ வரையறுத்து, அவை எட்டும் தோன்றுவதற்குரிய நிலைக் களன்களையும், அவ்வெட்டு வகைச் சுவைகட்கும் ஆட்பட்ட மனிதர் தம் மெய்ப்பாடுகளை யும் தொல்காப்பியர் ஒரு தனி இயலில் விரிவாக ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என மனித உள்ளம் பற்றி நிற்கும் சுவைகள் எட்டாகும். நகைச்சுவை முதற் சுவை யாகும்.

பிறர் தம் இயலாமை, அறிவின்மை, குறைவுடைமை ஆகியவை கண்டு எள்ளி ஏளனம் செய்கின்ற மனப் போக்கில் பிறப்பதே இச் சுவை. பேச்சிலும் எழுத்திலும் இச்சுவையைத் திறம்பட உணர்த்தல் அரிய தொன்றாகும். வண்ணக் களஞ்சியப் புலவரின் பொருவிலாப் புலமைத் திறம் இச் சுவையை எளிதில் உணர்த்த உதவுகின்றது. எல்லோரும் மகிழ்ந்திருக்கும் திருமணப் பந்தலில், தனயனை இழந்த முதிய தாய் ஒருத்தி மட்டும் தனியே புலம்பி, அழுது பிறர் வெறுப்பை யெல்லாம் தேடிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில். அவல உணர்வில் பிறவுணர்வுகளை இழந்து செய்யும் தாயின் செயல்களைக் கண்டு, திருமணப் பந்தலில் குழுமியிருந்த பெரியோரின் சொற்களில் இச்சுவையைப் பொருத்தமாகப் புலவர் உணர்த்துவர். நீ வயது கடந்தபோதே புத்தியையும் கடந்தாயோ? வெறி கொண்டாயா பேய் கொண்டாயா? கடலில் மறைந்து விட்ட மகனைப் பன்னிரு ஆண்டுகட்குப் பிறகு இங்கு தேடி வந்தாயா? மணப்பந்தலில் நின்று கண்ணீர் சிந்தி மங்கலத் தன்மையைச் சிதைக்கின்றாய்! இனியும் நீ இங்ஙனம் செயல் பட்டால் 'இனத்தவர் சினத்து உன் கூனை நிமிர்ப்பர் (1417), ஓர்பால் உறைக' எனப் பேசியோர் பேச்சில் நகைச் சுவையைக் காட்டுவர். மேலும் தாயின் புலம்பற் களத்தைத் தொடர்ந்து காட்டும் புலவர், பன்னி ராண்டுகட்குப் பிறகு தேடிய மகன் திரும்பி விட்ட அதிசயம் உண்மையில் நடந்து விட்டபோது மகிழ்ச்சியில் திளைத்த அன்னை நடந்த நடையை, 'மகிழ்ந்து கூன் நிமிர்ந்து யார்க்கும் முந்துற நடந்தாள்' (1431) என முன் காட்டிய நகைச் சுவை யைத் தொடர்பழகு தோன்ற இங்கு மீண்டும் உணர்த்திப் பந்தரில் இருந்தோர் பேசிய எள்ளற் பேச்சு உண்மையாகி விட்டதை உணர்த்துவர். சினங் கொண்டு யாரும் அடித்து நிமிர்த்தாமலேயே கிழவி கூன் நிமிர்ந்து அனைவர்க்கும் முந்துற

அழகு நடை நடந்தாள் எனக் காட்டும் புலவர் நடை மகிழ்வூட்டும் உணர்ச்சி நடையாகும்.

**அழுகை :**

அழுகை என்னும் அவலச் சுவையைப் புலவர் அற்புதமாக உணர்த்திக் காட்டுவர். புத்திர சோகத்தால் தாய் புலம்பும் உணர்ச்சிப் பிழம்பாக அமைந்த அவலப் பாக்கள், புலவர் திறங் காட்டும். இப்பாக்களின் (1383—1402) ஓசையும் உணர்ச்சியும் உவமையும் கற்பனையும் கலந்து களிநடம் புரிந்து கற்போர் உள்ளங்களைக் களிபேருவகையில் ஆழ்த்து கின்றன.

"நீ யிருக்க நான்போக நீதியுண்டும் பெற்றெடுத்த
தாயிருக்க நீ போகத் தானுண்டோ ஞாயமென்னிற்
காயிருக்கப் பிஞ்சுதிரக் கண்டிருந்து மேபேச
வாயிருக்கு தோவோர் வலதிருக்கு தோமகனே' (1392)

இளமைமிக்க மகனை இழந்த முதிய தாயின் அழுகையுணர்வு காட்டும் இப்பாடலில் புலவர் தனித்துயர்ந்து விளங்குகிறார். நீயிருக்க நானிறந்தால் அது நீதி; ஆனால் தாயிருக்க நீ போவது என்ன நியாயம் என்ற அன்னையின் புலம்பல் அழுகைச் சுவையை முழுமையுறக் காட்டும் அருமையுடையதாகும். புலவர் இவ்விடத்தில் பெய்யும் உவமை அழுகைக்கு அழகு செய்கிறது. காயிருக்கப் பிஞ்சு உதிரக் கண்டிருந்தும் பேச வாய் இருக்கிறதோ என்ற அன்னையின் வினா அழுகைச் சுவையின் வடிவமாகும். இத்தாயின் புலம்பலை இந்திர சித்தனை இழந்த இராவணத் தந்தையின் புலம்பலோடு ஒப்பு நோக்கிக் காண்க காப்பியத்தில் அழுகைச்சுவை தோன்றும் இடங்கள் பல (922—925).

இளிவரற்சுவை தோன்றும் களங்களும் உள. ஆண்டகையிடம் பணியாற்றிய முதிய ஆயன் தொழிலொன்றே கருதி, மறுமைக்கு ஏதும் சேர்க்காது முதுமையெய்தி மேனி மெலிவுறு பிணி வந்தெய்தி ஆவியினி நில்லாது என மன வருத்தமுற்று இருந்த நிலையைப் பாடும்போது இளிவரற் சுவை சொட்டப்பாடுவர் (888-890). அதுபோலவே வயது முதிர்ந்த பல்லில்லாக் கிழவன் ஒருவன், சணல் போன்ற நரைத்திருக்கின்ற முடியுடைய துணைவியோடு, பிள்ளை வரம் பெற ஆண்டகைபால் வந்த காட்சியைப் படைக்கும் புலவர் இளிவரற் சுவை காட்டுவர் (975-978).

மருட்கைச் சுவை தோன்றும் இடங்களும் பல (839, 840, 912, 939, 1535, 381-391, 676).

தோழர் முலப்பர் தம் தலை அறுக்கப் படுவதும் பொருள் கவரப் படுவதுமாகக் கனவு கண்டு எழுந்தபோது அவரிடம் தோன்றிய அச்சச் சுவையைப் புலவர் மெச்சும் வகையில் பாடுவர். கனவு கண்டு உளறி அஞ்சிக் கை கால் உடல் எல்லாம் நடுநடுங்கி, வாயின் நீர் வரண்டு நெஞ்சம் பறை கொட்டித் துடிப்பதாகத் தம் கழுத்தைத் தடவிப் பார்த்தார் எனப் பாடுவர் (649). நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டதை 'நெஞ்சம் பறை கொட்டித் துடித்த' தாகப் பாடுவது அச்சச் சுவையை அருமையுறக் காட்டுவதாகும். ஆயன் புதை குழியில் நிகழும் தொல்லைகளை நினைந்து அஞ்சிய அச்சத்தைப் (897- 899) பாடும்போது மனமெலாம் பதறியேங்கி வாயெலாம் வறழ்ந்து வாடியதாக (889)ப் பாடுவர். மேலும் பலவிடங்களில் (677, 678, 904, 1077, 1083) அச்சச்சுவை தோன்றி நிற்கும்.

பெருமித உணர்வு மனிதர் உள்ளத்தில் தோன்றுவதை இஸ்லாம் தடுத்திருக்கிறது. புலவரும் ஆண்டகை உள்ளத்தில் கூடப் பெருமித உணர்வு இருந்ததாகப் பாடுவதில்லை. இறைவனையும் இறுதித் தூதரையும் அஞ்சிப் பேசும் ஆண்டகையின் சொற்களில் செய்தியில் பெருமிதம் இருந்தாலும் ஆண்டகையின் உள்ளத்திலும் சொற்களிலும் பெருமிதமில்லாமையைப் புலவர் காட்டுவர் (572, 574-577). இப்பாடல்களில் புலவர் பெருமிதச் சுவையைக் காட்டி ஆண்டகையின் உள்ளத்தில் அவ்வுணர்வை அகற்றிக் காட்டுவர்.

ஆண்டகையின் சீடர் அபுல்ஹஸன், செய்கு அப்துற்றஹ்மானின் செருக்கு நிறைந்த பேச்சைக் கேட்டு, ஆண்டகைபால் கொண்ட அன்பின் காரணமாக விளைந்த வெகுளியைப் புலவர் வகையுறக் காட்டுவர். செய்கு அப்துற்றஹ்மானின் சொற்கள் அபுல் ஹஸனார் செவியில் சுட்டதாகவும், விழிகளில் அழல் எழுந்ததாகவும், ஆடையைக் கழற்றிக் கீழே போட்டு விட்டு மல்லாட எழுந்ததாகவும் புலவர் பாடுவர் (823). றாபியத்துல் அதவிய்யாவின் நிறையுணரா மூர்க்கர் 'வெகுளிமீறி' அக்கினிப் பொறிகள் சிந்தி, நயனமுஞ் சிவந்து, சினந்து நின்றதைப் புலவர் சிறப்புறப் பாடுவர். (757). மேலும் வெகுளிச் சுவை சிறக்குமிடங்கள் பல (826, 1081).

கிழவனும் கிழவியும் மலடு நீங்கி ஆண்டகை வேண்டுகோளால் மகப் பேற்றிற்கு இறையருள் வாய்த்தபோது, அவருற்ற மகிழ்ச்சியை 'மகிழ்ச்சி வாருதி குளித்தனர், மிதந்தனர், வள்ளலைப் புகழ்ந்து பாடினர், ஆனந்தக் கண்ணீர்

பொழிந்தனர், இகழ்ச்சி தீர்ந்தனர் என உவகைச் சுவையைப் பாடுவர் (987). கடலிற் சென்று இறந்த மகன் பன்னீராண்டு கழித்து மீண்டு வந்தபோது, தாய் அடைந்த உவகையைப் புலவர் பாடுமிடம் உயர்ந்து விளங்குகிறது. மகனைக்கண்டு ஓடி, கரத்தினில் அணைத்து, கண்களில் மழை நீர் போல விழி நீர் ஓடக் கூக்குரல் வீதி தாக்க'ப் பலவுரைத்துத் தாய் அரற்றி னாள் எனப் பாடுவர் (1424).

மனிதர் உள்ளத்தில் எண் சுவைகளும் தனித்தனியே தோன்றுவதன்றிச் சில நேரங்களில் ஒன்றுக்கு மேலான சுவை கள் கலந்து தோன்றுவதுமுண்டு. ஆண்டகையைக் குழந்தை யாக இருந்தபோது அன்பொடு வளர்த்த செவிலித் தாய், பகுதாதில் ஆண்டகை ஞானச் செங்கோல் நடத்தும் காலத்தில் அங்கு வந்து கண்டபோது, ஆண்டகை கதிரவனை அழைத்த அற்புதத்தைக் கண்டு வளர்த்த தாயுற்ற உணர்வுகளை 'உவகையும் அச்சமும் கொண்டார்' (161) எனப் புலவர் பாடுவர். தான் வளர்த்த பிள்ளை, இன்று பெற்றுள்ள ஆற்றலைக் கண்டு உவகையும், கனலியைக் கரத்தால் பற்றிய செயலைக் கண்டு அச்சமும் அத்தாய் ஒருங்கே யெய்தினார் என்பது புலவர் கருத்து.

**ஆண்டகை வரலாறு குறிப்பதில் சில வேறுபாடுகள்**

ஆண்டகை பிறந்த வரலாறு பாடிய பிற முகியித்தீன் புராணப் புலவர்கள் பாடாத செய்தி ஒன்றை வண்ணக் களஞ்சியப் புலவர் பாடுவர். ஆண்டகை பிறப்பதற்கு முதல் நாள், அன்னை கனவில் சிறு தூசு (துணி) ஒன்றை விழுங்கு மாறு ஆண்டகை ஏவக்கண்டு, அங்ஙனம் விழுங்கப் பெற்ற சிறிய துகிலால் ஆண் குறி மறைத்து ஆண்டகை பிறந்ததாகப் பாடுவர் (124, 125

ஆதார பூர்வமான ஆண்டகை வரலாற்று நூலில் ஆண்டகையின் அங்க அடையாளங்களாகக் கூறப்பட்டவற்றை வண்ணக் களஞ்சியப் புலவர் பாடுவர் (128).

ஆண்டகை ஜெயிலான் நகரில் இளமையில் பள்ளி சென்று கற்று வந்த காலததில் நபிகள் நாயகம் நல்லறத் தோழர் நால்வரோடும் கனவில் வந்து தோன்றி வாயமிழ்தூட்டி வாழ்த்திச் சென்றதை ஆண்டகையே பின்னாளில் உரைத்த தாகப் புலவர் பாடுவர் (206—208). இச் செய்தியைப் பிற புலவர் குறித்திலர்.

பிற புலவர்கள் எண்பது பொற்காசுகளை ஆண்டகைக்கும் மற்றொரு சகோதரருக்கும் பிரித்துக் கொடுத்ததாகப் பாடுவர்,

ஆனால் சகோதரர் பெயர் குறித்திலர். ஆண்டகையின் சகோதரர் பெயர் அப்துல்லா என வண்ணக் களஞ்சியப் புலவர் குறிப்பர் (215).

ஆண்டகையை அன்பொடு வளர்த்த தாயர் ஒருவரையும் அவர் இடுப்பில் குழந்தையாக இருந்தபோது ஆண்டகை ஞாயிற்றை அழைத்து ஏவல் கொண்டதையும் வண்ணக் களஞ்சியப் புலவர் பாடுவர். பிற முகியித்தீன் புராணப்புலவர்கள் பாடிலர் (படலம்—6).

ஆண்டகையின் ஞானாசிரியர் அபுல்வஃபா அவர்களை ஆண்டகை பகுதாதில் கண்டு ஆசி பெற்றதை அனைத்து முகியித்தீன் புராணப் புலவர்களும் பாடுவது போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் பாடுவர். ஆனால் ஆண்டகை சிறுவராக ஜெயிலானில் பள்ளி சென்றபோது அபுல்வஃபா ஆசிரியராக இருந்ததாகப் பாடுவர். இது பொருத்தமில்லை.

ஆண்டகை உபதேசம் பெற்ற ஞானாசிரியர் அபூசகீது எனப் பிற புலவர் போலவே வண்ணக் களஞ்சியப் புலவரும் விரித்துப்பேசுவர். மேலும் ஞானாசிரியர் அபூசகீது அவர்களைப் பற்றிப் பிறபுலவர் பாடாத புதுச்செய்தி ஒன்றையும் வண்ணக் களஞ்சியப்புலவர் பேசுவர் (322—330). மேலும் பிற புலவர்கள், அபூசகீது அவர்கள் அழைத்தும செல்லாமல், பின்னர் கிலிறு நபி வந்து ஆற்றுப்படுத்திய பிறகே, ஆண்டகை ஞானாசிரியர் அபூசகீதிடம் சென்றதாகப் பாடுவர். (சேகுனா—691 பதுறுத்தீன்—564). ஆனால் வண்ணக் களஞ்சியப் புலவர் அபூசகீது அவர்களே ஆண்டகையை உடன் அழைத்துக் கொண்டு பகுதாதில் உள்ள தம் இல்லத்திற்குச் சென்றதாகப்பாடுவர் (337).

செய்குதனா பற்றி வண்ணக் களஞ்சியப் புலவர் பெரும் படலம் ஒன்று படைப்பர். சேகுனாப் புலவர் இச்செய்தியைப் பேசவில்லை. நம் புலவருக்குப் பின்னர் முகியித்தீன் புராணம் பாடிய பதுறுத்தீன் செய்கு சன்ஹா எனப் பெயர் கூறி, வரலாற்றை விரித்துப் பாடுகிறார். வண்ணக் களஞ்சியப் புலவரும் பதுறுத்தீன் புலவரும் பெரும்பான்மையும் ஒத்தே செய்குதனா பற்றிய படலத்தைப் பாடுவர். ஆனால்தண்டிக்கப் பெற்ற செய்குதனா மதியிழந்து, தர்சா என்ற பெண்ணை நாடிச் சென்றதை இருவரும் பாடினும், தர்சா வரலாற்றைப் பாடுவதில் வேறுபடுவர். தர்சாவைப்பேரழகியாகப்பதுறுத்தீன் புலவர் காட்டுவர். நம் புலவரோ அருவருக்கத் தக்கவளாகக் காட்டுவர் (1162). மேலும் பதுறுத்தீன் புலவர் படல முடிவில்

தரீசா இறந்துவிட்டதாகப் பாடுவர். நம் புலவரோ செய்கு தனாவும் தரீசாவும் திருமணம் செய்து வாழுவதாகப் பாடுவர் (1216).

**வரலாற்று முரண்**

வண்ணக் களஞ்சியப் புலவர், றாபியத்துல் அதவிய்யா ஆண்டகைபால் அன்பொடு வந்து, அறவுரை கேட்ட வரலாற்றை விரித்துப் பாடுவர் (படலம்—22). சேகுனா வரலாற்றுக்கு முரணாக ஏதும் பாடாத இயல்பினராதலின் றாபியா பற்றிய செய்தியைப்பாடவில்லை. பதுறுத்தீன் புலவர் இதனை நம் புலவரினும் விரித்துப் பாடுவர். ஆண்டகை காலமும் றாபியா அம்மையார் காலமும் வேறு வேறாகும். இருவரையும் ஒரு காலத்தவராகப் பாடுவது வரலாற்றுக்கு முரணாகும். ஆண்டகை பிறந்தஆண்டு ஹிஜ்ரி471. றாபியத்துல் பசறிய்யா ஆண்டகைஇறப்பதற்கு 420 அல்லது 376 ஆண்டுகள் முன்னர் இறப்பு எய்தினர். [47]

மேலும் ஆண்டகை தம் ஞானப் பொழிவுகளில் இப் பெண் ஞானியின் கருத்துக்களைப் போற்றிப் பேசியுள்ளனர். வரலாற்றுக்கு முரணாகப் பதுறுத்தீன் புலவர், வண்ணக் களஞ்சியப் புலவர் இருவருமே பேசுவது வியப்பளிக்கிறது. வண்ணக் களஞ்சியப் புலவரோ இப்படலத்தில் ஆண்டகை, அவையோரை நோக்கி ஹிஜ்ரி 499 ஆம் ஆண்டில் அவையில் உரைத்தவற்றைக் கூறுமாறு கேட்பது முழு முரணாகும் (760); காரணம் ஆண்டகை அறிவுரை ஆற்றத் தொடங்கியதே ஹிஜ்ரி 521 ஆம் ஆண்டில் ஆகும்.

**புலவர் தனித் தன்மை :**

நூல் வடிவில் நமக்குக் கிடைக்கும் முகியித்தீன் புராணங் களில் வண்ணக் களஞ்சியப் புலவரின் புராணம் சில தனித் தன்மைகளையும் சிறப்புக்களையும் கொண்டிலங்கக் காண் கிறோம். அவற்றுள் தலையாயது ஆண்டகை புகழ் பேசும் தம் காப்பியத்தில் புலவர், ஆண்டகை புகழை ஒரு புது முறை யில் பாடுவதாகும். ஆண்டகை புகழை நபிகள் நாயகத்தின் புகழோடு புலவர் இணைத்துத் தொடர்பு படுத்திப் பாடுவது

முன்னர் விளக்கப் பட்டுள்ளது. ஆண்டகையும் போற்றிய நபிகள் நாயகத்தின் நற்புகழுக்குள் ஆண்டகை புகழை அடக்கிக் காட்டுவது இஸ்லாமியக் கொள்கை நலம் காட்டும் சிறப்புடையதாகும். மேலும் ஆண்டகையை ஞான குருவாக ஏற்று அவர்களின் ஞானப் பாதையைத் தமிழகத்தில் பரப்பிய ஆண்டகையின் திருப் பெயரர் நாகூர் நாதர் ஷாஹுல் ஹமீது ஒலியின் புகழைக் காப்பியத்தின் ஒவ்வொரு படலத்திலும் பாடுவது வண்ணக் களஞ்சியப் புலவரின் தனிப் போக்காகும். வேறு முகியித்தீன் புராணம் எதிலும் பின்பற்றப் படாததும் ஆகும்.

ஒவ்வொரு படல இறுதியில் அல்லது ஒரு சில பாடல்கள் முன்னர் நாகூர் நாதரின் புகழைப் புலவர் பேசுகின்றார். அங்ஙனம் பேசும் போதெல்லாம் நாகூர் நாதரின் மூதாதை முகியித்தீன் ஆண்டகையின் புகழோடு இணைத்தே பேசுவர். ஆகவே புலவரின் இப் புது முறை, காப்பியத் தலைமைக்கு அல்லது தலைவர் புகழுக்கு ஊறு செய்யாமை சிந்திக்கத் தக்க தாகும். நபிகள் நாயகம், அவர்கள் பெயரர் முகியித்தீன் ஆண்டகை, அவர்களின் பெயரர் நாகூர் நாதர் ஆகிய மூவர் புகழையும் இணைத்துப் புலவர் பாடுவது கற்போர்க்குப் பேரின்பம் விளைக்கும் ஒன்றாகும். இப்போக்கு காப்பியம் முழுமையும் காணக் கிடக்கின்றது.

"கல்லொடு பகர்ந்த முகம்மது பெயரர்
காதிறு முகியித்தீன் பெயரர்
செல்லொடு பொருவுங் கரதலர் சாகுல்
கமீதொலி செழும் புகழ் விளங்க" (70)

என மூவர் புகழை ஒருங்கிணைத்துப் புலவர் பேசுவர். மேலும் முகியித்தீன் ஆண்டகையை நபிகள் நாயகத்தின் பெயரர் எனப் பேசும் இடங்களும் (காப்பு-1, 2, 70, 81, 88, 122, 191, 192, 199, 232, 242, 263, 310), முகியித்தீன் ஆண்டகையை சாகுல் ஹமீதொலியின் மூதாதை எனப் பேசும் இடங்களும் (141, 262, 291, 320, 355, 392, 437, 544, 658) மிகப் பலவாகும். நாகூர் நாதர் போற்றிப் புகழும் திருப்பாத முகியித்தீன் என பல இடங்களில் பேசுவர் (309, 417, 474, 601, 819). மேலும்

நாகூர் ஷாஹுல் ஹமீதொலியின் உளளத்தில் வாழும் முகியித்தீன் (663, 819) எனவும் பாடுவர்.

காப்பியப் பாடல்கள் அனைத்துமே ஆண்டகையின் புகழ்ப் பாக்களாக அமைந்திருப்பினும், கடவுள் வாழ்த்துப் படலத்தில் ஆண்டகை புகழ்பாடும் மரபு போற்றி, ஆண்டகை வாழ்த்துத் தனியே பாடுவர் (21). மேலும் ஆண்டகையின் ஞானகுரு அபூசயிது மகுசூமியை வாழ்த்திப் பாடுவதும் கருதத் தக்கதாகும். அவ்வாறே நான்கு பாடல்களில் நாகூர் நாதரின் குருவைப் பாடி, அடுத்து நாகூர் நாதரை வாழ்த்திப் பின்னர் நாகூர் நாதரின் குலந்தரமணியாய்க் தோன்றிய செய்கு யூசுபு அவர்களைப் போற்றி நான்காவது பாடலில் செய்கு யூசுபு அவர்களின் வழியில் வந்தோர் அனைவரையும் வாழ்த்திப் பாடுவர்.

நூலின் உள்ளும் ஷாஹுல்ஹமீதொலியின் குருமுகம்மது கவுது குவாலீர் அவர்களையும் (1179), நாகூர் நாதரின் தந்தையார் ஹஸன் குத்தூசு அவர்களையும் (1096)போற்றிப்பாடுவர். மேலும் நாகூர் நாதரின் தந்தையார் ஹஸன் குத்தூசு அவர்கள் முகியித்தீன் இப்னு அரபி வழி வந்தவர் என்பதையும் மேற் குறித்த பாடலில் குறித்துக் காட்டுவர். முகியித்தீன் இப்னு அறபி பற்றி சேகுனா புலவரோ, பதுறுத்தீன் புலவரோ பாட வில்லை. வண்ணக் களஞ்சியப் புலவர், முகியித்தீன் இப்னு அறபி உதித்தோங்கு படலத்தை விரித்துப் பாடுவர். முகியித்தீன் ஆண்டகைக்கும் நாகூர் ஆண்டகைக்கும் வழிவழி தொடர்புக்கு மூலமாக இருந்தமை பற்றியும் புலவர்க்கு முகியித்தீன் இப்னு அறபிபால் பேரன்பு தோன்றி இருக்கக் கூடும் எனக் கருதலாம். அவ்வாறே, செய்குதனாவின் பிழை பொறுக்க மன்றாடிய அவரது சீடர் பரீதுத்தீன் அத்தாறு அவர்கள் நாகூர் நாதரின் குரு முகம்மது குவாலீர் அவர்களின் ஆறு தலைமுறைக்கு முந்திய மூதாதையாதலின் பரீதுத்தீன் அவர்களைப் பற்றிய குறிப்புக்களையும் விரிவாகப் பேசுகின்றார் (1178—1188).

நாகூர் நாதர்பால் நனி பேரன்பு கொண்ட புலவர் உள்ளம் காப்பியத்தில் பலவிடங்களில் போதரும், புலவர் பல காலம் நாகூரில் வதிந்ததும் நாகூரிலேயே இக்காப்பியம் அரங்

கேற்றப்பட்டதும் அறியத் தக்கதாகும். வண்ணக் களஞ்சியப் புலவர் நாகூர் தருகாவைத் தம்முள்ளன்பு தோன்றக் காப்பியத் தில் சிறக்கப் பேசுவர். 'காலம் யாதுமே வளர்தரு நித்திய கல்யாணக் கோலமார் தருகா' எனப் பன்னெடுங் காலமாக மக்கள் கூட்டம் நாள்தொறும் வந்து விழாக் காணும் தருகாச் சிறப்புப் பேசுவர் (1217, 1279). காப்பிய நிறைவுப் பாடலில் (1704) எந்தமைப் புரந்தருள் 'குத்பு சாகுல் ஹமீது' எனப் புலவர் பாடுவதும், அவர்களின் மூதாதை முகியித்தீன் ஆண்டகை பொருட்டால் இம்மை மறுமைப் பேறுகளை அருளு மாறு இறைவனை வேண்டுவதும் காணத் தக்கதாகும்.

# அடிக் குறிப்பு

1. **தீன் விளக்கம்**, எம். சையிது முஹம்மது ஹஸன் பதிப்பு. முதற் பதிப்பு, 1984, ப. 10.

2. **முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்**, எம். ஆர் . எம். அப்துற்றஹீம், யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை-1, முதற்பதிப்பு, 1957.

3. **இஸ்லாம் வளர்த்த தமிழ்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-1, முதற் பதிப்பு, 1984, ப. 221.

4. **தீன் விளக்கம்**, மு. நூ., ப. 9.

5. The Encyclopaedia of I.lam—Leyden, 1927, Vol II, P. 170.

6. **Muslim Epics in Tamil Literature**, Dr M. M. Uwise, Markazi, Sii Lanka, 1975, P. 276.

7. **இனிக்கும் இராஜநாயகம்**, மு.மு. இஸ்மாயீல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி. டி டி. இ. தரமணி, சென்னை, 600113, ப. 208.

8. **காப்பியத் திறன்**, சோம. இளவரசு, குமரன் பதிப்பகம், சிதம்பரம், 1973, ப. 42.

9. **தமிழ்க் காப்பியங்கள்**, அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18, 1955, பக். 211—213.

10. **இரட்டைக் காப்பியங்கள்**, செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1958, ப. 35.

11. அலங்கார இயல், சூத். 34.

12. **தண்டியலங்காரம்**, கழகம், சென்னை-1. ஐந்தாம் பதிப்பு, 1956, சூத். 91.

13. **சிலப்பதிகாரம்**, வஞ்சிக் காண்டம், வரந்தரு காதை, அடி. 183, 184.

14. எஸ். ஏ. செய்யிது ஹஸன் மௌலானா, சீறாப்புராணம். **இஸ்லாமிய(த்) தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்**, ப. 139.

15. **நவமணி மாலை**, முன் முறைப் படலம், பா. 60, 72.

16. மு. அப்துல்கறீம், **முகியித்தீன் புராணங்கள்—ஓர் ஆய்வு**, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடு, 1985, பக். 69—73.

17. **குத்பு நாயகம்**, ஆயிஷா பதிப்பகம், அதிராம் பட்டினம், முதற் பதிப்பு, 1982, பா. 268.

18. **முகியித்தீன் புராணம்-1**, ஆயிஷா பதிப்பகம், அதிராம் பட்டினம். முதற் பதிப்பு, 1983, பா. 254.

19. ஷை, சேகுனாப் புலவர், பா. 927:
பதுறுத்தீன் புலவர், பா, 1833, 1834.

20. **இஸ்லாம் வளர்த்த தமிழ்**, மு. நூ., ப. 157.

21. **முகியித்தீன் புராணங்கள்—ஓர் ஆய்வு**, மு. நூ., ப. 119.

22. **சீறாப் புராணம்**, கடவுள் வாழ்த்துப் படலம், பா. 16.

23. **இராஜநாயகம்**, கவிஞர் நாச்சி குளத்தார் (பதி.), ஆ. இ., கடவுள் வாழ்த்துப் படலம், பா. 17.

24. சேகுனாப் புலவர், **குத்பு நாயகம்**, மு. நூ., பாக். 982, 990 275, 1167.

25. பதுறுத்தீன் புலவர், **முகியித்தீன் புராணம்—'I'** மு. நூ. பா. 1723.

26. **அல்ஹதீஸ், பெருமானாரின் பொன்மொழிப் பேழை**, இரண்டாம் பகுதி, யுனிவர்ஸல் பப்ளிசர்ஸ், சென்னை-1, முதற் பதிப்பு, 1964, பக். 1134—1137, எண் 2636, 2637, 2638, 2641.

27. **அல்ஹதீஸ், பெருமானாரின் பொன் மொழிப் பேழை**, மூன்றாம் பகுதி, மு. நூ., பக். 1565—1567, எண் 3762—3765.

28. அப்துற்றஹீம், **வலிமார்கள் வரலாறு**, முதல் பாகம் கார்நட் புக்ஸ். சென்னை-1, முதற்பதிப்பு, முன்னுரை, ப. 1.

29. **இஸ்லாமும் அதன் உட்பிரிவுகளும்**, வளர்மதி பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, ஆ. இ., ப. 107.

30. கனி, R. P. M., **மெஞ்ஞானப் பேரமுதம்**. அருள் நூல் பதிப்பகம், சென்னை, 1978, இரண்டாம் பதிப்பு, ப. 225.

31. கனி, R.P.M., **மாபெரும் தவசீலர் முகியித்தீன் ஆண்டகை** முதல் பாகம், சுலைமானியா பப்ளிஷர்ஸ் சென்னை-1, மூன்றாம் பதிப்பு, 1981, ப. 81.

32. **அல்ஹதீஸ், பெருமானாரின் பொன்மொழிப் பேழை**, மூன்றாம் பகுதி, மு. நூ., பக். 1558, எண் 3737.

33. **இலக்கிய விளக்கம்**, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதற் பதிப்பு, 1972, ப. 88.

34. **சீறா ஆய்வுத் திரட்டு**, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையாங்குடி, ஆ. இ., ப. இ., சீறாப்புராணத்தில் தமிழ்ச் சாயல், ப. 2.

35. **சீறாப் புராணம்**, நுபுவத்துக் காண்டம், தசைக் கட்டியைப் பெண்ணுரு அமைத்த படலம், பக். 18—34. சிறப்பாக 28, 29, 30.

பதுறுத்தீன் புலவர், **முகியித்தீன் புராணம்-1**, மு. நூ., பாக். 987, 988, 993, 1401.

36. **சீறா ஆய்வுத்திரட்டு**, மு. நூ. ப. 33.

37. **மஸ்தான் சாகிபு அவர்கள் பாடல்**, B. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1965, ப. 244.

38. மு. அப்துல்கறீம், **முகியித்தீன் புராணங்கள் — ஓர் ஆய்வு**, மு. நூ., பக். 239, 240.

39. **சிலப்பதிகாரம்**, மனையறம் படுத்த காதை, அடிகள்-28, 29.

40. **புறநானூறு** - பா. 20,

41. கம்ப ராமாயணம், நாட்டுப்படலம், பாக். 39, 40, 53.
ஷெ, நகரப்படலம், பாக், 49, 73, 74.
சீறாப்புராணம், நாட்டுப்படலம், பா. 56.

42. கம்பராமாயணம், யுத்தகாரணம், கும்பகர்ணன் வதைப் படலம்,

43. சீறாப்புராணம், மானுக்குப் பிணை நின்ற படலம், பா. 7.

44. கம்ப ராமாயணம், சுந்தர காண்டம், காட்சிப் படலம், பா. 73.

45. கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப்படலம், பா. 4.

46. இஸ்லாம் வளர்த்த தமிழ், மு. நூ., ப. 173;

47. A. J. Arberry, **Muslim Saints and Mystics**, The University of Chicago Press, Chicago P. 39.

# சொல்லடைவு


## அ

அக்யாறு 61
அப்துல்லா 104
அப்துற்றஜ்ஜாக் 10
அப்துற்றஹீம்,
எம். ஆர். எம். 2
அபாபக்கரில் கம்மாமி
25, 29, 30, 42, 97
அபுசாலிகு 6
அபுல் கபுசு 25, 29
அபுல் மஆலி 25, 30
அபுல் முலப்பர் 25, 29, 40
அபுல் வபா 6, 7, 40, 104
அபுல்ஹஸன் 63, 64, 102
அபுல் ஹஸனலி 25, 40, 46
அபூசகீது 7, 63, 104
அபூசயீது மகுசூமி 107
அபூசாலிகு 7
அபூ பக்கர் 59
அல்குர்ஆன் 54
அலி 5, 25, 37, 59
அலி இப்னு வக்கீல் 6
அலி பாதுஷா நாடகம் 3
அவுதாது 61
அவுலியா 33, 60, 65
அற்புதங்கள் 23, 24, 27
அறபி 30, 40, 41, 78
அறபு நாடு 68
அன்வார் 61
அஹ்லுல் பைத் 55

## ஆ

ஆண்டகை
அவைப்பெருமை 8
அற்புதங்கள் 22
ஆன்மிகப் பொழிவுகள் 8
இளமைக் கல்வி 6
உயர்கல்வி 7
குடும்ப வாழ்க்கை 9
சிறப்புப் பெயர்கள் 32
பாதம் 20
பெருந்தவம் 7
முன்னோர் வழி முறை 5
ஆரிது, ஆ. நாஞ்சில் 74
ஆரிபீன் 40

## இ

இசுபகான் 25
இசுறாயீல் 36
இப்றாஹீம் இப்னு அத்ஹம்
59
இபுலீசு 56, 57
இபுறாஹீம் வலியுல்லா 2
இபுனு தைமிய்யா 23
இமாம்கள் 56
இராஜநாயகம் 2, 3, 13
இளங்கோ 11, 16, 79
இளவரசு, சோம. 13
இனிக்கும் இராஜநாயகம் 12
இஸ்மாயீல், மு.மு. 12, 13
இஸ்லாமியத் தென்றல் 12

## ஈ

ஈராக் 7
ஈரான் 4

## உ

உமறுப்புலவர் 23, 33, 53
உவைஸ், எம். எம். 2, 12,
13, 33, 59, 90
உறபா 61

## ஏ

ஏறுபடி (ஏர்வாடி) 1, 2

## ஐ

ஐதுறூசு நயினார்ப் புலவர்
4, 23

**ஒ**

ஒலி 33

**ஓ**

ஓரிறைக் கொள்கை 44

**க**

கஃபதுல்லா 50
கணவி 88, 89
கம்பர் 80
கம்மாது 7
கல்வத் 64
கலிமா 44, 46
கலிறு நபி 21, 28, 36, 39, 54
கவுது 33, 85

**கா**

காத்தமுன் நபியீன் 51
காதரிய்யா தரீக்கா 60, 64, 74

**கி**

கிர்க்கா 63, 64
கிலாபத் 63
கி. வா. ஜ. 14

**கு**

குத்பு 33, 61, 62
குத்பு நாயகம் 2, 12, 13, 16, 62
குர்ஆன்- கிராஅத் 7

**கோ**

கோழியூர் கிழார் 80

**கௌ**

கௌது 61, 62
கௌதுல் அஃலம் 62

**ச**

சதக்கா 49
சலவாத் 58
சறுபு 7

**சா**

சாரங்கபாணி 69

**சி**

சில்சிலா 64

**சீ**

சீறா வண்ணம் 3

**சு**

சுயம்பு 45
சுல்தான் 33
சுன்னத் 47
சூஃபி 10, 75

**செ**

செக்கரிய்யா 7
செய்கு 33, 42, 63, 73
செய்கு அப்துற்றகுமான் 26, 66, 102
செய்கு அபுல் காசீம் 40, 41
செய்கு அலி 25, 41
செய்கு அபுல் ஹஸன் 8
செய்கு உதுமான் 25, 62, 64
செய்கு கபீபு முகம்மது 29, 40, 41
செய்கு கம்மாது 40
செய்குதனா 26, 30, 42, 66, 104, 105, 107
செய்கு பரீது 66
செய்கு யூசுபு 107
செய்யிதுஹஸன்மௌலானா எஸ். ஏ., 16
செயிலான் 4, 5, 6, 55, 69, 103

**சே**

சேக்கிழார் 84
சேகுனாப் புலவர் 1, 2, 4, 23

**த**

தஃப்சீர் 7
தரீகத் 7, 37, 59, 60, 74
தரீக்கா 59, 60
தரீசா 87, 104, 105
தவாபு 50

**தி**

திருமண மரபுகள் 71
திருவள்ளுவர் 77

**தீ**

தீன் விளக்கம் 1, 2, 3

**தெ**

தெ. பொ. மீ. 13

**தொ**

தொழுகை 47, 48, 49

**தௌ**

தௌஹீது 46

**ந**

நகுவு 7
நசாறாக்கள் 26, 97
நசீகத் 7, 63
நபிகள் நாயகம் 5,21, 25, 31, 36, 37, 51, 52, 53, 54, 59, 96
நபுனான் 26
நரகம் 56
நவமணி மாலை 5, 21

**நா**

நாகூர் 2, 106, 107
நாகூர் தருகா 2, 107
நாயகத் தோழர் 55
நானில வருணனை 70

**நீ**

நீப் 4

**நு**

நுகபா 61
நுஜபா 61

**நோ**

நோன்பு 48

**ப**

பகுதாது 6, 7, 19, 25, 29, 31, 58, 103
பதுறுத்தீன் புலவர் 4, 23
பரீதுத்தீன் 107

**பா**

பாத்திமா 5
பாத்திமா (ஆண்டகையின் அன்னை) 6, 22
பாத்திஹா 50
பாவிகம் 15, 16

**பி**

பிக்ஹா 7

**பு**

புதலா 61
புலவர் கோட்டை 2

**ம**

மக்கா 4, 50
மகுறாபில் கறுக்கி 25
மதரசா நிலாமிய்யா 8
மதினா 50
மஸ்தான் சாகிபு 75

மா

மாணிக்கம் வ. சுப. 14

மீ

மீசல் 1

மு

முகம்மது கவுது குவாலீர் 107
முகிய்யித்தீன் 22, 25, 33
முகிய்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி 4, 59
முகிய்யித்தீன் இப்னு அறபி 107
'முகிய்யித்தீன்' பட்டம் 19
முகிய்யித்தீன் புராணப் புலவர் 4, 20, 22, 29
முகுத்தாறு 61
முரீது 63
முரீது பெறுதல் 63
முலப்பர் 29, 36, 102
முன்கர் நக்கீர் 26
முஸ்லிம் தமிழ்ப் புலவர் 67, 75

மூ

மூசா நபி 55

வ

வகுறம் 25
வண்ணக் களஞ்சியப்புலவர் 1
வண்ணக் களஞ்சியம் 2

வா

வானவர் 42, 55

வி

விதிப் பலறக 29, 30

வை

வை. மு. கோ. 76

றா

றாபியத்துல் அதவிய்யா 84, 102, 105
றாபியத்துல் பசரிய்யா 59

ஜ

ஜகாத் 49
ஜன்னத் 47, 56

ஜா

ஜாமிவுல் உசூல் 60

ஜி

ஜின் 42, 47, 57

ஜீ

ஜீலானி 4

ஷ

ஷரிஅத் 7, 37, 59,74

ஷா

ஷாஹுல் ஹமீது 106, 107

ஷை

ஷைகுல் இஸ்லாம் 23

ஸ

ஸகர் 49

ஹ

ஹதீது 7
ஹஜ் 50, 67
ஹஸன் 5
ஹஸன் குத்தூசு 107
ஹஸன் பஸரி 59

ஹா

ஹாபிஸ் 6

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழில் விடுகதைகள் | ... ரூ. 10-20 |
| 2. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார் ? எவர் ? | ... ரூ. 6-00 |
| 3. | தமிழர் தோற்கருவிகள் | ... ரூ. 10-00 |
| 4. | தமிழும் தமிழரும் | ... ரூ. 5-00 |
| 5. | தமிழர் இசை | ... ரூ. 70-00 |
| 6. | ம. பொ. சி.யின் இலக்கிய நூல்கள்-ஓர் மதிப்பீடு | ... ரூ. 20-00 |
| 7. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | ... ரூ. 12-00 |
| 8 | திராவிட மொழி இலக்கியங்கள் | ... ரூ. 35-00 |
| 9. | தமிழ் இலக்கியக் கொள்கை-8 | ... ரூ. 20-00 |
| 10. | தமிழ் இலக்கியக் கொள்கை-9 | ... ரூ. 20-00 |
| 11. | தொல்காப்பியம புணரியல் | ... ரூ. 10-00 |
| 12. | தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் | ... ரூ. 12-00 |
| 13. | தொல்காப்பியம் - விளிமரபு | ... ரூ. 6 00 |
| 14. | தொல்காப்பியம் - பெயரியல் | ... ரூ. 12 00 |
| 15 | தொல்காப்பியம் வினையியல் | ... ரூ. 20-00 |
| 16. | பிரபந்த தீபிகை | ... ரூ. 12-00 |
| 17. | கண் மருத்துவம் | ... ரூ. 50-00 |
| 18. | வர்ம சூத்திரம் | ... ரூ. 10-00 |
| 19. | தன்வந்திரி குழந்தை வாகடம் | ... ரூ. 14-00 |
| 20. | வெள்ளைக்காரன் கதை | ... ரூ. 7-00 |
| 21. | மெய்க்கீர்த்திகள் | ... ரூ. 20-00 |
| 22. | சிந்து இலக்கியம் | ... ரூ. 8-00 |
| 23. | தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | ... ரூ. 6-00 |
| 24. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... ரூ. 12-00 |
| 25. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 1 | ... ரூ. 12-00 |
| 26. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 2 | ... ரூ. 22-00 |
| 27. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... ரூ. 15-00 |
| 28. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | ... ரூ. 10-00 |
| 29. | டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | ... ரூ. 10-00 |
| 30. | தமிழரின் தாயகம் | — ரூ. 10-00 |
| 31. | பாவாணரும் தனித்தமிழும் | ... ரூ. 12-00 |
| 32. | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு | ... ரூ. 10-00 |
| 33. | விவிலியம் - திருக்குறள் - சைவசித்தாந்தம் | ... ரூ. 20-00 |
| 34. | செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள் | ... ரூ. 25-00 |
| 35. | மொழி பெயர்ப்பியல் | ... ரூ. 10-00 |
| 36. | தமிழர் திருமணம் | ... ரூ. 25-00 |
| 37. | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ... ரூ. 35-00 |
| 38. | தமிழ் நாவல்கள் (அகர வரிசை) | ... ரூ. 40-00 |
| 39. | எண்பத்திரண்டில் தமிழ் | ... ரூ. 90-00 |
| 40. | Siddha Medicine (Heritage of the Tamils | ... Rs. 45-00 |
| 41. | Cultural Heritage of the Tamils | .... Rs. 20-00 |
| 42. | Literary Heritage of the Tamils | ... Rs. 50-00 |
| 43. | Papers on Tamil Studies | .... Rs. 15-00 |
| 44. | Tamil Drama | ... Rs. 20-00 |
| 45. | Dr. Mu. Va. | ... Rs. 20-00 |
| 46. | Thiru Murugan | .. Rs. 5-00 |
| 47. | A Study of the Perunkatai | .. Rs. 12-00 |
| 48. | Tamil Writers Directory | ... Rs. 10-00 |
| 49. | Dissertations on Tamilology | ... Rs. 10-00 |
| 50. | Tamil-Text (An-Auto Instructional Course | ... Rs. 25-00 |
| 51. | Siddha Medical Manuscripts in Tamil | ... Rs. 8-00 |
| 52. | Karaikkal Ammaiyar | .... Rs. 6-00 |
| 53. | Heritage of the Tamils-Temple Arts | ... Rs. 50-00 |
| 54. | Tolkappiyam (An English Translation) | ... Rs. 25-00 |